விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 04 செவ்வாய்க்கிழமை (19.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 213

# தமிழருக்குரிய தீர்வு வழங்கப்பட வேண்டும்

## அப்போதுதான் சிங்கள மக்கள் நிம்மதியாக வாழ முடியும்-ஜனாதிபதி



(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தால் மாத்திரமே சிங்கள மக்கள் நாட்டில் நிம்மதியாக வாழமுடியும் என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பில் தான் கவலையடைவதாகவும் தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## இறக்குமதி வரி சீனிக்கு குறைவு

(கொழும்பு)

சீனிக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த வரிக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. இதுவரை சீனி ஒரு கிலோ

24ஆம் பக்கம் பார்க்க....

## போராட்டம் கைவிடப்பட்டது

(முல்லைத்தீவு)

தமது பூர்வீக நிலங்களை விடுவிக்குமாறு கோரி முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் மீண்டும் முன்னெடுக்கவிருந்த உண்ணாவிரதப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

தமது பூர்வீக நிலங்களை விடுமாறு கடந்த மார்ச் மாதம் 24 ஆம்

23ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கையின் அபிவிருத்திகளில் சிங்கப்பூர் இணைந்து கொள்ளும்




(சிங்கப்பூர்)

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் புதிய பொருளாதார அபிவிருத்தி பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூரில் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் ஜனாதிபதி டொனி டெங் கோங்கை நேற்று சந்தித்த

23ஆம் பக்கம் பார்க்க....

## மாணவர்களிடையேயான மோதலை அரசியல் தேவைக்கு பயன்படுத்தாதீர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை பிழையாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பதாக தென்பகுதியைச் சேர்ந்த பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர்,

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர்களிடையோயான மோதல் சம்பவத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவினதும் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

இந்த சம்பவத்தை மக்களை அரசியல் ரீதியாக கவர்ந்து இழுக்கும் கருவியாக பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. இச் சம்பவத்தை இனவாத கோணத்தில் அணுகக்கூடாது. அவ்வாறு செயற்பட்டால் எதிர்காலத்தில் பாதகமான விளைவுகள் ஏற்படக் கூடும். வடக்கு மற்றும் தெற்கைச்

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலைக்கழக மோதல்; ஆராய வருகிறது அமைச்சர் குழு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாகவும் பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகவும் ஆராய்வதற்கு இன்றைய தினம் அமைச்சர் குழு ஒன்று யாழிற்கு வருகை தரவுள்ளது.

அமைச்சர்களான டி.எம்.சுவாமிநாதன், அனுர பிரியதர்சன யாப்பா உள்ளிட்ட அமைச்சர் குழுவினரே வருகை தரவுள்ளனர்.

இவர்கள் இன்று காலை 11 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத

23ஆம் பக்கம் பார்க்க....

### விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த

# சுவிஸ்குமாரின் தாய் நேற்று திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கு நடைபெறும் காலப்பகுதியில் வித்தியாவின் தாயாரை மிரட்டினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் இருந்த சுவிஸ் குமாரின் தாயாரான மகாலிங்கம் தவநிதி என்பவர் நேற்றைய தினம் சிறைச்சாலையில் திடீரென சுகவீனம் ஏற்பட்டு மரணமடைந்துள்ளார்.

இந்த மரணத்தை அடுத்து சுவிஸ்குமாரை பிணையில் விடுதலை செய்யுமாறு பிணை விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் கடந்த வருடம்

24ஆம் பக்கம் பார்க்க....



அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்றையதினம் இடம்பெற்ற போது அங்கு வடம் பிடித்து தேர் இழுக்கும் படையினரைப் படத்தில் காணலாம்

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
பொருளியல் பகுதி-II
கணக்கீடு பகுதி-I

உள்ளே...

## மருத்துவ பீடம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளில் முதற்கட்டமாக மருத்துவ பீட மற்றும் சித்த மருத்துவ மாணவர்களுக்கான பயிற்சியும் பரீட்சைகளும் நாளை புதன்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மருத்துவ பீட மாணவர்களுக்கும் சித்த மருத்துவ அலகு மாணவர்களுக்கும் மருத்துவ பயிற்சியும் மருத்துவ பீட விவசாய பீட பரீட்சைகளும் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் ஏனைய கல்விச் செயற்பாடுகள் மிக விரைவில் ஆரம்பிக்க

24ஆம் பக்கம் பார்க்க....

# இந்தியா, சிங்கப்பூருடன் வர்த்தக உடன்படிக்கை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(சிங்கப்பூர்)

இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவிருக்கும் எட்கா உடன்படிக்கை இந்த வருட இறுதியில் கையெழுத்திடப்படும் எனவும் அடுத்த வருட இறுதியில் சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவிருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரம

23ஆம் பக்கம் பார்க்க....

# பஷில் நேற்று கைது

### முதலாம் திகதி வரை மறியல்



(கொழும்பு)

நேற்றைய தினம் கைது செய்யப்பட்ட முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில்

24ஆம் பக்கம் பார்க்க....

# மரண அறிவித்தல்கள்



## திருமதி இராஜேஸ்வரி கனகசபை

கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி கனகசபை கடந்த 16.07.2016 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - மாரிமுத்து தம்பதியரின் மருமகளும், கனகசபை (இளைப்பாறிய பிரதம சிறாப்பர், யாழ்.மாநகரசபை, நிதி ஆலோசகர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் இராசநாயகம் (நொத்தாரிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் விஜயகுமாரி, சாந்தமலர், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் தெல்லியூர் நடராசா கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜமனோகரன் (முகாமையாளர் - வர்த்தக வங்கி, திருநெல்வேலி), இராஜமோகன் (Software Developer, Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரஜனி (ஆசிரியை - சைவப் பிரகாச வித்தியாலயம், கந்தர்மடம்), சுஜீதா (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியந்தி, ஆரபி, ஆதிரை, ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.07.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மாலை 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 07, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6369

தகவல்: த.கனகசபை (கணவர்)
மற்றும் பிள்ளைகள்.

(சி-5232)

## UNIVERSITY OF JAFFNA
## NOTICE

1. Clinical appointments of Faculty of Medicine and Unit of Siddha Medicine will commence on 20.07.2016

2. The examinations of faculty of Medicine and faculty of Agriculture will also commence on 20.07.2016

- Registrar

(C-5229)

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

துர்முகி வருஷம் ஆனி மாதம் 27-ம் நாள் (11.07.2016) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**பிரம்மஸ்ரீ சண்முகக்குருக்கள் சோமசுந்தர சர்மா**

அவர்களுடைய தசாகக் கிரியைகள் கீழ்க் காணும் தினங்களில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 20.07.2016 | புதன்கிழமை | காலை 10.00 மணி | தசாகம் |
| 21.07.2016 | வியாழக்கிழமை | காலை 10.00 மணி | ஏகோதிஷ்டம் |
| 22.07.2016 | வெள்ளிக்கிழமை | காலை 10.00 மணி | சபிண்டீகரணம் |
| 23.07.2016 | சனிக்கிழமை | காலை 10.00 மணி | கிருஹயக்ஞம் |


அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அதனைத் தொடர்ந்து 23.07.2016 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ள சமாராதனையிலும் (மதிய போசனத்திலும்) தவறாது தாங்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

பிராமணர் தெரு,
தும்பளை, பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

## திருமதி செல்வநாயகியம்மா குமாரையா



வற்றாப்பளையை பிறப்பிடமாகவும் தண்ணீரூற்று மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகியம்மா குமாரையா கடந்த (16.07.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் தா.குமாரையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் உடையார் - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற Dr.சுப்பிரமணியம், மயில்வாகனம், தனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசந்தகுமாரி, விஜயகுமாரி (அவுஸ்திரேலியா), சந்திரகுமாரி (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்), மகேந்திரன் (குமாரையா றேடிங் சென்றர் - தண்ணீரூற்று) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr..பொ.கணேசன், Dr.செ.திவ்வியநேசன் (அவுஸ்திரேலியா), ச.கந்தசாமி (பொறியியலாளர் - லண்டன்), றுசாந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், Dr. தயாபரன், Dr.நிரூஜா, லக்ஸ்மணா, வீஷ்மா, சரவணா, கோபிகா, அர்ச்சயன், அக்சரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (20.07.2016) புதன்கிழமை காலை அவரின் தண்ணீரூற்றிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கற்பூரப்புல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தண்ணீரூற்று,
முள்ளியவளை.

தகவல்:
குடும்பத்தினர்

(சி-5231)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**முத்துச்சாமி பாலசுப்பிரமணியம்**
(மீசை, ராசன்)

தோற்றம் : 25.03.1954 - மறைவு : 19.06.2016

உயிர்தந்து எம்மை
உயர்வடையச் செய்து - இன்று
உயிர்நீங்கி சென்ற எம் அப்பாவே
ஆலமரத்தின் விதைகள் நாம்
ஆலம் வேரே சாய்ந்ததால்
ஆறாத்துயரில் மீளமுடியவில்லையப்பா
வலிசுமந்த இதயத்துடன்
விழிநீர் சொரிகின்றோம்
அப்பாவின் ஆத்மா ஆண்டவனின்
பாதங்களில் இளைப்பாற
வேண்டும் என்று...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (19.07.2016) முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு வீதி,
சித்தன்கேணி.

-குடும்பத்தினர்

(சி-5233)

# ஜனவரி 8 தங்க முட்டையிடும் வாத்தைக் கொன்ற நாளாம்

## கம்மன்பில கண்டுபிடிப்பு

(கொழும்பு)

2015 ஜனவரி 8 ஆம் திகதி என்பது இலங்கையர்களுக்கு அழிக்க முடியாத நினைவு அடையாள தினம் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனவரி 8ஆம் திகதி என்பது முழு இலங்கையர்களும் இணைந்து தங்க முட்டையிடும் வாத்தின் வயிற்றை கிழித்து தங்க முட்டை எடுக்க முயற்சித்த தினம் எனவும் அவர் கூறியுள்ளார்.


கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். நாட்டிற்கு தற்போது தலைவர் ஒருவர் இல்லை. நாடு பலவிதமான நெருக்கடிகளில் சிக்கியுள்ளது.

ஒரு காலத்தில் வீடொன்றில் தங்க முட்டையிடும் வாத்து இருந்தது.

அந்த வாத்து தினமும் ஒரு முட்டையிடும். அந்த முட்டையை விற்றுத்தான் வீட்டினர் வாழ்ந்து வந்தனர்.

அந்த வீட்டினர் ஒருநாள், வாத்தைக்கொன்றால் அதிகளவான தங்க முட்டைகளை ஒரே நாளில் எடுக்கலாம் என எண்ணினர். வாத்தைக் கொன்று முட்டைகளை எடுத்து துரிதமாக முன்னேற அவர்கள் எண்ணினர்.

அப்படி நினைத்து வாத்தைக் கொன்றனர். இப்படியான ஒரு நிலைமை தான் ஜனவரி 8ஆம் திகதி எமக்கு நேர்ந்தது என உதய கம்மன்பில தெரிவித்தார். (இ-10)



(கேலிச்சித்திரம்)



# பசில் மீண்டும் கைது நாமலுக்குப் பிணை



(கொழும்பு)

**முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று மீண்டும் கைது செய்யப்பட்ட நிலையில் சிறை வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பிணையில் விடுவிக்கப்பட்டார்.**

நேற்று நிதி மோசடி விசாரணைப்பிரிவில் முன்னிலையான போதே பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டுள்ளார்.

திவிநெகும நிதி மோசடி தொடர்பிலான விசாரணைக்காக பசில் நேற்று அழைக்கப்பட்டிருந்த போதே கைது செய்யப்பட்டார். இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிமன்றில் நாமலை முன்னிலைப்படுத்தியபோதே பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

70 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பில் நாமல் ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தி அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

(கொழும்பு)

அம்பலாங்கொட பட்டிவத்த - வத்துகென்தர பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த துப்பாக்கி பிரயோகத்தில் வியாபாரி ஒருவரே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் திட்டமிடப்பட்ட கொலையாக இருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளையும் அம்பலாங்கொட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(இ-10)

## கூட்டு எதிர்க்கட்சியின் யாத்திரையை சீர்குலைக்கவே கைது நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி நடத்த உள்ள பாத யாத்திரையை சீர்குலைக்கவே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நாளுக்கு நாள் அரசாங்கம் தனக்கு எதிரான நிலைப்பாடுகளை கொண்டுள்ளவர்களை கைது செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசும் போதே திலும் அமுனுகம இதனை தெரிவித்துள்ளார்.

எப்படியான மோசடியாளராக இருந்தாலும் அரசாங்கத்துடன் இணைந்திருந்தால், அவருக்கு பாதுகாப்பு கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## அதிவேக பாதையை அமைத்தவர் சஜித்

தெற்கு அதிவேகப் பாதையை அமைத்தவர் அமைச்சர் சஜித் பிரேமதாச என புகழாரங்கள் சூட்டப்பட்டுள்ளதோடு, அவரை வாழ்த்தும் பல பதாகைகளும் அம்பாந்தோட்டை, பெலியத்த பிரதேசங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த வாரம் பிரதமருடன் சீனாவிற்கு சென்றிருந்த அமைச்சர் சஜித் பிரேமதாச, சீன ஜனாதிபதியுடன் இணைந்து புகைப்படங்களையும் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த புகைப்படங்களை இணைத்தே "சர்வதேசத்தை வெற்றிகொள்ள தெற்கு அதிவேகப் பாதையை அம்பாந்தோட்டைக்கு கொண்டு வந்த அமைச்சர் சஜித்துக்கு எமது நன்றிகள்"என குறிப்பிட்டு பதாகைகள் தொங்க விடப்பட்டுள்ளன. (இ-10)

## சிங்கப்பூர் - இலங்கை இடையே 5 உடன்படிக்கைகள் கைச்சாத்து

சிங்கப்பூருக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம்ஒன்றை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியேங் லூன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு சிங்கப்பூர் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இராணுவ அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர், இந்த சந்திப்பு நேற்று நடைபெற்றுள்ளது.

சிங்கப்பூர் பிரதமர், ஜனாதிபதி டொனி வேன் ஆகியோருடன் இருதரப்பு முக்கிய விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. இதனையடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான முக்கியமான 5 உடன்படிக்கைகளில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டுள்ளார்.



இரு நாடுகளுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை, கலாசார நிகழ்ச்சி பரிமாற்றம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை, அரச ஊழியர்களின் திறமையை அதிகரிப்பது சம்பந்தமான உடன்படிக்கை, மேல் மாகாண பெருநகர அபிவிருத்தி தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை, தொழிற்கல்வி தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகியன இங்கு கைச்சாத்திடப்பட்டன.

குறித்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட பின்னர், சிங்கப்பூர் பிரதமர் வழங்கிய மதிய போசன விருந்து உபசாரத்தில் பிரதமர் ரணில் உட்பட தூதுக்குழுவினர் கலந்து கொண்டனர்.

பிரதமரின் பாரியார், பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மலிக் சமரவிக்ரம, மங்கள சமரவீர, துஷ்மந்த மித்ரபால உள்ளிட்ட தூதுக்குழுவினர் பிரதமருடன் இந்த பயணத்தில் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## அதிகாரம் பகிரப்படும் -ரவி

கணக்காய்வாளர் நாயகத்திற்கு இருக்கும் அதிகாரங்களை மூன்று பேர் அடங்கிய ஆணைக்குழுவிற்கு வழங்கும் ஏற்பாடுகளுடன் கூடிய புதிய கணக்காய்வு சட்டமூலம் மிக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒரே ஒரு பட்டயக்கணக்காளர் என்ற வகையில், இந்த சட்டமூலத்தை துரிதமாக நிறைவேற்றும் தேவை தனக்கு அதிகமாக இருப்பதாகவும் புதிய சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் அரசாங்க தரப்பு எந்த தாமதத்தையும் செய்யாது எனவும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

ஒரு நபரிடம் இருக்கும் அதிகாரங்களை மூன்று பேருக்கு பகிரும் ஜனநாயக நடவடிக்கையை அரசாங்கம் செயற்படுத்த முயற்சித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)


## அமெரிக்காவில் ராஜித

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொருளாதார மற்றும் சமூக சபை ஆய்வுகளில் கலந்து கொள்வதற்காகவே அமைச்சர் அமெரிக்கா சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன் உலகில் காணப்படும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடல்கள் அங்கு இடம்பெறவுள்ளதாகவும், மேலும் இந்த கலந்துரையாடலுக்கு பல நாடுகளின் சுகாதார பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-10)

# ஐ.சி.சி தரவரிசை யசீர் ஷா முதலிடம்



ஐசிசி டெஸ்ட் பவுலர்களுக்கான தரவரிசையில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் அண்டர்சனை பின்னுக்குத் தள்ளி பாகிஸ்தானின் லெக்ஸ் பின்னர் யசிர் ஷா முதலிடம் பிடித்தார்.

சுமார் 11 ஆண்டுகளுக்குப் பிறகு லெக்ஸ்பின்னர் ஒருவர் ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பிடித்தது குறிப்பிடத்தக்கது. முன்னதாக ஷேன் வோர்ன் முதலிடம் வகித்தார். லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றிக்குக் காரணமான யசிர் ஷா 141 ரன்களுக்கு 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதனையடுத்து முதலிடம் பிடித்தார்.

மேலும் 13 டெஸ்ட் போட்டிகளில் 86 விக்கெட்டுகளை யசிர ஷா இதுவரை வீழ்த்தியுள்ளார். 100 விக்கெட்டுகளை விரைவில் இவர் வீழ்த்தினால், 1896-ம் ஆண்டு இங்கிலாந்து ப்வுலர் ஜோர்ஜ் லோமான் 16 டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அதிவேக 100 விக்கெட்டுகள் சாதனையை யசிர் ஷா முறியடிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்தத் தொடருக்கு முன்பாக தரவரிசை யில் 4-ம் இடத்தில் இருந்தார் யசீர ஷா.

**பவுலர்கள் தரவரிசை:**

யசிர் ஷா, அஸ்வின், ஜேம்ஸ் அண்டர்சன், ஸ்டூவர்ட் பிராட், டேல் ஸ்டெய்ன், ரவீநதிர ஜடேஜா, டிரெண்ட் போல்ட், ஜோஷ் ஹேசில்வுட், மோர்னி மோர்கெல், வெர்னன்பிலாண்டர்.

**டெஸ்ட் பேட்டிங் தரவரிசை:**

ஸ்டீவ் ஸ்மித், கேன் வில்லியம்சன், ஹஷிம அம்லா, ஜோ ரூட், ஏ.பி. டி வில்லிய ர்ஸ், அடம் வோஜஸ், யூனிஸ் கான், டேவிட் வோர்னர், மிஸ்பா உல் ஹக், அஞ்சலோ மத்யூஸ். (க)

# தீபிகா பல்லிகல் சம்பியன்



தேசிய ஸ்குவாஷ் சம்பியன் போட்டியில் ஜோஷ்னா சின்னப்பாவை வீழ்த்தி பட்டம் வென்றார் தீபிகா பல்லிகல்.


மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் 73வது தேசிய ஸ்குவாஷ் சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன. கடந்த 12-ம் திகதி தொடங்கிய போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதில் முன்னணி வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற மகளிர் பிரிவின் இறுதிப் போட்டியில் தீபிகா பல்லிகல், ஜோஷனா சின்னப்பா ஆகியோர் மோதினர்.

முதல் சுற்றை 4-11 என ஜோஷ்னா கைப்பற்றினார். பின்னர் சுதாகரித்துக் கொண்ட தீபிகா 11-6, 11-2, 11-8 என அடுத்தடுத்த செட்களை தனது வசமாக்கினார். இதையடுத்து 3:1 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று தீபிகா பல்லிகல் சம்பியன் பட்டம் வென்றார்.

சம்பியன் பட்டம் வென்ற தீபிகா பல்லிகலுக்கு பரிசுத் தொகையாக ரூ.1.25 லட்சம் வழங்கப்படுகிறது. இவர் கடந்த 2011ம் ஆண்டு தேசிய ஸ்குவாஷ் சம்பியன்ஷிப் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது. (க)

# கரிபியன் பிறிமியர் லீக் ட்ரைடன்ஸ் வெற்றி



கரிபியன் பிறிமியர் லீக் இருபது-20 தொடரில் நேற்று இடம்பெற்ற லூசியா ஸ்வுக்ஸ் மற்றும் பார்படோஸ் ட்ரைடன்ஸ் ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டியில் பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணி 25 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களை பெற்றது.

பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணி சார்பாக அதிரடியாக துடுப்பெடுத்தாடிய பூரன் 4 ஆறு ஓட்டங்கள் 9 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 81 ஓட்டங்களையும், வில்லியர்ஸ் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

லூசியா ஸ்வுக்ஸ் அணி சார்பில் ஜெரோம் டெய்லர் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

174 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய லூசியா ஸ்வுக்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுககளை இழந்து 148 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

லூசியா ஸ்வுக்ஸ் அணி சார்பில் பிளட்சர் அதிகபட்சமாக 20 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பார்படோஸ் ட்ரைடன்ஸ் அணி சார்பில் பார்னெல் மற்றும் ராம்போல் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக லூசியா ஸ்வுக்ஸ் அணியின பூரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# ரொனால்டினோ அதிரடி கோவா அசத்தல் வெற்றி



ரொனால்டினோ அடித்த 5 கோலால் கோவா அணி 7-2 என பெங்களூர் அணியை வீழ்த்தி அசத்தல் வெற்றி பெற்றது

இந்திய உள்ளூர் அணிகள் பங்கேற்று விளையாடி வரும் பிரிமியர் புட்சல் லீக் தொடரில் சென்னையில் நடந்த லீக் போட்டியில் கோவா - பெங்களூர் அணிகள் மோதின.

ஆட்டத்தின் 6வது நிமிடத்தில் கோவா அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டினோ முதல் கோல் அடித்தார். இதற்கு 10வது நிமிடத்தில் பெங்களூர் வீரர் மேக்கிமிலியானோ ஒரு கோல் அடித்து சமன் செய்தார். தொடர்ந்து 15வது நிமிடத்தில் பெங்களூர் அணி வீரர் பியர்ஸ் கோல் அடித்து அசத்தினார்.

இதைதொடர்ந்து கோவா அணி தலைவர் ரொனால்டினோ 19வது நிமிடத்தில் அடுத்தடுத்து 2 கோலடித்து ஹாட்ரிக் சாதனை படைத்தார். தொடர்ந்து 32வது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடித்து அசத்தினார்.

தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய கோவா அணிக்கு மார்ஷல் 33வது நிமிடத்தில் கோல் அடித்தார். 39வது நிமிடத்தில் ரபெல் ஒரு கோல் அடித்தார்.

கடைசி நிமிடத்தில் கோவா அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை வீணடித்த ரொணால்டினோ, ஒரு சில வினாடிகளில் தனது 5வது கோல் அடித்து அசத்தினார்.

ஆட்டநேர முடிவில் கோவா அணி 7-2 என்றகோல் கணக்கில் பெங்களூர் அணியை வீழ்த்தி வெற்றிப்பெற்றது. (க)


# நான் ஒரு கிரிக்கெட் வீரராக வேண்டும் என எனது தந்தை விரும்பினார்-சல்மான்

நாட்டுக்காக தான் கிரிக்கெட் ஆட வேண்டும் என்று தன் தந்தை விரும்பியதாக பாலிவுட் நடிகர் சல்மான் கான் தெரிவித்துள்ளார்.

டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சாவின் Ace Against Odds என்ற சுயசரிதை நூல் வெளியீட்டு விழாவில் பேசிய சல்மான் கூறியதாவது,

என் தந்தை நான் கிரிக்கெட் ஆட வேண்டும் என்று விரும்பினார். அது மிக எளிதாக நடந்திருக்கும், ஆனால் அதிகாலை 5.30 மணிக்கு எழுந்து கிரிக்கெட் பயிற்சி செல்வதென்பது எனக்கு ஒத்துவராது என்பதை புரிந்து கொண்டேன். அது என்னால் முடியா காரியம். கிரிக்கெட் மிகவும் கடினமாகவே இருந்திருக்கும். எனது பயிற்சியாளராக முன்னாள் இந்திய வீரர் சலீம் துரானி நியமிக்கப்பட்டார். முதல் நாள் நான் விளையாடுவதை அவர் பார்த்தார். நான் உண்மையில் நன்றாகவே ஆடினேன். 2-வது நாளும் நான் நன்றாக ஆடினேன். 3-ம் நாள் சலீம் துரானி என் தந்தையை அழைத்து எனக்கு கிரிக்கெட்டில் சிறந்த எதிர்காலம் இருப்பதாகக் கூறினார். என் தந்தை என் ஆட்டத்தைப் பார்க்க வரும்போது நான் வேண்டுமென்றே மோசமாக ஆடினேன்.

பள்ளிக்குச் செல்லும் போது கூட காலையில் எழுந்து தயாராவது எனக்கு பெரும்பாடாக இருந்த நிலையில் கிரிக்கெட் பயிறசி என்பது சாத்தியமில்லாத ஒன்றாயிற்று. காலையில் 8.30 மணிக்கு எழுந்திருக்கும் நான் பள்ளிக்கு குறித்த நேரத்தில் செல்வதே சிரமமாக இருந்தது. நான் உண்மையில் இயக்குநராகவே விரும்பினேன். என்னுடைய குடும்பம் இன்றி நான் சல்மான் கானாக இன்று அறியப்பட்டிருக்க முடியாது. குடும்பத்தினர் குழந்தைகளை ஆதரிக்க வேண்டும். குழந்தைகளை ஆதரிக்காத, அவர்கள்



விருப்பத்துக்கு இணங்காத பெற்றோரை நான் பார்த்திருக்கிறேன், ஆனால் அந்தக் குழந்தைகள் தங்கள் பெற்றோர் தவறு என்பதை நிரூபிக்க விழைந்து வெற்றி பெற்றதையும் பார்த்திருக்கிறேன்.

இவ்வாறு கூறினார் சல்மான் கான். (க)

# கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி



கே.சி.சி விளையாட்டுக்கழகம் நடாத்தும் கூடைப்பந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மாலை 3. 30 மணிக்கு கொக்குவில் இந்துக கல்லூரியில நடைபெறவுள்ளது. நடைபெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சிவன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யமகா விளையாட்டுக் கழகம் ஆடவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு நடைபெறும் ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் சென்றல்லைட்ஸ் விளையாட்டுக் கழகததை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக் கழகம் ஆடவுள்ளது. (க)

# மாணவி வித்தியா கொலை வழக்கில் சகோதரர்கள் பிணைமனு நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவி வித்தியா கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சகோதரர்களான மகாலிங்கம் சசிக்குமார், மகாலிங்கம் சிவானந்தன் ஆகியோரை பிணையில் விடுவிப்பதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் மறுத்துள்ளது. இவர்களின் தாயார் சிறையில் மரணமானதை தொடர்ந்து, அதனை காரணமாக முன்வைத்து குறித்த இருவரையும் பிணையில் விடுதலை செய்யுமாறு அவரது சட்டத்தரணியால் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதவான் இ.சபேசன் முன்னிலையில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. இதன்போது, சுவிஸ்குமாருடைய தாயாரோடு கைதாகி விளக்கமறியலில் உள்ள அவரது உறவு முறையான மற்றொரு குடும்ப பெண்ணையும் பிணையில் விடுதலை செய்யுமாறு கோராப்பட்டது.

மேலும் பிணை அனுமதிக்கான காரணங்களாக, சுவிஸ்குமாருடைய தாயின் மரணம், சட்ட உதவியை பெறுவதற்கான நிலைமை, பணக்கஷ்டம், பேரப்பிள்ளைகளை பராமரிக்க ஆளில்லாமை என பல காரணங்கள் கூறப்பட்டன. இவர்களை பிணையில் விடுவிப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த சட்டத்தரணி கே.சுகாஸ், இவரது மரணத்திற்காக இருவரை பிணையில் விடுவிக்க முடியாது எனவும், சாட்சிகளை பாதுகாக்கும் சட்டத்தில் சாட்சிகளை அச்சுறுத்தியவர்களுக்கு பிணை வழங்கும் நியாயாதிக்கம் இல்லை எனவும், அது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கே உள்ளது எனவும் வாதாடியதோடு, பிரதிவாதி சட்டத்தரணி வழக்கினை திசைதிருப்ப முயல்வதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பிரதிவாதி சட்டத்தரணி கூறியது போல் வித்தியாவின் கொலை மட்டும் இவ்வாறு நடைபெறவில்லை, கிருசாந்தி மற்றும் பலர் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

வித்தியாவின் கொலை வழக்கு எங்கும் நடைபெற்று இருக்காத ஒன்றுதான். அதனால் தான் இலங்கை மட்டுமல்ல வெளிநாடுகளிலும் போராட்டங்கள் நடைபெற்றன. மேலும் சுவிஸ் குமாருடைய தாயாரது இறுதிச் சடங்கில் அவரை அனுமதிப்பது மனிதாபிமான கடைமையாகும்.

எனினும் வித்தியா கொலை செய்யப்பட்டதன் பின்னர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சுவிஸ்குமார் எவ்வாறு கொழும்பு சென்றார் என்பது அவதானிக்கப்பட வேண்டியது. ஆகவே சுவிஸ்குமார் மீண்டும் தப்பித்து சென்று விடக்கூடாது. எனவே கடும் பாதுகாப்புக்களுடனேயே அவர் தாயாரது இறுதிச் சடங்கில் பங்கு பற்ற அனுமதிக்க வேண்டும் என சட்டத்தரணி சுகாஸ் மன்றில் கூறினார். இந்த பிணை விண்ணப்பத்திற்கு பொலிஸாரும் கடும் எதிர்ப்பு தெரிவிக்க, எதிர்வரும் 27 ஆம் திகதி வரை வழக்கினை ஒத்திவைத்தார்.

நாளை மறுதினம் இடம்பெறவுள்ள தமது தாயாரது இறுதிச் சடங்கில் கலந்து கொள் வதற்கு அவர்களது மகனான ஒன்பதாம் சந்தேகநபரான, முகாலிங்கம் சிவான ந்தன், நாலாம் சந்தேக நபரான மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய இருவர் தொடர்பில் முறையான நடைமுறைகளை பின்பற்றி இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள முடியும் என நீதவான் தெரிவித்துள்ளார். (இ-4)

## நான் குற்றமற்றவன் நாமல் எம்.பி.தெரிவிப்பு

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டு நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் கணக்கில் கருத்துப் பதிவேற்றம் செய்துள்ளார்.

இதில், எனக்கு ஆதரவளித்த அனைத்து மக்களுக்கும் நன்றி, நான் என்றும் எப்போதும் உங்களுடன் இருப்பேன், அரசாங்கத்தின் நீதி அமைப்பில் என்னை கேலி செய்வது போல் தோன்றினாலும், நான் குற்றமற்றவன் என்பது விசாரணைகளின் மூலம் தெரியவரும் என பதிவேற்றியுள்ளார். (இ-10)


31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 03 02 1949

உதிர்வு 18 06 2016





அமரர் திரு பொன்னையா சிவபாதம் J.P

(முன்னாள் தலைவர், பனை அபிவிருத்திச் சபை)

கடந்த 18.06.2016 சனிக்கிழமையன்று சிவ பமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் திரு பொன்னையா சிவபாதம் அவர்களின் வீட்டுக்கிருத்தியைகள் 18.07.2016 அவரது இல்லத்தில் நடைபெற்றது. இன்று (19/07/2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் நினைவேந்தல் நிகழ்வும் மதிய போசன நிகழ்வும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள தியாகி அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் (TCT Hall) இடம்பெறவுள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

34, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர் , யாழ்ப்பாணம்

(5253)

குடும்பத்தினர்





பாராட்டி வாழ்த்துகிறோம்

கடந்த 16 ஆம் திகதி BMICH இல் நடைபெற்ற ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலே மாகாணப் பணிப்பாளர் Dr.S.வசீகரன் பொது நிர்வாக முதுமாணி (MPA) பட்டம் பெற்றுள்ளார்.அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பாராட்டுகிறோம்.

Dr. S. வசீகரன்
வடக்கு மாகாணப்பணிப்பாளர்
கால்நடை உற்பத்தி
சுகாதார திணைக்களம்.

வடமராட்சி வடக்கு
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்
சங்கம், பருத்தித்துறை.

(5262)

தலைவர்,
நெறியாளர்கள்,
பொது முகாமையாளர்,
பணியாளர்கள்.


## இராசி பலன்

19.07.2016
(ஆடி 04, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பூரணை பின்னிரவு 5.25மணிவரை
பூராடம் பிற்பகல் 5.06 மணிவரை
சுபநேரம் 10.31-12.01 மணிவரை
இராகுகாலம் 3.01-4.31 மணிவரை
ஆடிச் செவ்வாய், பூரணை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி, மிருகசீடம்<br>இரவு 11.23 மணிக்கு | | சூரி சுக் புத |
| | | | குரு ராகு |
| சந் | சனி செவ் | | |

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மேடம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.

**இடபம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சிரித்துப் பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**மிதுனம்** கல்யாணக் கனவுகள் நனவாகும், பழைய சடங்கு சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை ஏற்படும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** உறவினர்களின் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம். இறைவழிபாட்டுச் சிந்தனை உருவாகும், சுப விரயம் கூடும் நாள் , பயணங்களால் பயனுண்டு.

**சிம்மம்** பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, சிறப்பான நாள்.

**தனுசு** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு .

**விருச்சிகம்** குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், நல்லகாரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், உடன்பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வாகன சுகமுண்டு, அதிகாரிகளின் ஒத்தாசை கிடைக்கப் பெறுவீர்கள்

## வீரமக்கள் தினம் அனுஷ்டிப்பு



தமிழீழ விடுதலைக் கழகத்தினால் வீரமக்கள் தினம் கடந்த 13.07.2016 முதல் 16.07.2016 வரை அனுஷ்டிக்கப்பட்டது. இந் நிகழ்வின் இரண்டாம் நிகழ்வு வலி.மேற்கு. பிர தேசத்தில் வட்டுக்கோட்டை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தினால் நடத்தப்பட்டபோது பயன்தரு மரக்கன்றுகள் நடப்பட்டன. இந் நிகழ்வில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தார். (இ-5-246)

# யாழ்.பல்கலையில் கல்வி நடவடிக்கைகள் சிறப்புடன் இடம்பெற ஒத்துழைக்க வேண்டும்

## விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதி வலியுறுத்து



யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகள் சிறப்புடன் இடம்பெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீட முன்னாள் பீடாதிபதி சி.ஸ்ரீசற்குணராஜா வலியுறுத்தியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். பல்கலைக்கழக வஞ்ஞான பீட முதலாம் வருட மாணவர்களுக்கான விருந்துபசார நிகழ்வில் நடைபெற்ற சம்பவம் பல்கலை சமூகத்துக்கு மிகவும் கவலையைத் தருகிறது.

ஏனெனில் எதிர்பாராத விதமாக மதியபோசனத்துக்கு பின்னர் மாணவர்களுக்கு இடையே இடம் பெற்ற மோதல் விஞ்ஞானபீடத்தை மூடுமளவுக்கு பாரதூரமான விடயமாக மாறியுள்ளது.

இதற்காக அனைத்து சமூகத்தை சேர்ந்தவர்களும் கவலையடைகிறோம். குறித்த நிகழ்வு காலை 9 மணியில் இருந்து மதியம் வரைக்கும் சிறப்பாக நடைபெற்றது. பின்னர் மாணவர்களிடையே ஏற்பட்ட சிறு வாக்கு வாதம் மோதலாக மாறியது.

ஆனால் அது உடனடியாக கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட்டது. இருந்தபோதும் மேலும் சிலமாணவர்கள் விடுதியில் தங்கியிருந்த போது ஏனைய சில மாணவர்கள் கலகத்தை ஏற்படுத்தினர்.இதனால் பல்கலைக் கழக கட்டடத்துக்கு சேதம் ஏற்பட்டது. இதன் காரணமாக பொலிஸாரை அழைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சகல இனத்தையும் சேர்ந்த மாணவர்களும் காயமடைந்திருந்தார்கள். ஒரு சமூகத்தை சார்ந்தவர்களுக்கு மாத்திரம் என்றுகருதிவிடக்கூடாது. மாணவர்களை வீட்டுக்கு அனுப்பிவைக்கும் போது அனைத்து சமூக மாணவர்களையும் ஒன்றாக அனுப்பி வைத்திருந்தோம்.

இச் சம்பவம் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிய இடரைக் கொடுத்துள்ளது. ஒவ்வொரு மாணவரும் வெறுப்புணர்ச்சி இன்றி கல்விச் செயற்பாடுகள் தடைப்படுவதான கவலையுடன் தான் செல்கிறார்கள். கல்வி நடவடிக்கைகளை விரைவில் தொடங்கவேண்டும் என்ற ஆவலுடன் இருக்கிறார்கள். அதற்கு பேரவை தன்னாலான முயற்சியை செயற்படுத்திவருகிறது. வெளி இடங்கள் சமூக வலைத் தளங்களில் வருகின்ற கூற்றுக்கள் சில ஐயங்களை ஏற்படுத்தும்.ஆனால் பல்கலைக் கழகத்தில் அவ்வாறான சூழல் இல்லை.

மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் என்றபடியால் வழக்கு விசாரணைகளுக்கு செல்லாது என நினைக்கிறோம். புரிந்துணர்வு அடிப்படையில் அவர்கள் நடந்து கொள்வார்கள்.

எனவே பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் சிறப்புடன் நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இங்கு அனைத்து மாவட்டங்களிலும் இருந்து மாணவர்கள் வருகிறார்கள்.அவர்களுக்கான பொருளாதார உதவிகளையும் செய்து வருகிறோம்.

எனவே கூடியவிரைவில் அவர்களது கற்றல் செயற்பாடுகளை நிறைவுசெய்வது அவர்களுக்கு சாதகமாக அமையும். எனவே விரைவில் விஞ்ஞான பீட கற்கை நெறிகளை ஆரம்பிக்கவேண்டியது மிகவும் முக்கியமான விடயம்.அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




## சத்திய சாயி சேவா நிலைய பொன்விழா ஆரம்பம் இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவை நிலையத்தின் பொன்விழா ஆரம்பமும் குருபூர்ணிமாவும் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணி வரை இடம்பெறும்.

இதில் வேதபாராயணம், காயத்திரி மந்திரம், பஜனை என்பவற்றைத் தொடர்ந்து பொன்விழா ஆண்டின் செயற்றிட்டங்கள் பற்றிய அறிமுக உரையானது நிறுவனத் தலைவரினால் வழங்கப்படும்.

கலாநிதி ஆறு.திருமுருகன் குருபூர்ணிமாவின் மகிமை எனும் தலைப்பில் விசேட சொற்பொழிவினை ஆற்றுவார். (இ



பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சொண்ட் நிறுவனத்தினால் பருத்தித்துறை வலயக் கல்வி பணிமனையில் நடத்தப்பட்ட போது... (படங்கள்: அராலிச் செய்தியாளர்)

## தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மஹோற்சவம் கடந்த 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.இன்று 19ஆம் திகதி காலை தீர்த்தோற்சவம் இடம்பெற்று இரவு 7மணிக்கு கொடியிறக்கம் இடம்பெறும். (இ

## 50 கதிரைகள் வழங்கல்



வடமாகாண சபை உறுப்பினர் வி.சிவயோகத்தின் 2016 ஆம் ஆண்டின் கன நிதி ஒதுக்கீட்டில் இருந்து சுமார் 50 ஆயிரம் பெறுமதியான 50 கதிரைகள் மற்றும் ஒரு மேசை என்பன வல்வெட்டித்துறை தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் வழங்கப்பட்டது. (இ-60)

## மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதே பொலிஸாரின் கடமையாகும் - தர்மரத்ன



பொது மக்களை துன்புறுத்தாமல் அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதே பொலிஸாரின் கடமை என யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பி.பி. எஸ்.எம்.தர்மரத்ன தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்துக்கான புதிய பொலிஸ்மா அதிபரை வரவேற்கும் நிகழ்வு அண்மையில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

அங்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் வாழும் மக்கள் மிகவும் துன்பத்திலும் துயரத்திலும் வாழ்ந்த மக்களாக இருக்கிறார்கள் என்பதை நான் வந்து சில நாட்களிலேயே தெரிந்து கொண்டேன்.

கடந்த காலத்தில் நடைபெற்று வந்த யுத்தத்தின் போது இரு பகுதியினராலும் அதிகமாக பாதிக்கப்பட்ட மக்கள் இவர்கள் தான். எனவே இவர்களுக்கு பொலிஸார் தற்போது செய்ய வேண்டியது இந்த மக்களை சரியான முறையில் வழிநடத்துவதுடன் அவர்களை துன்புறுத்தாமல் அவர்களுடைய தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்யவேண்டும். பொதுமக்கள் ஒவ்வொருவருடைய ஆவணங்களையும் பாதுகாப்பது பொலிஸாரின் பொறுப்பாகும்.

பொதுமக்களுக்கு நல்ல சேவையை வழங்க வேண்டும் என்றே பொலிஸார் ஒவ்வொருவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். பொலிஸார்-பொதுமக்கள் என்ற வேறுபாடுகள் இன்றி சகோதரத்துவமான சமூகத்தை ஏற்படுத்துவதே எனது நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பொலிஸாரைத்தாக்க முற்பட்ட இரண்டு இளைஞர்கள் கைது!

வாகனத்தை நிறுத்து மாறு சைகை காட்டிய போக்குவரத்துப் பொலிஸாரைத் தாக்க முற்பட்டதாக கூறப்படும் இரண்டு இளைஞர்களை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம்நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்திப் பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் இருந்த போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை மறித்துள்ளனர்.

இதன்போது நிறுத்துவது போல் வந்து விட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்ல முற்பட்ட போது தடுக்க முற்பட்ட போக்குவரத்துப் பொலிஸாரை அவ் இளைஞர்கள் தாக்கமுற்பட்டுஉருண்டுபுரண்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இதில்அல்வாயைச்சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் அங்கேயே கைது செய்யப்பட்டார். தப்பியோடிய மற்றைய இளைஞனான அதே பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் அவரது வீட்டில் வைத்து பின்னர் கைது செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்ட போக்குவரத்துப் பொலிஸார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-60)

## கண்டெடுக்கப்பட்ட அணிகலன் போதனா வைத்தியசாலையில்

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் கைச்செயின் ஒன்று கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். (இ

## பணப்பரிசு வழங்கும் நிகழ்வு

திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி கிளையினால் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அருணலுகணக்கினை வைத்திருக்கும் முதல் மூன்று இடங்களுக்குள் வரும் பாடசாலை மாணவர்களுக்கு பணப்பரிசு வழங்கும் நிகழ்வு இவ் வருடமும் நடத்தப்படவுள்ளது.

இவ் விழா நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு கொமர்ஷல் வங்கியின் திருநெல்வேலிக் கிளையில் இடம்பெறும். (இ

## 21 ஆவது ஆண்டு நிறைவும் அலுவலக நிர்வாக தெரிவும்

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் 2016/2017 ஆம் ஆண்டிற்கான 22 ஆவது அலுவலக நிர்வாகிகள் தெரிவும், 21 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பிரதான வீதி , மாலு சந்தியில் அமைந்துள்ள கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெறும்.இதில் பிரதம விருந்தினர்களாக மாவட்ட 2 ஆவது துணை ஆளுநர் லயன்.தேவா பீற்றர் , அவரது பாரியார் லயன் யசிந்தா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக தில்லை நாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# குற்றமிழைத்த அனைவருமே சட்டத்தின்முன் நிறுத்தப்படுவர்

## பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

**நல்லாட்சியின் கீழ் குற்றம் செய்தவர்கள் நிச்சயமாக சட்டத்துக்கு முன் நிறுத்தப்படுவார்கள் என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.**

குருநாகல்பகுதியில்நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போதே இதனை அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் பொலிஸ்துறை பக்கச்சார்பாக நடப்பதற்கு ஏதுக்கள் இல்லை. எனவே, குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விரைவில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

பொலிஸ்துறை தற்போது வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்காரணமாக குற்றம் செய்யும் வழிமுறைகள் தடுக்கப்படும்.

ஊழல் செய்தவர்கள் சிறைகளுக்கு நிச்சயம் செல்வார்கள். சட்டத்தின்படி அனைத்தும் முன்னெடுக்கப்படும்.

மற்றவர்களின் அட்டவணைப்படி வெள்ளைவான், கறுப்பு வான் மற்றும் சிவப்பு வான் என்பன செயற்படாது என்றும் பூஜித தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் சமூகத்துடன் இணைந்த சேவை ஒன்றை பொலிஸார் முன்னெடுக்கவுள்ளனர்.

இலங்கையில் பயங்கரவாதம் இல்லை. பொலிஸாரை பொறுத்தவரையில் அவர்கள் அரசியல்வாதிகளின் பின்னால் செல்ல வேண்டியதில்லை.

பொலிஸை பொறுத்தவரையில் இன்று அது பொது மக்கள் தேவைகளை நிறைவேற்றவே செயற்படுகிறது என்றும் பூஜித ஜயசுந்தர மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## தடை செய்யப்பட்ட உணவு சுவையூட்டி சந்தையில் இரகசியமாக விற்பனைக்கு

தடை செய்யப்பட்ட உணவு சுவையூட்டிப் பதார்த்தமொன்று இரகசியமான முறையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எம்.எஸ்.ஜீ எனப்படும் மொனோசோடியம் க்ளுடாமேட் எனப்படும் உணவு சுவையூட்டியே இவ்வாறு இரகசியமாக சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது.

அஜினோ மோட்டோ என்ற பெயரில் இலங்கையில் இந்த உணவு சுவையூட்டி விற்பனை செய்யப்பட்டது.

எனினும் இந்த ஆண்டு மாரச் மாதம் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால இந்த உணவு சுவையூட்டியை இலங்கையில் விற்பனை செய்வதற்கு தடை விதித்திருந்தார்.

இந்த உணவு சுவையூட்டி உடலுக்கு தீங்கானது எனவும் புற்று நோயை ஏற்படுத்தும் எனவும் நரம்பு மண்டலத்தை பாதிக்கும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து இலங்கை வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைகளில் பகிரங்கமாக அஜினோமோட்டோ விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது.

சுமார் நாற்பது ஆண்டுகளாக இலங்கையில் இந்த உணவு சுவையூட்டி பயன்பாட்டில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஹோட்டல் உணவு வகை தயாரிப்பின் போது இந்த உணவு சுவையூட்டி இன்றியமையாத ஒன்றாக காணப்பட்டது.

பிரைட் ரைஸ், கொத்து ரொட்டி, டெவல் போன்ற பலவேறு உணவு வகைகளுக்கு அஜினோ மோட்டோ பயன்படுத்தப்பட்டது.

தடை செய்யப்பட்ட இந்த உணவு சுவையூட்டி வேறு வழிகளில் சட்டவிரோதமாக தருவிக்கப்பட்டு புறக்கோட்டை மொத்த விற்பனை நிலையங்களில் இரகசியமாக தொடர்ந்தும் விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு மூடை சுமார் பத்தாயிரம் ரூபாவிலிருந்து அதற்கும் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த உணவு சுவையூட்டி பயன்பாட்டை தடை செய்வதாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஊடகங்களில் அறிவித்த போதிலும் உத்தியோகபூர்வமான அறிவிப்பு விடுக்கவில்லை என சில இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## இலங்கை மருத்துவருக்கு பிரிட்டனின் உயர் விருது

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த மருத்துவர் ஒருவருக்கு பிரித்தானியாவில் அதி உயர் விருது வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் லிலந்த வெதிசிங்கவிற்கு இவ்வாறு விசேட விருது வழங்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் தொடர்பில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றுக்காக இவ்வாறு விருது வழங்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் வழங்கப்படும் Edgar Gentilli Prize என்ற விசேட விருது வழங்கப்பட்டுள்ளது.



டாக்டர் லிலந்த முதுமாணி பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்விற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (இ-10)

## அமெரிக்காவில் மீண்டும் துப்பாக்கிச்சூடு; அமைதி பேணுமாறு ஒபாமா கோரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லூசியானா மாநில தலைநகர் பாட்டன் ரூச்சில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில், அமைதியைப் பேணுமாறு ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள்ளார்.

ஐந்து ஆண்டுகளாக கடற்படை வீரராக பணியாற்றிய ஆபிரிக்க அமெரிக்கரே இந்த தாக்குதலை நடத்தியுள்ளதுடன், குறித்த நபர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் கறுப்பினத்தவரான ஒல்டன் ஸ்ரேலிங் கொலை செய்யப்பட்டதை அடுத்து பாட்டன் ரூச்சில் பதற்றம்



தீவிரமடைந்துள்ளது.

கறுப்பினத்தவரின் கொலைக்கும் தற்போது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டிற்கும் இடையில் தொடர்புகள் உள்ளனவா? என்பது குறித்து இது வரை தெரியவரவில்லை.

அத்துடன் மினசோட்டா மாநிலத்தில் பொலிஸாரால் மற்றுமொரு கறுப்பினத்தவர் கொலை செய்யப்பட்ட நிலையில், நாடளாவிய ரீதியில் இந்த கொலைச் சம்பவங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

கறுப்பினத்தவர்களின் கொலைக்கு பழிவாங்கும் வகையில் டாலாஸ் நகரில் கறுப்பின இராணுவ வீரர் நடத்திய துப்பாக்கி சூட்டில் ஐந்து பொலிஸ் அதிகாரிகள் பலியாகியிருந்தனர்.

இந்த நிலையில் அனைத்து அமெரிக்கர்களும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என குறிப்பிட்ட பராக் ஒபாமா, மொழிப் பிரிவினையை தவிர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (இ-10)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா:19<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/5332 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 15<br>உயரம்: 4’11"<br>தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில்<br>தொ.இ: G/5799 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 30சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:வங்கியியல்/ வங்கியாளர்<br>தொ.இ: B/1949 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 17செவ் 7 இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5802 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 31செவ் 2 இல்<br>உயரம்: 5’9"தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/4028 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 28<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:A/L/கணக்காளர்<br>தொ.இ: G/5803 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 40செவ் 4 இல்<br>உயரம்: 6’தகைமை/தொழில்:A/L கனடா குடியுரிமை<br>தொ.இ: B/4029 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 45செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5807 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005,021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



முல்லைத்தீவு கள்ளப்பாடு வடக்கு முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 15 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற போது...
(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# பொருளாதார மத்திய நிலைய விடயத்தில் ஜனநாயக ரீதியில் முடிவு எட்டப்படும்

## எதிர்க்கட்சித்தலைவர் உறுதிமொழி

வவுனியாவில் அமைக்கப்படவுள்ள பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் முதலமைச்சரே முடிவு எடுப்பார் என எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் கடந்த 16 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெற்றதன் பின்னர் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் நிறுவப்படவுள்ள பொருளாதார நிலையத்தை எங்கு அமைப்பது என்பது தொடர்பில் குழப்பநிலை நீடிக்கிறது. சுகயீனம் காரணமாக கூட்டமைப்பின் இந்தக் கூட்டத்திற்கு வடக்கு முதலமைச்சர் கலந்து கொள்ளமாட்டார் என அறிந்து இரண்டு தினங்களுக்கு முன்னர் அவரை சந்தித்து பேசியிருந்தேன். அப்பொழுது பொருளாதார மத்திய நிலையம் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளேன். அது எங்கு அமைப்பது என்பது தொடர்பில் வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருடன் பேசி முதலமைச்சர் இறுதி முடிவு எடுப்பார். அது விரைவாக எடுக்கப்பட வேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இந்த விடயத்தில் குழப்பம் காணப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இது பற்றி உறுப்பினர்களுடன் பேசி பொது முடிவுக்கு வர முயற்சி எடுப்பார்.

ஓமந்தை, தாண்டிக்குளம், மூன்று முறிப்பு காணிகள் குறித்தும் முதலமைச்சர் தெரிவித்தார். ஓமந்தையே சிறந்தது எனத் தெரிவித்தார். அதில் அமைக்க முடியாது போனால் மூன்று முறிப்பு காணியில் அமைக்க வேண்டும் எனவும் கலந்துரையாடினார். அது நீண்டகால குத்தகைக்கு கொடுக்கப்பட்டதாக கூறப்படுவதாக நீங்கள் தான் சொல்கிறீர்கள். ஆனால் அப்படி கொடுக்கப்படவில்லை, அதனை விடுவிக்க முடியும் என முதலமைச்சர் கூறியுள்ளார். இது தொடர்பில் விரைவாக முடிவு எட்டப்பட வேண்டும்.

நாங்கள் ஏற்கனவே இது தொடர்பில் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி ஜனநாயக ரீதியாக முடிவெடுக்குமாறு கூறியுள்ளேன். நான் ஒரு ஜனநாயகவாதி. ஆயுதம் தூக்கவில்லை. வன்முறைகளை மேற்கொள்ளவில்லை. அதனால் இந்த விடயத்திலும் ஜனநாயக ரீதியாகவே முடிவுகள் எட்டப்பட வேண்டும். விரைவாக முடிவினை முதலமைச்சர் எடுத்து அதனை அறிவிப்பார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இதன்போது வவுனியா விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரிடம் மனு ஒன்றினை கையளித்திருந்தனர். வவுனியா மொத்த மரக்கறி விற்பனை சங்கத்தினரால் தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் எனவும் மனு ஒன்று கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (2-250)




# சாதிக்கும் சந்ததி செயற்றிட்டம் ஊடாக 90 மாணவர்கள் பயனடைவு



மாணவர் நலனோம்பலை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் "சாதிக்கும் சந்ததி" செயற்றிட்டமானது அதன் 19ஆம் கட்டத்தில் தொண்ணூறு மாணவர்களை உள்ளீர்த்துள்ளது.

மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகவும் பாடசாலை இடைவிலகலை முற்றாக நீக்கும் வகையிலும் சாதிக்கும் சந்ததி செயற்றிட்டமானது முல்லைத்தீவில் கடந்த ஈராண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

குறித்த செயற்பாட்டுக்கான பங்களிப்பினை அவுஸ்திரேலியா, கனடா மற்றும் லண்டனில் வசிக்கும் புலம்பெயர் உறவுகள் எண்மர் வழங்கியுள்ளனர்.

பொருண்மிய நலிவுற்ற மாணவர்களுக்கான புத்தகப்பை, குறிப்புநூல்கள், மூடிய காலணி, சீருடை, மிதிவண்டிகள் என மாணவர் நலனோம்பல் முன்னெடுப்புகளை கடந்த கட்டங்கள் ஊடாக மேற்கொண்ட இச்செயற்றிட்டம் அதன் பத்தொன்பதாம் கட்டத்தில் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் வெட்டுப்புள்ளியை விட கூடுதல் புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்த மாணவர்களை ஊக்குவித்துள்ளது.

இச்செயற்றிட்டம் தொடர்பில் ரவிகரன் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமாரசாமி வித்தியாலயம், வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம், குமுழமுனை மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டான் இந்து தமிழ் கலவன் பாடசாலை, முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க.பாடசாலை, செம்மலை மகா வித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், கலைமகள் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம், விசுவநாதர் ஆரம்ப பாடசாலை, வற்றாப்பளை மகா வித்தியாலயம், முள்ளியவளை தமிழ் வித்தியாலயம் ஆகிய பதினாறு பாடசாலைகளைச்சேர்ந்த தொண்ணூறு மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாணவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இயலுமானவரையில் ஊக்குவிக்கப்பட வேண்டிய மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் தொடர்ச்சியான கல்வி முன்னெடுப்பை உறுதிசெய்யும் வகையில் இப்படியான உதவிகளை செய்துவருகிறோம். தொடர்ந்தும் இம்முன்னெடுப்புகளோடு இணைந்திருப்போம் என்று தெரிவித்தார். (2)

# உவரடைந்த நிலப்பகுதியில் ஆமணக்கு செய்கையை மேற்கொள்க!

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் கிராமத்தின் குஞ்சுக்குளம் பகுதியிலுள்ள உவரடைந்த நிலப்பகுதியில், ஆமணக்கு போன்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளுமாறு அக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில், உவரடைந்த 450 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களில், உவர் நிலத்தில் வளரக்கூடிய ஆமணக்கு போன்ற பயிர்களை நாட்டுவதென முடிவெடுக்கப்பட்டது.



ஆனால், அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது, குஞ்சுக்குளம் கிராமம், முழுமையாக உவரடைந்த நிலையில், 40இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இந்நிலையில், இக்கிராமத்தில் வளரக்கூடிய பயிர்களை நாட்டுவதன் மூலம், உவர் நிலத்தினையும் பயனுள்ளதாக மாற்றலாம்.


பூநகரியின் மண்டைக்கல்லாறு வழியாக கடல் நீர் உட்புகுவதன் காரணமாக, பூநகரியின் பல பூர்வீகக் கிராமங்கள் உவரடைவதன் தொடர்ச்சியாக, கிளிநொச்சி - கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளும், முழுமையாக உவரடையும் ஆபத்தினை எதிர்கொண்டுள்ளன.

2000ஆம் ஆண்டில், பூநகரியின் பல்லவராயன்கட்டு பிரதேசம் உவரடையத் தொடங்கியுள்ளதாக அடையாளப்படுத்தப்பட்ட போதிலும், தற்காப்பு முயற்சிகள் எடுக்கப்படாததன் காரணமாக, இக்கிராமம் தற்போது முழுமையாக உவரடைந்துள்ளது. (2)



கிளிநொச்சி சிவநகர் அ.த.க.பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களுக்கான மாதிரிச்சந்தையொன்று கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை பாடசாலையில் நடைபெற்ற போது...
(படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)


கிளிநொச்சி அறிவியல் நகரில் இலங்கை-ஜேர்மன் பயிற்சி நிலையம் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்ட போது....
(படங்கள்:-மல்லாவி,பரந்தன் செய்தியாளர்கள்)

# நாட்டைப் பிரிப்பதற்கல்ல புதிய அரசியல் அமைப்பு

## சமாதானத்தை ஏற்படுத்துவதற்கே

### கிளிநொச்சியில் ஜனாதிபதி தெரிவிப்பு

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் இலங்கை அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட 25 ஏக்கர் காணியில் ஜேர்மன் அரசின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கை-ஜேர்மன் பயிற்சி நிலையம் ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவினால் நேற்று முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி ஜெகான் மோகாட்,சுவிஸ் நாட்டின் தூதுவர் , யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுபபினர்களான மாவை சேனாதிராஜா, தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், மஸ்தான், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே, மாகாண சபை உறுப்பினர்கள் ,அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள், மாணவர்கள்உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நினைவுக்கல்லை நீக்கம் செய்து வைத்த ஜனாதிபதி புதிய கட்டடத்தையும் நாடாவெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து தொழில்நுட்ப கல்லூரியை பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து ஜேர்மன் தூதுவர் உரையாற்றுகையில்,

இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் உள்ள உறவு தொடர்பில் கருத்து தெரிவித்தார். இக்கட்டடம் அமைக்கப்பட்டதன் நோக்கம் தொடர்பிலும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி தலைவர் தனது உரையில், ஜேர்மன் நாட்டைப் போன்று இங்கும் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் அவர் கருத்து தெரிவித்திருந்தார். இதே வேளை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலும் அவர் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பட தக்கதாகும்.

ஜனாதிபதி தனது உரையில் தெரிவிக்கையில், சம்பந்தன் தனது உரையில் நாட்டின் நல்லிணக்கம் பற்றி பேசினார்.உருவாக்கப்படுகின்ற புதிய அரசியலமைப்பு பற்றியும் யாழ். பல்கலைகழகத்தில் இடம்பெற்ற சம்பவம் பற்றியும் பேசியிருந்தார்.அவருடைய உரை நல்லதொரு உரையாகும். அந்த உரைக்குப் பின்னரே நானும் இப்படி பேச வேண்டும் என்று எண்ணுகிறேன்.

கடந்த வருடம் ஜனவரி 8ஆம் திகதி நாட்டு மக்கள் புதியதொரு அரசாங்கத்தை ஏற்படுத்தினார்கள் எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றுக்கொண்டே மக்கள் புதிய அரசாங்கத்தை உருவாக்கினார்கள். 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி எமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் மக்களுக்கு தெரிவித்த அனைத்து விடயங்களையும் நிறைவேற்றியே தீருவோம் என்பதனை நான் இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நாட்டில் சில பேர் புதிது புதிதாக சிலசில இயக்கங்களை உருவாக்குகின்றமையை நான் அறிகிறேன், இந்த புதிய இயக்கங்கள் எல்லாம் எதற்காக என்று நான் அவர்களை பார்த்து கேட்கின்றேன். நான் எப்பொழுதும் ஒரு அடி முன்னால் வைப்பேனே தவிர பின்னால் வைக்கமாட்டேன். எல்லோரும் இந்த நாட்டில் உள்ள பிரச்சினைகள் பற்றி சரியாக தெரிந்து கொள்ள வேண்டும். நாட்டில் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும். இந் நாட்டில் வாழ்கின்ற சிங்கள பௌத்த மக்கள் சந்தோசமாக வாழ வேண்டும் என்றால் ஏனைய மக்களின் பிரச்சினைகளை புரிந்து தெரிந்து செயற்பட வேண்டும். நாட்டில் வடக்கில் உள்ள மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு என்பதனை நாங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். நாட்டில் உள்ள எல்லா இன மக்கள் மத்தியிலும் ஒற்றுமையை ஏற்படுத்த நாம் செய்ய வேண்டிய பல விடயங்களை புரிந்துகொண்டு அந்த அடிப்படையில் செயற்பட வேண்டும். ஆனால் இதற்கு அப்பால் சிலர் கொழும்பிலிருந்து கொண்டு பத்திரிகையாளர் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கொழும்புக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் ஊடக வீரர்களாக மாறிவிட்டிருக்கின்றார்கள். ஆனால் அந்த ஊடக வீரர்கள் வடக்குக்கு வந்து மக்களின் பிரச்சினைகள் என்ன என்பதனை கேட்டறிந்துகொள்வதில்லை. அதே போன்று தென்னிலங்கை மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு சரியாக தீர்த்து வைக்கலாம் என்றும் அவர்கள் சிந்திப்பதில்லை. எனவே இவ்வாறு புதிய புதிய இயக்கங்களை உருவாக்குகின்றவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவது பற்றி தெரிந்துகொள்ளுங்கள். அவர்கள் ஆட்சி செய்த போது எவ்வாறு செயற்பட்டார்கள் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும்.

எனவே நாட்டை சரியான வழியில் கொண்டு செல்ல வேண்டும் என்றால் சரியான வழியில் வழிநடத்த வேண்டும். அந்த நாட்டில் நல்ல நேர்மையான எவ்வித தவறுகள் செய்யாத நல்ல தலைவர் இருக்க வேண்டும்.ஆனால் நாட்டில் இன்று அந்த தேவை இல்லை என்று எண்ணுகிறோம்.கடந்த வருடம் ஜனவரி மாதத்திற்கு பின்னர்நாம் அந்தக்குறையை தீர்ப்பதற்கே பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றோம்.

நாங்கள புதிய அரசியலமைப்பை உருவாக்குவது என்பது நாட்டை பிரிப்பதற்காக அல்ல. எல்லோரையும் ஒன்றாக ஒரே குடையின் கீழ் வைத்து சமாதானமாக வாழக்கூடிய நிலைமையினை உருவாக்கவே புதிய அரசியலமைப்பை ஏற்படுத்துகின்றோம். எனவே நாட்டு மக்கள் மத்தியில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த நான் செயற்படுகின்றேன் என்பதனை கூறிக்கொள்கிறேன்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் நல்லிணக்கத்தை உருவாக்குவேன் என்று கூறியதோடு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையும் ஒழிப்பேன் என்றும் நான் அன்று கூறிய அத்தனை விடயங்களையும் வாக்குறுதியையும் அதே விதத்தில்நிறைவேற்றுவேன்.

எனவே நாம் அனைவரும் உண்மையை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். நேர்மையாக மக்களுக்காக பணிபுரிய வேண்டும். எங்கள் மத்தியில் தவறுகள் இருந்தால் அதனை திருத்திக் கொள்ளவேண்டும்.

இங்கே யுத்தம் நிலவிய காலத்தில் இங்கு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஜேர்மன் நாடு பல வழிகளில் உதவியது. உலகின் கைத்தொழில் துறையில் பலம் வாய்ந்த நாடு என்ற வகையில் நாம் ஜேர்மனியை ஏற்றுக்கொள்கின்றோம். எமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக இப் பயிற்சி நிறுவனத்தை வழங்கி வைத்தமைக்காக ஜேர்மன் நாட்டுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

இந்த நிறுவனம் இலங்கைக்கும் ஜேர்மனுக்கும் இடையில் இருக்கின்ற நட்புக்கு அடையாளமாக விளங்கும். எனவே எமது அரசு எதிர்வரும் காலங்களிலும் ஜேர்மன் நாட்டுடன் இறுக்கமாகவும் நெருக்கமாகவும் பணியாற்றும்.

எமது நாட்டில் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறுகின்ற கலைப்பிரிவு பட்டதாரிகள் வேலை இல்லை என்று கூறி ஆர்ப்பாட்டம், போராட்டங்களை நடத்துகின்றார்கள். அவர்கள் வேலையில்லை என்று கூறிக்கொண்டு இவ்வாறு போராட்டம் நடத்துவதற்கு காரணம் என்ன என்பதனை நாம் அவதானித்தால் அது கல்வி பயின்ற இளம் பட்டதாரிகளின் தவறு அல்ல. நாட்டின் கல்விக் கொள்கையில், கல்வித் திட்டமிடலில் உள்ள தவறே. இந்த தவறை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். எனவே தான் தொழில் வாய்ப்பை வழங்கக் கூடிய கல்வியை வழங்க வேண்டும்.அதற்கு எங்களுடைய கல்விக்கொள்கையிலும் திட்டமிடலிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.




அடுத்ததாக பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்படாத இளைஞர், யுவதிகளுக்கே இவ்வாறான தொழிற் பயிற்சி நிலையங்கள்தேவை. உலக நாடுகளில் பட்டதாரிகளை உருவாக்குகின்ற போது அவர்கள் தங்களுடைய நாட்டுக்கு தேவையான பட்டதாரிகளையே உருவாக்குகின்றார்கள்.

எனவே நாமும் புதிய அரசாங்கம் என்ற வகையில் புதிய தொழில் பயிற்சி துறைகளை ஏற்படுத்துகின்றோம். இந்த நிறுவனங்களில் படிக்கின்ற, பயிற்சி பெறுகின்ற இளைஞர், யுவதிகளுக்கு நல்தொரு எதிர்காலம் காத்திருக்கின்றது.

இந்த பயிற்சிக்கு பின்னர் அவர்கள் வேலை வேண்டும் என்று கூறி போராட்டம், ஊர்வலம் நடத்தவேண்டியதில்லை. இங்கு பெறுகின்ற சான்றிதழ்கள் மூலம் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே இங்கு கல்வி பயில்கின்ற அனைவருக்கும் நல்லதொரு எதிர்காலம் உருவாக வேண்டும் என்று நான் ஆசீர்வதிக்கின்றேன் எனறும் குறிப்பிட்டார்.(2-312-15)


# இறக்கைகள் கொண்டிருந்த மிகப்பெரிய அதிசய டைனோசர்

இறக்கைகள் கொண்டிருந்த மிகப்பெரிய டைனோசர் ஒன்றின் எஞ்சியுள்ள படிமங்களை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சுமார் இரண்டு மீற்றர் நீளத்துடன், மிக வேகமாக ஓடக்கூடிய திறனைக் கொண்டிருந்த இந்த வகை டைனோசர்கள் விலங்குகளை உண்டு வாழ்ந்தவை.

வடகிழக்கு சீனாவில் எரிமலை ஒன்று திடீரென வெடித்ததன் காரணமாக, இந்த உயிரினம் அப்படியே புதையுண்டிருந்தது.





வெலாசிரப்டர் இனத்திற்கு முன்னோடியாக இந்த டைனோசர் இருந்திருக்கலாம்.

இந்த டைனோசருக்கு ஜென்யுவான்லாங் என்று விஞ்ஞானிகள் பெயர் சூட்டியுள்ளனர். ஜின் ஜௌவிலிருந்த அருங்காட்சியகத்திற்கு இந்தப் படிமத்தை அளித்த நபரின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவற்றின் இறக்கைகள், கழுகு, வல்லூறு ஆகிய பறவைகளின் இறக்கைகளை ஒத்திருந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த படிமங்களில் டைனோசரின் இறக்கைகள் தெளிவாகப் பதிந்திருந்தன.

ஆனால், இந்த டைனோசர்கள் பறந்திருக்க வாய்ப்பில்லை என்றும் முட்டைகளை அடைகாக்கவும் காட்சிக்காகவும் பயன்படுத்தியிருக்கலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சுமார் 125 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த இந்த டைனோசர்கள், ஜுராஸிக் பார்க் படங்கள் மூலம் அறியப்பட்ட வெலாசிரப்டர் டைனோசர் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று கருதப்படுகிறது. (இ-10)

## "ஒருநாள் என்னைப்பற்றி அறிவீர்கள்" குற்றவாளி அனுப்பிய குறுஞ்செய்தி

( பாரிஸ் )

நைஸ் நகர தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளி தாக்குதல் நடத்துவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக சிலருக்கு குறுஞ்செய்தி அனுப்பியுள்ளது தற்போது தெரிய வந்துள்ளது.

85 பேரை பலி கொண்ட இந்த தாக்குதலை நடத்திய Mohamed Lahouaiej Bouhlel என்ற நபர் துனிசியா நாட்டை சேர்ந்தவர் ஆவார்.

இவர் தாக்குதல் நடத்துவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் தனது சகோதரனுக்கு செல்பி புகைப்படங்களை அனுப்பியுள்ளார்.

அதில், பிரான்சில் உள்ள கடற்கரையோரம், வாய் நிறைய சிரிப்புடன் நின்று கொண்டு செல்பி எடுத்த புகைப்படத்தை அனுப்பியுள்ளார்.

மேலும் மற்றொரு இரண்டு நபர்களுக்கு, நிறைய ஆயுதங்கள் கொண்டு வாருங்கள். இது நல்லது, என்னிடமும் உபரகணங்கள் உள்ளன என குறுஞ்செய்தி அனுப்பியுள்ளார்.

தற்போது இந்த இரண்டு நபர்களையும் பொலிஸார், காவலில் எடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக 200 பொலிஸ் அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

Mohamed Lahouaiej Bouhlel குறித்து இவனது வீட்டிற்கு அருகில் வசித்த நபர் கூறியதாவது, நான் பயனற்றவன்.

ஆனால் ஒருநாள் என்னைப்பற்றி உங்களுக்கு தெரியவரும் என கூறியுள்ளான்.

மேலும் அற்ககோல், மாட்டிறைச்சி, போதை மருந்து போன்றவற்றிற்கு அடிமையான இவனுக்கு தான் என்ன செய்யப் போகிறோம் என்பதை தெளிவாக அறிந்துதான் செய்துள்ளான் என கூறியுள்ளார்.

இதுபோன்ற பாதகச் செயலில் ஈடுபட்ட Bouhlel, தன்னைத்தானே தீவிரப்படுத்திக்கொண்டிருக்க வேண்டும் அல்லது யாரேனும் ஒருவரால் மூளைச்சலவை செய்யப்பட்டிருக்க கூடும்.

மேலும் அவர் ஒரு இஸ்லாமியராக இருந்தபோதும் ஒருநாள் கூட மசூதிக்கு சென்று தொழுகை செய்தது கிடையாது என தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)




# இராணுவப்புரட்சியால் 290 பேர் உயிரிழப்பு

## 6000 பேர் இதுவரை கைது

(அங்காரா)

துருக்கியில் முறியடிக்கப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 290 ஐ எட்டியுள்ளது என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் இராணுவத்தில் ஒருபிரிவினர் புரட்சியில் ஈடுபட்டனர். மக்களின் உதவியோடு அந்த புரட்சி முறியடிக்கப்பட்டது. இரு தரப்புக்கும் நடந்த பயங்கர போரில் 265 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இது தொடர்பாக 3 ஆயிரம் வீரர்கள் கைது செய்யப்பட்டதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகின.

இந்த இராணுவ புரட்சி முயற்சிக்கு அமெரிக்காவில் வாழும் மத குரு பெதுல்லா குலன்தான் சதி செய்துள்ளார் என குற்றம் சாட்டும் துருக்கி அவரை அமெரிக்கா நாடு கடத்த வேண்டும் என்று வலியுறுத்தியது.

ஆனால் அமெரிக்கா மத குருவை நாடு கடத்த வேண்டுமென்றால், அவர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது.



### 290-ஐ எட்டியது

இந்நிலையில் நீதித்துறை அமைச்சர் பெகிர் போஸ்டாக் கூறுகையில், "இராணுவப்புரட்சி தொடர்பாக 6 ஆயிரம்பேர் கைது செயப்பட்டுள்ளார்கள். இந்த கைது நடவடிக்கை தொடரும்" என தெரிவித்தார்.

துருக்கி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 290 ஐ எட்டியது என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கி வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டு உள்ள செய்தியில் துருக்கியில் முறியடிக்கப்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியில் 290 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. "உயிரிழந்தவர்களில் 100 பேர் சதியாளர்கள் என்றும் 190 பேர் எங்களுடைய மக்கள்," என்றும் வெளியுறவுத்துறை தெரிவித்து உள்ளது.

### மரண தண்டனையை கொண்டுவர பரிசீலனை

இதற்கிடையே துருக்கி நாட்டில் மீண்டும் மரண தண்டனை நிறைவேற்றத்தை கொண்டுவர பரிசீலனை செய்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி எர்டோகன், 'மரண தண்டனையை மீண்டும் அமுலுக்கு கொண்டு வருவதை துருக்கி கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டி உள்ளது." என்று தெரிவித்தார். துருக்கி கடந்த 2014 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிப்பை ரத்து செய்தது.

இதற்கிடையே துருக்கி மீண்டும் மரண தண்டனையை அமுலுக்கு கொண்டு வரும் விவகாரம் ஐரோப்பிய யூனியன் மற்றும் அங்காரா இடையே கூடுதல் பிரச்சினையை உருவாக்கும் என்று கருதப்படுகிறது. (இ-10)

# ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினரை துன்புறுத்திய மக்கள்

## கண்ணீர்விட்ட ஜனாதிபதி








(அங்காரா)

துருக்கியில் ஜனாதிபதி எர்டோகன் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்க்க இராணுவத்தின் ஒரு பிரிவினர் நடத்திய இராணுவ புரட்சியை பொதுமக்கள் வெற்றிகரமாக முறியடித்தனர்.

அப்போது ஏற்பட்ட மோதலில் 290 பேர் உயிரிழந்தனர்.

ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இராணுவ புரட்சியில் ஈடுபட்ட 6 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், பொலிஸாருக்கும், இராணுவீரர்களுக்கும் நடைபெற்ற சண்டையில் தோற்கடிக்கப்பட்ட இராணுவீரர்களை, துருக்கி மக்கள் அடித்து உதைக்கும் புகைப்படங்கள் மற்றும் இராணுவ வீரர்களின் ஆடைகள் களையப்பட்டு, அவர்களின் கைகள் கட்டப்பட்டு Sirnak இல் உள்ள உடற்பயிற்சி கூடத்தில் படுக்கவைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த புரட்சியில் ஈடுபட்டவர்களுக்கு மரண தண்டனை வழங்குவது குறித்து நாடாளுமன்றத்தில் பரிசீலிக்கப்படும் என கூறியுள்ள ஜனாதிபதி எர்டோகன், இதில் உயிரிழந்த மக்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தப்பட்டபோது, அவரும் கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

மேலும், துருக்கி நாடு ஒற்றுமையோடு இருக்க வேண்டும் என தான் ஆசைப்படுவதாகவும், இந்த இராணுவ புரட்சிக்கு பின்னணியில் நிச்சயம் பெதுல்லாவே காரணமாக இருக்கிறார் என்பது எனக்கு தெளிவாக தெரியும் எனவும் தெரிவித்தார். (இ-10)

# மத்திய பிரதேசத்தில் கனமழை வெள்ளத்தில் சிக்கி 35பேர் பலி

(டில்லி)

**மத்திய பிரதேச மாநிலத்தில் கடந்த இருவாரங்களாக பருவ மழை தீவிரமடைந்துள்ளது. இதனால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரை 35 பேர் பலியாகியுள்ளனர்.**

மத்திய பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதியிலிருந்து பருவமழை தீவிரமடைந்துள்ளது. மொத்தமுள்ள 51 மாவட்டங்களில் 23 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 8 ஆயிரம் பேரின் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அவர்கள் 27 தற்காலிக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழை வெள்ளத்தால் 2ஆயிரத்து 500 வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன.

33 மாவட்டங்களில் சராசரியை விட அதிக மழை பொழிந்துள்ளது. 14 மாவட்டங்களில் சராசரியாகவும், 4 மாவட்டங்களில் சராசரியை விடக் குறைவாகவும் மழை பொழிந்துள்ளது.

தலைநகர் போபாலில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு வெள்ளத்தால் 5 பேர் பலியாகியுள்ளனர். பன்னா, ஜபல்பூர் மாவட்டங்களில் தலா 7 பேர் உயிரிழந்துள்ளனர். ரேவா மாவட்டத்தில் தம்ஸா நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி, 5 இளைஞர்கள் உட்பட 9 பேர் காணாமற் போய்விட்டனர்.

உத்தரகாண்டில் கனமழைக்கு 5 பேர் பலியாகியுள்ளனர். கனமழை காரணமாக அனைத்து ஆறுகளிலும அபாய அளவைத்தாண்டி வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. பத்ரிநாத், கேதார்நாத் உள்ளிட்ட ஆலயங்களுக்குச் செல்லும் பாதைகள் வெள்ளத்தால் தடைப்பட்டுள்ளன.

கனமழை காரணமாக, கார் தடுமாறி 200 மீற்றர் பள்ளத்தில் விழுந்ததில் 3 பேர் உயிரிழந்தனர். நந்தகான் பகுதியில் மரம் விழுந்ததில் 2 பேர் உயிரிழந்தனர். உத்தம்சிங் நகர், ஹரித்வார், டேராடூன் மாவட்டங்களில் அதிகபட்ச மழை பெய்து வருகிறது. அடுத்த 24 மணி நேரத்துக்கு கனமழை நீடிக்கும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. சில இடங்களில் மழையால் வீடுகள் இடிந்துள்ளன.

ரூர்கி பகுதியில் 318 மி.மீ மழை பதிவாகியுள்ளது. லக்ஸரில் 150 மி.மீ, ஹரித்துவார் 101.8 மி.மீ., அல்மோரா 103.2, டேராடூன் 74.5 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

ரத்மா நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பதேதி கிராமத்தில் கால்நடைகளும் குடிசைகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. தேசிய பேரிடர் மேலாண்மை படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-10)

**3 இலட்சம் பேர் பாதிப்பு; 8 ஆயிரம் பேர் வீடிழப்பு**



# இலங்கை அகதி பலி கரும்புலிக்கு காயம்

தூத்துக்குடி - மதுரை நெடுஞ்சாலையில் எட்டயபுரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கை அகதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எட்டயபுரம் அருகேயுள்ள தாப்பாத்தி அகதிகள் முகாமைச் சேர்ந்த 34 வயதான ராஜ்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வர்ணம் பூசும் தொழிலாளியான கரும்புலி என்பவருடம் ராஜ்குமார் கடந்த சனிக்கிழமை மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

இதன்போது இருக்கன்குடியிலிருந்து எட்டயபுரம் நோக்கிப் பயணித்த வான் ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

இதில் சம்பவ இடத்திலேயே ராஜ்குமார் உயிரிழந்துள்ளார். அத்துடன், பலத்த காயங்களுக்குள்ளான கரும்புலி என்பவர் கோவில்பட்டி அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாசார்பட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# இந்தியா என்.எஸ்.ஜி.உறுப்பினராவது எளிதில் எட்டக்கூடிய விடயமல்ல- சீனா



(பீஜிங்)

என்.எஸ்.ஜி. எனப்படும் அணுசக்தி விநியோக நாடுகள் குழுமத்தில் இந்தியா இடம்பிடிப்பது எளிதில் நடக்கக்கூடிய விடயமல்ல என்று சீனா தெரிவித்துள்ளது. அணுசக்தி வணிகத்தில் ஈடுபடவும், அணு தொழில்நுட்ப ஏற்றுமதி செய்யவும் என்.எஸ்.ஜி. என்னும் அணுசக்தி விநியோக நாடுகள் குழுவில் இந்தியா உறுப்பினர் ஆகவேண்டும். ஆனால் இதில உறுப்பினராக சேருவதற்கு என்.பி.டி. என்னும் அணு ஆயுத பரவல் தடை உடன்பாட்டில் கையெழுத்திட வேணடும். இந்தியா இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடாத நாடு என்பதால், என்.எஸ்.ஜியில் சேர்ப்பதற்கு சீனா முட்டுக்கட்டை போட்டது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய வல்லரசு நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு அளித்தாலும், என்.எஸ்.ஜி. அமைப்பில் உள்ள 48 நாடுகளும் ஏகோபித்த ஆதரவை வழங்கினால் மட்டுமே, உறுப்பினர் ஆக முடியும். சியோலில் கடந்த மாதம் நடந்த என்.எஸ்.ஜி. பேரவை கூட்டத்தில், இதே நிலைப்பாட்டை சீனாவும், சில நாடுகளும் வலியுறுத்தியதால் இந்தியாவின் விருப்பம் நிறைவேறாமல் கை நழுவியது.

இதனால், இந்த விவகாரத்தில் இந்தியாவிற்கும், சீனாவிற்குமிடையே கருத்து வேறுபாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், என். எஸ். ஜி.எனப்படும் அணுசக்தி விநியோக நாடுகள் குழுமத்தில் இந்தியா இடம்பிடிப்பது எளிதில் நடக்கக் கூடிய விடயமல்ல என்று சீனா தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்தியாவிற்கான சீன தூதர் லியு ஜிங்சாங் தெரிவிக்கையில்,

என்.எஸ்.ஜி. உறுப்பினராகும் விவகாரத்தில் இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையே வேறுபாடு இருப்பதாக நிலவி வரும் வதந்திகளை நீக்க வேண்டும். இது சாதாரண விவகாரம் அல்ல. அதிக அளவில் விவாதங்கள் தேவைப்படுகின்றன.

இந்தியா என்.எஸ்.ஜி உறுப்பினராவது எளிதில் நடக்கக் கூடிய விடயம் அல்ல. இது புதிய உறுப்பினர்கள் என்.எஸ்.ஜியில் சேருவது தொடர்பான விவகாரம். அது முறைப்படி செயல்முறைகள் பின்பற்றப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10)

# அடுக்குமாடி குடியிருப்பில் மின்தூக்கி விழுந்து நொறுங்கியதில் 8 பேர் பலி!



(பீஜிங்)

கிழக்கு சீனாவில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருந்த போது, அங்கிருந்த மின் தூக்கி (லிஃப்ட்) ஒன்று 18 மாடிகளை கடந்து தரையில் விழுந்து நொறுங்கியது.

மின் தூக்கிக்குள் இருந்த 8 பேரும் உயிரிழந்தனர். ஷான்தொங் மாகாணத்தில் உள்ள லொங்கோவ் நகரில் இந்த விபத்து நடைபெற்றுள்ளது.

சில முன்னேற்றங்கள் உள்ள போதிலும், கட்டுமானப் பகுதிகளில் பாதுகாப்பு விதிமுறைகள் புறக்கணிக்கப்படுவது சீனாவில் வாடிக்கையாகவுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-10)

# 2050 ஆம் ஆண்டில் பத்தில் ஒருவருக்கே தண்ணீர் கிடைக்கும்

எதிர்வரும் கால கட்டங்களில், தண்ணீருக்கு கடும் தட்டுப்பாடு வரும். 2050 ஆம் ஆண்டில் இந்தியா வில் உயிர் வாழும் பத்து பேரில், ஒருவருக்கு மட்டுமே தண்ணீர் கிடைக்கும். மற்றவர்களுக்கு தண்ணீர் கிடைக்காது என மத்திய சிறு மற்றும் குறுந்தொழில் இணை அமைச்சர் கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் அருகிலுள்ள கெட்டிசெவியூர் அருகே பனை சீனி மற்றும் பனை பொருட்கள் ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம் என்ற தனியார் நிறுவனம் இயங்கி வருகிறது.

இந்நிறுவனம் பதனீரை கொள்முதல் செய்து, பனை சீனி (சர்க்கரை) தயாரிக்கிறது. மத்திய சிறு மற்றும் குறுந்தொழில் இணை அமைச்சர் கிரிராஜ் சிங், இந்நிறுவனத்தை நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

அப்போது அவர் கூறியதாவது, பனை சார்ந்த பொருட்களை பயன்படுத்தினால், உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கும். இவற்றை மதிப்பு கூட்டி, சீனி உற்பத்தியும் செய்யலாம். இயற்கையாக நமக்கு மழை நீர் மூலம் கிடைக்கும் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

எதிர்வரும் கால கட்டங்களில், தண்ணீருக்கு கடும் தட்டுப்பாடு வரும். 2050 ஆம் ஆண்டில் இந்தியாவில் உயிர் வாழும் பத்துப் பேரில், ஒருவருக்கு மட்டுமே தண்ணீர் கிடைக்கும். மற்றவர்களுக்கு தண்ணீர் கிடைக்காது.

அந்தளவுக்கு தண்ணீர் தட்டுப்பாடு வரும். சீனி ஆலைகளில், தண்ணீர் அதிகமாக செலவாகும். ஆனால், பனை சார்ந்த பொருட்களில், சீனி தயாரிக்க அதிகம் தேவைப்படாது. காமராஜர் முதல்வராக இருந்தபோது, 1967 இல் குன்னத்தூரில் பதனீர் மற்றும் சீனி ஆலை தொழிலாளர்களுக்கு நலவாரியம் ஏற்படுத்தினார்.

இன்றைய சூழலில், கரும்பு சீனி ஆலைகளின் ஆதிக்கத்தாலும், மக்களின் மோகத்தாலும், பனை தொழில் நலிவடைந்து விட்டது. இந்த தொழிலை மீண்டும் புதுப்பிக்க வேண்டும். பனை தொழில் குறித்து விரிவான அறிக்கை தயாரித்து, தமிழக முதல்வரிடம் கூறி இத்தொழில் புத்துயிர் அளிக்க பரிந்துரை செய்வேன் என தெரிவித்துள்ளார். (இ-10)

# துருக்கியில் இராணுவப் புரட்சி

# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்காவுக்கு அருகதையில்லை

(கொழும்பு)

**டிலான் பெரேரா சுட்டிக்காட்டு**



**துருக்கியில் இராணுவப் புரட்சி ஏற்படுவதற்குக் காரணமான அமெரிக்காவுக்கு, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் தகுதி கிடையாது என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் போர் முடிந்து விட்டது. தற்போது பயங்கரவாத தடைச் சட்டம் நடைமுறையில் இல்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு கோருவதற்கு அமெரிக்காவுக்கு தகுதி கிடையாது. துருக்கியில் இராணுவப் புரட்சி ஏற்படுவதற்கு காரணமான அமெரிக்கா, இலங்கையின் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாக எவ்வாறு கேள்வியெழுப்ப முடியும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுப்பதை எங்களால் நிராகரிக்க முடியாது. ஏனெனில் அனைத்துலகத்துக்கு கொடுத்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றவில்லை.

ஆனால், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஆட்சிக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## பாராளுமன்றில் பட்ஜெட் அலுவலகம்

பாராளுமன்றில் வரவு- செலவுத் திட்ட அலுவலகமொன்று நிறுவப்படவுள்ளது. சுயாதீன அதிகாரி ஒருவரின் கீழ் இந்த வரவு- செலவுத் திட்ட அலுவலகம் இயங்க உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் நிதி விவகாரங்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதே இந்த அலுவலகத்தின் பிரதான பணி எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பொருளாதாரம் பற்றிய ஆய்வுகளை நடத்துதல், அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகள் குறித்து ஆய்வு நடத்துதல் போன்ற பணிகள் இந்த அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

குறிப்பாக வரவு- செலவுத் திட்டத்தில் அமைச்சர்களுக்கும் அந்தந்த மாகாணங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்வதில் எழும் பிரச்சினைகளின் போது இந்த அலுவலகம் ஆலோசனைகளை வழங்கவுள்ளது.

ஒவ்வொரு வரவு- செலவுத் திட்டத்திற்கும் முன்னதாக நாடாளுமன்றிற்கு விசேட அறிக்கை சமர்ப்பிக்கும் பணியும் இந்த அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

புதிய அலுவலகத்திற்கான அதிகாரிகள் தெரிவின் பின்னர் அலுவலகத்தை நிறுவும் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்படும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

## கல்லீரல் கோளாறுகளை போக்கும் பப்பாளி



உணவில் அதிகமான காரம், எண்ணெய் பொருட்கள், காலம் தவறி சாப்பிடுவது, இரவு நேரத்தில் அதிக நேரம் விழித்திருப்பது போன்றவற்றால் உடல் உஷ்ணமாகி கல்லீரல் கெட்டுப் போகிறது. மது குடிப்பது, நீரில் கலந்து வரும் நச்சுக்கள், கிருமிகள் போன்றவற்றால் ஈரல் கோளாறு ஏற்படுகிறது. எளிதில் கிடைக்கக் கூடிய சுக்கு, மிளகு, சீரகம், பப்பாளி, வெங்காயம் போன்றவை கல்லீரலை பலப்படுத்தும், நோயை தடுக்கும் மருந்தாக அமைகிறது.

பப்பாளியை பயன்படுத்தி கல்லீரல் நோய்களை குணப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள், பப்பாளி, சீரகம். பப்பாளி பழத்தை பசையாக அரைத்து, 2 ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதனுடன் அரை ஸ்பூன் சீரகப்பொடி சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வாரம் ஒருமுறை எடுத்து கொண்டால் கல்லீரல் பாதிப்பது தடுக்கப்படும். மஞ்சள் காமாலையின் அளவு குறையும்.

தொற்றினால் வரும் மஞ்சள் காமாலைக்கு இது மருந்தாகிறது. ஈரல் வீக்கத்தை வற்றிப்போக செய்கிறது. கல்லீரல், ஈரல் பலப்படுவதுடன் நன்றாக செயற்படும். பப்பாளியில் உள்ள வேதிப் பொருள், உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நச்சுக்களை வெளியேற்றும் தன்மை கொண்டது.

வெங்காயத்தை கொண்டு கல்லீரலில் ஏற்படும் கொழுப்பை குறைக்கும் மருந்து தயாரிக்கலாம். சின்ன வெங்காயத்தை தோல்நீக்கி பசையாக அரைத்து ஒரு ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதனுடன் கால் ஸ்பூன் மிளகுப் பொடி சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடி கட்டி குடித்தால் கல்லீரலில் உள்ள கொழுப்பு குறையும். இந்த மருந்தில் உப்பு, சீனி சேர்க்கக் கூடாது. இரசாயன மருந்துகளால் கல்லீரல் கெட்டு மஞ்சள் காமாலை ஏற்படுகிறது. ஈரலை பாதுகாக்கும் மருந்தாக வெங்காயம், மிளகு விளங்குகிறது.

## ஈரல் காக்கும் பாகல்



பாகல் என்றவுடன் நமது நின்னைவுக்கு வருவது அதன் கசப்பு சுவை தான். தற்காலத்தில் நீரிழிவு நோய் குறைபாட்டால் துன்பப்படுவோர்கள் பச்சையாக அரைத்து முகம் சுளிக்க குடிக்க உதவும் பாகற்காய் நமது முன்னோர்கள் பயன்படுத்திய மூலிகைகளில் ஒன்றானது என்பதை அறிந்தவர்கள் ஒருசிலரே. காயை சமையல் செய்து வற்றலாக்கி வறுத்து உணவுடன் சாப்பிடுவதும் நமது வழக்கம்.

சுட்டிலைகளைக் கொண்ட கொடி வகையை சேர்ந்தது பாகல். இதன் பூக்கள் மஞ்சள் நிறத்துடனும், காய்கள் நீண்டும் உருண்டையாகவும் சொரசொரப்பாகவும் அமைந்திருக்கும். பார்ப்பதற்கு அதன் மேல் முட்கள் அமைந்திருப்பது போல் இருக்கும். நிலப்பாகல், மிதிப்பாகல், நரிப்பாகல், நாய்ப்பாகல், கொம்புப் பாகல், வேலிப்பாகல், காட்டுப் பாகல் என பலவகையுண்டு. வேலிப்பாகல், நரிப்பாகல், நாய்ப்பாகல் இம்மூன்றும் குத்துகாடுகளிலும் வேலிகளிலும் படர்ந்து வளரும்.

இவைகளின் காய் சிறியதாகவும் அதிக கைப்புள்ளதாகவும் இருக்கும். நிலப்பாகல், மிதிப்பாகல் இவ்விரண்டும் மிகப்பெரிதும் மிகச்சிறிதுமில்லாமல் நடுத்தரமாய் தரையில் படர்ந்து வளரும். காய்கள் ஏராளமாய் காய்க்கும். இந்த இனங்களை சமையல் செய்து உண்பது வழக்கமாக உள்ளது. பொதுவாக பாகல் முக்குற்றங்களால் ஏற்படும் பெருக்கை அடக்கும். கழிச்சல் உண்டாகும்,வயிற்றில் உள்ள புழுக்களை வெளியாக்கும். ஈரல் நோய், வாதநோய் உள்ளவர்கள் பழத்தை சமைத்து சாப்பிட தீரும். முழுப்பயனும் பெறுவதற்கு மற்ற பழங்களை சாப்பிடுவது போல் சாப்பிட வேண்டும். இதனால் களைப்பு நீங்கி ஆயாசமும் தீரும்.

சிலருக்கு மாலை நேரம் சூரியுன் மறைந்தவுடன் பார்வை மங்கி எதுவும் தெரியாது. மீண்டும் காலையில் சூரியன் உதயம் ஏற்பட்டவுடன் தான் பார்வை தெரியும். இதை மாலைக்கண் நோய் என்பார்கள். இவர்கள் பாகல் இலைச்சாற்றுடன் சிறிது அளவு மிளகை சேர்த்தரைத்துக் கண்ணைச்சுற்றி பற்றிட மாலைக்கண் குறைபாடு படிப்படியாக நீங்கும்.

மிதிப்பாகல் பழச்சாறு, நாவல்பட்டைச்சாறு சமஅளவு எடுத்து காலை வேளையில் 30மி.லீ. வீதம் 40முதல் 120 நாட்கள் வரை குடித்து வந்தால் மதுமோகம் முற்றிலும் தீரும். இதை குடிக்கும் காலத்தில் அசைவம் சாப்பிடக் கூடாது. பாகல் இலையை உலர்த்தி பொடித்து பெருநோய்களின் புண் மீது தூவிவர நோய் குறையும், புண்கள் ஆறும். குட்டநோய் உள்ளவர்கள் தானாக பழுத்த பழ த்தை காலை வேளையில் சமைக்காமல் சாப்பிட குட்ட நோய் தீரும். ஆனால் தொடர் மருந்துண்பவர்கள் கொம்பு பாகற்காயை சாப்பிடக் கூடாது. சாப்பிட்டால் மருந்துகளை முறிக்கும். உடலில் கரப்பான் உண்டாகும்.

## பொருளியல்-II பகுதி அ தொடர்ச்சி.. கொழும்பு றோயல் கல்லூரி

(05)

I.நுகர்வுச்சார்பு நகர்வதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் யாவை?

II.அரச செலவீனம் உட்பாய்ச்சல்களாகவும் வரி வெளிப்பாய்ச்சல்களாகவும் கருதப்படுவது ஏன்?

III.திறந்த பொருளாதாரமொன்றின் திட்டமிட்ட முதலீட்டை விட திட்டமிட்ட சேமிப்பு குறைந்த பெறுமதியை கொண்டிருப்பின் அது எவ்வாறு சமனிலை தேசிய வருமான மட்டத்தை அடையும் என விளக்குக.

IV. கற்பனை பொருளாதாரமொன்றின் பேரினப்பொருளாதார தகவல்கள் தரப்பட்டுள்ளன. (எல்லா பெறுமதிகளும் மில்லியன் ரூபாவில்)

| செலவிடத்தகு வருமானம் | நுகர்வுச்செலவு |
|---|---|
| yd | c |
| 0 | 100 |
| 1000 | 900 |
| 2000 | 1700 |
| முதலீடு(I) | 100 |
| தன்னிச்சையான வரி (T) | 80 |
| அரச செலவு (G) | 50 |
| வீட்டுத்துறை மாற்றல் கொடுப்பனவு | 25 |

a) நுகர்வுச்சார்பு, சேமிப்புச்சார்பு என்பவற்றை எழுதுக.

b) சமனிலை வருமானமட்டத்தை கணிக்க?

c) உட்பாய்ச்சல்கள், வெளிப்பாய்ச்சல்களுக்கு சமன் என்பதைக் காட்டுக.

d) இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் வெளியீட்டுமட்டம் 1000 மில்லியன் நிறைதொழில் மட்ட நிலைமையை அடைவதற்கு எவ்வளவு அரச செலவீனத்தை குறைக்க வேண்டும்?

### பகுதி ஆ

(06)

I.வணிக வங்கியின்முதன்மை ஒதுக்குகளாகவும் உழைக்கும் சொத்துக்களாகவும் உள்ளடக்கக்கூடியது?

1)கையிலுள்ள காசு 2)அரச பிணைகள்
3)பணக்கூட்டு 4)கடன்களும் முற்பணங்களும்

II. இலங்கையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை விட ஏன் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் நுகர்வோரின் விலை மாற்றல்களை அளவிட மிகவும் பொருத்தமானது?

III. அடிப்படை பணவீக்கத்தை வரையறுக்க.
நாணயக்கொள்கை பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ள அடிப்படை பணவீக்க எண்ணக்கரு எவ்வாறு முக்கியத்துவம் கொண்டது என விளக்குக.

IV. இலங்கையின் நாணயமுறைமை தொடர்பாக கற்பனையான தரவுகள் தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மொத்த நாணயம் | 492 |
| வணிக வங்கியில் உள்ள நாணயம் | 104 |
| மத்திய வங்கியிலுள்ள நாணயம் | 182 |
| வணிக வங்கியிலுள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள் | 327 |
| வணிக வங்கியிலுள்ள பொதுமக்களின் சேமிப்பு தவணைவைப்புக்கள் | 3342 |

கணிக்க. 1)நாணயத்தளம்
2)ஒடுங்கிய பண நிரம்பல்($M_1$)
3)அகன்ற பண நிரம்பல்($M_2$)
4)அகன்ற பண பெருக்கி

V. பணப்பெருக்கியின் பெறுமதி ஒன்று அல்லது ஒன்றுக்குகூடுதலாக இருப்பதற்கான காரணங்களை விளக்குக.

(07)

I.பயன்பாட்டு அடிப்படையில் கடற்கரை எந்தவகையான பண்டத்தை சார்ந்தது?

II.அரச வருமானத்தின் கூறுகள் யாவை?

III.அண்மை ஆண்டுகளில் இலங்கையின் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக குறைவடைந்துள்ளது? அதற்கான காரணங்கள் யாவை?

IV.கணக்கு வாக்கெடுப்பு மற்றும் குறைநிரப்புப் பாதீட்டுக்குமிடையிலான வேறுபாட்டை எழுதுக.

V. பாதீட்டு பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்ய உள்நாட்டு வளங்களில் தங்கியிருப்பதன் விளைவுகளை ஆராய்க.

(08)

I. ஒப்பீட்டு நன்மையின் அடிப்படை எடுகோள்கள் யாவை?

II.தரப்பட்ட ஊழிய அலகுகளைக் கொண்டு இந்தியா மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய அரிசி மற்றும் தேயிலைக்கான அலகு எண்ணிக்கைகள் தரப்பட்டுள்ளது. இரண்டு நாடுகளிலும் ஊழியம் ஓரினத்தன்மை வாய்ந்தது.

| | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| அரிசி | 10 | 6 |
| தேயிலை | 8 | 3 |

a.ஒவ்வொரு நாட்டிலும் ஒப்பீட்டு நன்மையை அனுபவிக்கும் பண்டங்கள் எவை?

b.இரண்டு நாடுகளும் நன்மையக்கக்கூடிய சர்வதேச வர்த்தக பரிமாற்றுவீதத்தை காண்க.

III. கீழுள்ள கொடுக்கல் வாங்கல்கள் எவ்வாறு சென்மதி நிலுவையில் இரட்டை பதிவுக்கு உட்படும் எனக்காட்டுக.

a)இலங்கைக்கம்பனியால் தென்கொரியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 100 மில்லியன் பெறுமதியான வைரம்.

b) தாய்லாந்தில் கம்பனி ஒன்றை வைத்திருக்கும் இலங்கையரால் 500மில்லியன் ரூபா பங்கிலாபம் இலங்கைக்கு கொண்டுவரப்படல்

c) மத்திய கிழக்கு நாட்டில் வேலை பார்க்கும் இலங்கையரால் அனுப்பப்பட்ட 50 மில்லி மாற்றல் கொடுப்பனவுகள்

d)இந்தியன் கம்பனியிடம் இருந்து இலங்கைக் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.200 மில்லியன் பெறுமதியான ஆக்க உரிமை

IV.வர்த்தக மாற்றுவீதம் இறக்குமதி இயலளவுகளுக்கு இடையேயான வேறுபாடு யாது?

V.டொலருக்கான கேள்வி அதிகரித்தும் டொலருக்கான நிரம்பல் நிலையானதுமாக இருக்கும் ஆயின் நாணயமாற்று வீதத்தை தீர்மானிக்கும் முறையை வரைபடம் மூலம் விளக்குக. அத்துடன் டொலர் நிரம்பல்,கேள்விக்கிடையிலான வேறுபாட்டையும் காட்டுக.

(09)

I. பொருளாதார வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி வீதம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது?

II. நிலைத்து நிற்கும் அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு சமூக முதலை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.

III. நிலைத்துநிற்கும் அபிவிருத்தி தொடர்பான பூகோள ரீதியாக 2030 நிகழ்ச்சி நிரல் வேலைத் திட்டங்களை விளக்குக.

IV. அபிவிருத்தியின் அளவீடாக மனிதவள அபிவிருத்தி சுட்டெண்ணில் உள்ள குறைபாடுகள் யாவை?

V. நிலைத்துநிற்கும் அபிவிருத்திக்கு அவசியமான இயற்கை மூலதனத்தையும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியையும் விளக்குக.

(10)

I. முழுவறுமை,சார்பு வறுமை என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது?

II.வறுமையின் பொருளாதார விளைவுகள் எவை?

III.அண்மைக்காலங்களில் வறுமையைக் குறைப்பதற்கு எடுத்த முயற்சிகளின் பிரகாரம் இலங்கையின் வறுமை குறைவடைந்துள்ளது. அதற்கான காரணங்களை ஆராய்க.

IV. இலங்கை சனத்தொகை அதிகரிப்பு நன்மை யுகத்தில் இருந்து முதியோர் சனத்தொகை யுகத்திற்கு மாற்றமடைந்த காலகட்டத்தின்போது முகங்கொடுத்த சவால்கள் எவை?

V. வேறுநாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் பெண் ஊழியர் பங்குபற்றல் வீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. ஊழியப்படையில் பெண்களை அதிகம் கவருவதற்கு எடுக்கக்கூடிய கொள்கைத் தீர்மானங்கள் யாவை?

◆◆◆

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## கணக்கீடு பகுதி-I

## கொழும்பு றோயல் கல்லூரி

1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01) சஜினி வணிகத்தில் 2016 ஜனவரி 01 இல் பின்வரும் மீதிகள் பிரித்தெடுக்கப்பட்டன.
- மொத்த சொத்துக்கள் ரூ. 200 000
- உரிமைத்துவம் 140 000
- வெளிபொறுப்புகள் 60 000

2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றன.

I. ரூ. 30 000 கிரயமுடைய பண்டங்கள் கிரயத்தில் 1/3 பங்கு இலாபம் சேர்த்து கடனுக்கு விற்கப்பட்டன. இவற்றுள் 50 % வீதம் கடன்பட்டோரிடம் காசாக வசூலிக்கப்பட்டது.

II. ரூ. 40 000 வருமதியான கடன்படுநர் மீதியில் 10 % சதவீதம் ஐயக் கடன் ஏற்பாடு செய்யப்பட்டது. துவக்க ஐயக்கடன் ஏற்பாடு மீதி எதுவுமில்லை. மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சீராக்கிய பின்னர் காணப்படக்கூடிய நிலைமைகளை பிரதிபலிப்பது

| சொத்துகள் | உரிமைத்துவம் | + | வெளிபொறுப்பு |
|---|---|---|---|
| 1) ரூ. 204 000 | ரூ. 144 000 | + | ரூ. 60 000 |
| 2) 204 000 | 126 000 | + | 60 000 |
| 3)186 000 | 124 000 | + | 64 000 |
| 4)208 000 | 140 000 | + | 68 000 |
| 5)206 000 | 146 000 | + | 60 000 |

02) பின்வரும் கூற்றுக்களில் கணக்கீட்டு தொழிற்பாடுகளின் விளைவால் எழும் கணக்கீட்டு வெளியீடுகளை மிகச் சரியாக விபரிப்பது.

1.வருமான கூற்றும் நிதிநிலைமை கூற்றும்.
2.நிறுவன பெறுபேற்றினை பிரதிபலிக்கும் வருமானகூற்று
3.பரீட்சை மீதி
4.தகவல்கள் தேவைப்படுவோருக்கு வழங்குவதற்கென தயாரிக்கப்படும் பல்வேறு கூற்றுகள்
5.முகாமைக்கு தேவைப்படும் தகவல்களை வழங்கும் அறிக்கைகள்.

03)சப்புமல் நிறுவனத்தின் கொடுக்கல்வாங்கல்கள் சில
-குத்தகை ஒப்பந்த அடிப்படையில் வாங்கப்பட்ட மோட்டார்வான்
-வெளித்திரும்பல்
-சம்பளகொடுப்பனவு
-கடன்விற்பனை

மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபடும் மூல ஆவணங்களை விபரிப்பன.

1.நாட்குறிப்பு கைச்சாத்து, வரவுகுறிப்பு, கைச்சாத்து, பட்டியல் ,
2.நாட்குறிப்பு கைச்சாத்து, செலவுகுறிப்பு, கைச்சாத்து, பட்டியல்
3.கிரய பட்டியல், வரவுகுறிப்பு, பட்டியல், கைச்சாத்து
4.கிரய பட்டியல், செலவுகுறிப்பு, கைச்சாத்து, பட்டியல்
5.கைச்சாத்து, பற்றுச்சீட்டு, செலவுகுறிப்பு, நாட்குறிப்பு, கைச்சாத்து

04)விற்பனை கிரயத்தினை கணிப்பதில் துவக்க, இறுதி கையிருப்புக்கள் சீராக்குவதுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு

1.முன்னெச்சரிக்கை எண்ணக்கரு 2.கொள்கை மாறா எண்ணக்கரு
3.கைக்கிட்டிய எண்ணக்கரு 4.வணிக அலகுசார் எண்ணக்கரு
5.இணைதல் எண்ணக்கரு

05)2016 மார்ச் 31 இல் , வங்கி கணக்கு மீதி ரூ. 250 000 இத்தினத்தில் வங்கிகூற்று மீதி ரூ. 360 000 ஆக இருந்தது.

வேறுபாட்டிற்கு ஏதுவான காரணங்கள் வருமாறு

◆வசூலிக்கப்படாத காசோலையின் பெறுமதி ரூ.70 000

◆வங்கி நேரடி வசூலிப்பு ரூ.10 000 வங்கி கட்டணம் ரூ.3000 நிறுவன வங்கி கணக்கில் சீராக்கப்படவில்லை.

◆வைப்பிலிட்டு மறுக்கப்பட்ட காசோலை ரூ.20 000 நிறுவன வங்கி கணக்கில் சீராக்கப்படவில்லை.

கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலையின் பெறுமதியாய் அமைவது?

1) ரூ. 237 000 2) ரூ. 250 000 3) ரூ.190 000
4) ரூ.193 000 5) ரூ. 200 000

06) தனிவியாபாரமொன்றில் நடப்பாண்டில் சொத்துக்களும் வெளிக்கடன்களும் முறையே ரூ. 800 000, ரூ. 90 000 இனால் அதிகரித்திருந்தது. கணக்காண்டில் நிறுவனம் உழைத்த இலாபம் ரூ. 250 000 ஆகவும், இத்தொகையில் நிறுத்தி வைத்த இலாபம் ரூ. 200 000 மாயும் இருப்பின் உரிமையாளர் மேலதிக மூலதனமாக ஈடுபடுத்திய தொகை யாது?

1) ரூ. 410 000 2) ரூ. 510 000 3) ரூ.400 000
4) ரூ.710 000 5) ரூ.500 000

07) இயந்திரமொன்றை 2014 ஏப்ரல் 01 இல் உடைமையாக்கிக் கொள்வதுடன் தொடர்புடைய தரவுகள் வினோதி கம்பனி பின்வருமாறு தருகிறது.

| | ரூ. (000)களில் |
|---|---|
| -கொள்வனவுகிரயம் | 2 000 |
| -இறக்குமதி கட்டணம் | 100 |
| -நிறுவுதல் கிரயம் | 250 |
| -ஊழியர் பயிற்சியளித்தல் செலவு | 200 |
| -துவக்க பரீட்சார்த்தல் கட்டணம் | 150 |
| -பரீட்சார்த்த உற்பத்திகளை விற்பனை செய்தமையினால் தேறிய காசு | 50 |
| -வருடாந்த பராமரிப்பு கிரயம் | 300 |

2015 ஒக்டோபர் 01 இல் இயந்திரம் ரூ. 400 000 செலுத்தி நவீனமயப்படுத்தப்பட்டது. இது இயந்திரத்தின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யும். 2016 மார்ச் 31 இல் இயந்திரத்தின் கிரயமாக அமைவது

1) ரூ. 3050 000 2) ரூ. 2650 000 3) ரூ.2850 000
4) ரூ.3350 000 5) ரூ. 3400 000

08) விஷ்வகலா நிறுவனத்தின் பரீட்சை மீதி இணங்கவில்லை. வேறுபாடு ஒரு தொங்கல் கணக்கில் இடப்பட்டதுடன் தொங்கல் கணக்கினை கருத்தில் கொள்ளாது வருமானக் கூற்றை தயாரித்து நிகர இலாபமென ரூ. 180 000 இனங்காணப்பட்டது.

பரீட்சை மீதி வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு

1) மின்கட்டண கணக்கு மீதி ரூ.56 000. பரீட்சை மீதிக்கு ரூ.65 000 என மாற்றப்பட்டிருந்தது.
2)வாடிக்கையாளரிடம் வசூலித்த காசோலை ரூ.86 000 கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கிற்கு மாற்றப்படவில்லை.
3)முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த கட்டட வாடகை ரூ. 50 000 கணக்குகளில் சீராக்கப்படவில்லை.

தொங்கல் கணக்கு நிலுவையாகவும் தவறுகள் சீராக்கியபின் இலாபமாகவும் அமைவது.

1) ரூ. 95 000, ரூ. 239 000 2) ரூ. 95 000, ரூ. 230 000
3)ரூ.95 000, ரூ. 325 000 4) ரூ.77 000, ரூ. 230 000
5)ரூ.77 000, ரூ. 239 000

09) சன்ஜீவ வணிகத்தின் 2016 மார்ச் 31 இல் காணப்பட்ட இருப்பு விபரம் வருமாறு

| இருப்பு வகை | கணியளவு | அலகொன்றின் | |
|---|---|---|---|
| | | கிரயம் ரூபா | தேறக்கூடிய நிகர பெறுமதி ரூபா |
| A | 100 | ரூ 2 | ரூ 3 |
| B | 300 | 3 | 2/50 |
| C | 300 | 3 | 2/50 |

நிறுவனம் இருப்புக்களை தனித்தனி உருப்படிகளாக கருதும் அடிப்படையில் மதிப்பிடுகிறதென கொண்டு இருப்பு பெறுமதி பதிவழிப்பு தொகையினையும் 2016.03.31 இல் நிதி நிலைமைக் கூற்றில் பிரதிபலிக்கும் தொகையினையும் பிரதிபலிப்பது

| இருப்பு பெறுமதி வீழ்ச்சி | நிதி நிலைமைக்கூற்றில் பிரதிபலிக்கும் தொகை |
|---|---|
| 1.ரூ 150 | ரூ 1800 |
| 2. 200 | 1450 |
| 3. 150 | 1800 |
| 4. 300 | 1700 |
| 5. 300 | 1450 |

14 ஆம் பக்கம் பார்க்க

10)பியூமி டிரேடர்ஸின் 2015 மார்ச் 31 இல் கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ.230 000 காட்டியது. இத்தினத்திலான கடன்கொடுநர் பேரேட்டு பட்டியல் மொத்தத்துடன் இணங்கவில்லை. வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு,

1.கொள்வனவு திரும்பல் நாளேட்டின் மொத்தம் ரூ.15 000 கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கிற்கு ரூ 1500 என மாற்றப்பட்டிருந்தது.

2.கடன்கொடுநரில் விதிக்கப்பட்ட தாமதவட்டி ரூ 4500 குறித்த கடன்கொடுநர் கணக்கில் பதியப்படவில்லை.

3.கடன்கொடுநரிடமிருந்து கிடைத்த கழிவு ரூ.8000 அவர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

கடன்கொடுநர் பேரேட்டு பட்டியல் மொத்தம் (திருத்தமுன்)

1.ரூ 228 000 2.ரூ 250 000 3.ரூ 231 000
4.ரூ 263 5005.ரூ 243 500

11) பின்வருவன 2015 ஏப்ரல் 01 இல் ஆரம்பிக்கப்பட்ட பங்குடமை தொடர்பான தரவுகள்

| பங்காளர் பெயர் | அமல் | கமல் | நாமல் |
|---|---|---|---|
| 2016.03.31 இல் பங்காளர் மூலதன கண ரூ | 200 000 | 200 000 | 200 000 |
| 2016.03.31 இல் மொத்த உரிமையாண்மை | 350 000 | 330 000 | 320 000 |

◆பங்காளர் அமல் ரூ.30000 இணையும் பங்காளர் நாமல் ரூ.20000 பெறுமதியான பண்டங்களையும் கணக்காண்டில் பற்று செய்திருந்தனர்.

◆மூலதனவட்டி ஆண்டுக்கு 10 % ஆகும். பகிர்வுக்கு முற்பட்ட இலாபமாய் அமைவது.

1) ரூ 400 000 2) ரூ.450 000 3) ரூ.390 000
4) ரூ.420 000 5) ரூ. 380 000

12) சில்வா கம்பனியில் 31 மார்ச் 2015 இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் பெருமளவிலான பண்டங்கள் அழிவடைந்தது. பின்வரும் தரவுகளை அறியப்படக்கூடியதாக உள்ளது.

| | |
|---|---|
| 2014 ஏப்ரல் 01 இல் தொக்கு | ரூ. 400 000 |
| - கொள்வனவுகள் | 1800 000 |
| - விற்பனைகள் | 2000 000 |
| -பண்டபற்று | 200 000 |
| -வழிச்சரக்காக காணப்பட்டவை | 50 000 |

ரூ.50 000 பெறுமதியான பண்டங்கள் காப்பாற்றப்பட்டன. நிறுவனம் பொதுவாக கிரயத்தில் 25 % இலாபமாக பேணி வருகிறது. தீயினால் அழிவடைந்த பண்ட பெறுமதியாய் அமைவது.

1) ரூ.450 000 2) ரூ. 500 000 3) ரூ.200 000
4) ரூ.250 000 5) ரூ. 300 000

13) இந்து, மதி இலாப நட்டங்களை 2:1 என பகரும் பங்காளர்கள். இப் பங்குடைமையில் ராஜா புதிய பங்காளராக சேரும் பொருட்டு ராஜாவின் நன்மதிப்பு பங்கு ரூ 20 000 என மதிப்பிடப்பட்டது. புதிய இலாப நட்ட விகிதம் 3:2:1 நன்மதிப்பு சீராக்கத்தினால் இந்து, மதி அடையும் நயத்தொகையாவது

| | இந்து | மதி |
|---|---|---|
| 1) | 20 000 | - |
| 2) | 20 000 | 20 000 |
| 3) | 40 000 | 20 000 |
| 4) | - | 20 000 |
| 5) | 10 000 | 10 000 |

14) சுபாஷ் லிமிடெட் 2016 ஜனவரி 01 இல் ரூ. 1 மில்லியன் பெறுமதியான இயந்திரமொன்றை கொள்வனவு செய்தது. இதன் மதிப்பிட்ட ஆயுட்காலம் 10 ஆண்டுகள் எஞ்சிய பெறுமானம் ரூபா 29 000 கம்பனி ஒடுங்கு மீதி முறையில் ஆண்டுக்கு 10% ப்படி முதல் 03 ஆண்டுகளுக்கு தேய்விட்ட பின் 04காம் வருடத்தற்கு நேர்கோட்டு முறைக்கு பெறுமான தேய்விடல் முறையினை மாற்றுகிறது.

நான்காம் வருட வருமான கூற்றில் பிரதிபலிக்கும் தொகையாவது

1) ரூ 166667 2) ரூ 150 000 3) ரூ 90 000
4) ரூ 100 000 5) ரூ 120 000

15) சுதந்தா பொதுக்கம்பனி பெறுமதி சேர்வரி செலுத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். கம்பனி மருத்துவ சேவைகளை வழங்குகிறது.

2016 ஜனவரி மாதத்திற்கு சேவை மூலமான வருமானம் பெறுமதி சேர்வரி உட்பட ரூ.1 380 000. கொள்வனவு ரூ 800 000 (பெறுமதி சேர்வரி நீங்கலாக) ஜனவரி மாதம் செலுத்திய பெறுமதி சேர்வரி ரூ 50 000 , பெறுமதி சேர்வரி 15% வீதமாகும்.2016 ஜனவரி 31 இல் பெறுமதி சேர்வரி கட்டுப்பாட்டு கணக்கு மீதியாய் அமைவது.

1) ரூ 60 000 வரவு 2) ரூ 10 000 செலவு 3) ரூ 50 000 செலவு
4) ரூ 20 000 வரவு 5) ரூ 130 000 செலவு

16) மிராத் கம்பனி லிமிட்டெட்டின் 31.03.2014 இல், ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஆதனப் பொறி உபகரண விபரம் வருமாறு.

| உறுப்படிகள் | கிரயம் ரூ. 000 | திரண்ட தேய்மானம் ரூ 000 | மதிப்பிட்ட ஆயுட்காலம் (ஆண்டுகளில்) | எஞ்சிய பெறுமானம் ரூ 000 |
|---|---|---|---|---|
| கட்டடம் | 3000 | 800 | 25 | 500 |
| மோட்டார் வான் | 4000 | 1500 | 07 | 500 |
| தளபாடம் | 1000 | 350 | 18 | 100 |

கட்டடம் முதன் முறையாக 31 மார்ச் 2015 இல் ரூ 1.9 மில்லியனாக மீள விலை மதிக்கப்பட்டது.

2015 ஜனவரி 01 இல் ரூ 5.8 மில்லியன் பெறுமதியான புதிய லொறியொன்றை கொள்வனவு செய்வது தொடர்பாக மோட்டார் வான் 2.2 மில்லியன் பெறுமதியிட்டு கையளிக்கப்பட்டது. மிகுதி காசாக செலுத்தப்பட்டது. புதிய லொறியின் மதிப்பிட்ட ஆயுட்காலம் 05 ஆண்டுகள். எஞ்சிய பெறுமதி ரூ 300 000. 2015.03.31 இல் முடிவுற்ற ஆண்டு தேய்வு தொகையும், ஆதனம் பொறி உபகரணங்களின் முன் கொண்டு வரும் தொகையும் முறையே

| | ஆண்டுக்கான தேய்வு ரூ(000) | முன் கொணரும் தொகை ரூ(000) |
|---|---|---|
| 1) | 780 | 10000 |
| 2) | 800 | 9625 |
| 3) | 800 | 8025 |
| 4) | 875 | 11000 |
| 5) | 750 | 10250 |

17) சேனகப் பொது கம்பனி லிமிடெட்டின் 2015 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டில் வருமான வரி தொடர்பான தரவுகள்.

| | | | |
|---|---|---|---|
| -காசாக செலுத்திய வருமான வரி | (2013/14) தொடர்பில் | ரூ | 60 000 |
| | (2014/15) தொடர்பில் | ரூ | 200 000 |
| 2014 ஏப்ரல் 01 வரி பொறுப்பு | (2013/14) | ரூ | 75 000 |

சென்ற ஆண்டிற்கான வருமான வரி ரூ 60 000 என இணங்கிக் கொண்டு இவ் வருடம் செலுத்தப்பட்டதுடன் இவ் வருட வரி ரூ 350 000 என மதிப்பிடப்பட்டது. வருமான வரியெனவும் 2015 மார்ச் 31 இல் உள்ள நிதி நிலைமைக் கூற்றில் வரி பொறுப்பெனவும் பிரதிபலிக்கும் தொகைகள் முறையே

1) ரூ 315 000 மும், ரூ 100 000
2) ரூ 335 000 மும் , ரூ 150 000
3) ரூ 315 000 மும் , ரூ 85 000
4) ரூ 285 000 மும், ரூ 100 000
5) ரூ 300 000 மும், ரூ 100 000

18)நூலக பொதுக் கம்பனி 2015, ஏப்ரல் 01 இல் கூட்டிணைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

2016 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தகவல்கள்

| | |
|---|---|
| வருமான வரிக்கு முன் இலாபம் | ரூ 150 000 |
| ஆதனம் பொறி உபகரணங்கள் (தேறியது) | 600 000 |
| பெறுமான தேய்வு | 40 000 |
| கையிருப்பு | 60 000 |
| முற்கொடுப்பனவு | 9 000 |
| கடன் கொடுநர் | 36 000 |

செயற்பாட்டு நடவடிக்கையினால் உருவான தேறிய காசு

1)ரூ 190 000 2)ரூ 103 000 3)ரூ 158 000
4)ரூ 157 000 5)ரூ121 000

வினா எண் 19,20 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளை பயன்படுத்துக. பின்வரும் தரவுகள் 31.03.2015 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஜேராஜ் கம்பனி லிமிடெட்டின் நிதிகூற்றுக்களிலிருந்து பெறப்பட்டவைகளாகும்.

| | ரூ(000) |
|---|---|
| மொத்த சொத்துக்கள் | 6000 |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 2000 |
| 20% வீத திபெஞ்சர்கள் | 3000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 800 |
| நடைமுறை கடன் | 200 |

2014.04.01 இல் நிறுத்தி வைத்த வருவாய் எதுவுமில்லை

கணக்காண்டு 2014/15 இல் சாதாரண பங்குதாரருக்கு இடைகால பங்கிலாபமாக ரூ 200 000 செலுத்தப்பட்டிருந்தது.

செலுத்திய வருமானவரி ரூ 500 000

19)உரிமை பங்குதாரர்களுக்கான இலாபமாக அமைவது

1)ரூ 800 000 2)ரூ 1000 000 3)ரூ 1 100 000
4)ரூ 1 500 000 5) ரூ 1 600 000

(20) கம்பனியின் மொத்த சொத்து மீதான திரும்பல் வீதமானது

1)20% 2)25% 3)18% 4)26.67% 5)32%

21)பின்வரும் தரவுகள் மூலப்பொருள் Ml தொடர்பானது

| | |
|---|---|
| சராசரி நுகர்வு வாரமொன்றிட்டு | 200 அலகுகள் |
| இழிவு நுகர்வு வாரமொன்றிட்டு | 100 அலகுகள் |
| முதன்மை காலம் -வாரங்களில்-உச்சம் | 05 |
| -இழிவு | 04 |

| | உச்ச நுகர்வு (அலகுகளில்) | இழிவுஇருப்பு மட்டமாய் அமைவது |
|---|---|---|
| 1) | 400 | 600 |
| 2) | 300 | 600 |
| 3) | 300 | 400 |
| 4) | 500 | 600 |
| 5) | 400 | 300 |

22)சாவித்திரி கம்பனி லிமிட்டெட் நிதி நிலைமை கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மீதிகள் வருமாறு,

| | 31.03.2015 | 31.03.2014 |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | ரூ.800 000 | ரூ.750 000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 800 000 | 550 000 |
| பொது ஒதுக்கம் | 90 000 | 60 000 |
| மீள விலை மதித்தல் ஒதுக்கம் | 50 000 | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | 550 000 | 350 000 |

31.03.2015 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான வரி ரூபா.100 000 கணக்காண்டிற்கு பிரேரிக்கப்பட்ட பங்குலாபம் ரூ. 60 000 2015 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான இலாபமாகவும் உரிமையாண்மையிலேற்பட்ட அதிகரிப்பாகவும் அமைவது முறையே

1. ரூ 440 000, ரூ 380 000
2.ரூ 380 000, ரூ 380 000
3.ரூ 280 000, ரூ 600 000
4.ரூ 380 000, ரூ 580 000
5.ரூ 280 000, ரூ 380 000

23) ராஜேஷ் கம்பனி தனது ஊழியர்களின் வேதனம் மற்றும் நியதிச் சட்ட ரீதியான கொடுப்பனவுகளை தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதி செலுத்துவது வழமை.

*ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு - ஊழியர் 10 %
-நிறுவனம் 15 %

*ஊழியர் மாலிக்கின் வீட்டுக்கடனுக்காக மாதம் ரூ 5000 கழிப்பது வழமை

*ஊழியர் மாலிக்கின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு தொகை ரூ.3800 எனின்

*மாலிக்கின் மாதச் சம்பளமாகவும் நிறுவனத்தின் மொத்தச் சம்பளம் தொடர்பான செலவாகவும் அமைவது முறையே

| | மாதச் சம்பளம் | சம்பளம் தொடர்பான மொத்தச் செலவு |
|---|---|---|
| 1.ரூ. | 38000 | ரூ. 43700 |
| 2. | 40000 | 31000 |
| 3. | 43500 | 42500 |
| 4. | 44640 | 32200 |
| 5. | 44840 | 29200 |

வினா எண் 24, 25 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளை பயன்படுத்துக கம்பனி தனித்த பொருளொன்றினை உற்பத்தி செய்கிறது. அதன் மதிப்பிடப்பட்ட தரவுகள் வருமாறு,

-அலகொன்றின் விற்பனை விலை ரூ. 200
-திட்டமிடப்பட்ட வெளியீட்டு அலகுகள் ரூ.14 000
-மொத்த நிலையான கிரயம் ரூ.400 000
-விற்பனைக்கான பங்களிப்பு வீதம் 20%

24) சமப்பாட்டு புள்ளி (அலகுகளிலும்) பாதுகாப்பு எல்லை (ரூபா) இலும் முறையே

1.14 000 அலகுகள் ரூ.1000000
2.10000 800000
3.8000 1000000
4.8000 800000
5.4000 800000

25) வணிகம் விற்பனை விலையினை 05% அதிகரிக்க தீர்மானிப்பின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை 13 000 அலகுகளாக மாற்றமடையுமாயின் இலாபம் யாது?

1) ரூ.330 000 2.ரூ.300 000 3.ரூ.250 000
4.ரூ.400 000 5.225 000

26) தேஜாசிறி லிமிட்டெட் புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்வது தொடர்பாக பின்வரும் தரவுகளை திரட்டியுள்ளது

| | |
|---|---|
| -புதிய இயந்திரத்தின் கொள்விலை | ரூ.250 000 |
| -பழைய இயந்திரத்தின் விற்பனை விலை | 30 000 |
| -புதிய இயந்திரத்தின் பொருத்துதல் கிரயம் | 15 000 |
| -புதிய இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி | 25 000 |

-தொழிற்படு மூலதன தேவையானது ரூ.100 000 இலிருந்து ரூ.150 000 மாக அதிகரிக்கும் மேலதிக தொழிற்படு மூலதனத்தொகை செயற்றிட்ட இறுதியில் தேறும். செயற்றிட்ட இறுதியில் செயற்பாட்டு நடவடிக்கையினால் தேறும் காசு ரூ. 100 000

தேவைப்படுவது செயற்றிட்டத்தின் ஆரம்ப காசு வெளிப்பாய்ச்சல் தொகையாகவும் இறுதி காசு உட்பாய்ச்சல் தொகையாகவும் அமைவது முறையே

1) ரூ. 285 000, 175 000 2) ரூ.275 000,285 000
3)ரூ.385 000, 175 000 4)ரூ.300 000,250 000
5)ரூ.275 000,275 000

27)கொள்வனவு திரும்பல் ரூ. 10 000 கடன்கொடுநர் கணக்கில் பதித்த போதிலும் தவறுதலாக கொள்வனவு கணக்கில் செலவு வைக்கப்பட்டது

மேலே இடம்பெற்ற தவறு தொடர்பாக சில கூற்றுக்கள் வருமாறு

(a) இத்தவறு தேறிய இலாபத்தினை ரூ.10 000 ஆல் அதிகரித்துக்காட்டும்
(b) இத்தவறு விற்பனை கிரயத்தினை பாதிக்காது
(c) இத்தவறு தேறிய இலாபத்தினை ரூ.10 000 ஆல் குறைத்துக்காட்டும்
(d) இத்தவறு காரணமாக இலாபம் ரூ.20 000 மிகையாகக் காட்டும்
(e) இது தேறிய இலாபத்தில் எத்தகைய தாக்கத்தினையும் ஏற்படுத்தாது

மேற்கூறப்பட்ட கூற்றுக்களில் சரியான தொகுதி

1.(a) (b) ஆகியன 2.(b) (c)ஆகியன 3.(c) (d) ஆகியன
4.(b) (e) ஆகியன 5.(a) (e) ஆகியன

28) கல்பனா லிமிடெட் இயந்திரமொன்றை 2014.04.01 நிதிக் குத்தகை உடன் படிக்கையின் கீழ் ராம் லீசிங் கம்பனியிடம் கொள்வனவு செய்தது. நிதிக் குத்தகை தொடர்பான தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| இயந்திரத்தின் நியாயப் பெறுமதி | ரூ 1 000 000 |
| உடன் கட்டுப் பணம் | 300 000 |
| வருடாந்த தவணைக் கட்டணம் (மார்ச் 31 இல் செலுத்தப்படும்) | 300 000 |
| மதிப்பிடப்பட்ட ஆயுட் காலம் (ஆண்டுகளில்) | 05 |

குத்தகை வட்டி -ஆண்டுகளுக்கு முறையே

| ஆண்டுகள் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| குத்தகை வட்டி ரூ | 200 000 | 150 000 | 100 000 | 50 000 |

குத்தகை ஒப்பந்த கால முடிவில் ஆதனத்தின் மீதான உரிமை குத்தகைக்கு பெற்றவரை சேர மாட்டாது. இரண்டாம் வருட முடிவில் நடைமுறையல்லாப் பொறுப்பின் கீழ் பிரதி பலிக்கும் குத்தகை கடன் கொடுநர் நிலுவையாயும், பெறுமான தேய்வு தொகையாயும் அமைவது முறையே

| | | |
|---|---|---|
| 1) | ரூ 250 000 | ரூ 250 000 |
| 2) | ரூ 250 000 | ரூ 200 000 |
| 3) | ரூ 350 000 | ரூ 150 000 |
| 4) | ரூ 200 000 | ரூ 250 000 |
| 5) | ரூ 150 000 | ரூ 450 000 |


மிகுதி வெள்ளிக்கிழமை வெளிவரும்

# வடக்கின் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாக செயற்படுகிறது அரசு

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசாங்கம் வடக்கின் பிரிவினை வாதிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகின்றது எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட சிங்கள மாணவர்கள் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**



தாக்குதல் சம்பவம் குறித்து விமல் வீரவன்ச ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர் வரவேற்பு நிகழ்வில் சிங்கள கலாசாரத்தை பிரதிபலிக்கும் நிகழ்வு ஒன்றை நடத்தியமையே இந்த கடும்போக்குடைய தாக்குதல் நடத்தப்படுவதற்கான காரணமாகும்.

சிங்கள கலாசார நிகழ்வுகளை எமது பிரதேசத்தில் நடத்தக் கூடாது எனக் கூறி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த இனவாத மாணவர்களும் வெளியில் இருந்து வந்த நபர்களும் மாணவர்களை மட்டுமன்றி நடனக் கலைஞர்களையும் தாக்கியுள்ளனர்.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஆட்சியாளர்கள் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

இதன் காரணமாக வடக்கில் கடும் பிரிவினைவாதம் தலைதூக்கியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இந்த கடும் போக்காளர்கள் மத்தியில் சிங்கள விரோத மனோநிலை உருவாகியுள்ளது.

இந்த அரசாங்கம் வடக்கின் பிரிவினை வாதிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகின்றது.

வடக்கில் தற்போதைய நிலைமையை மாற்றி அமைக்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றோம் என விமல் வீரவன்ச வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# பேருந்து - ஆட்டோ விபத்தில் மூன்று பேர் பரிதாபமாக பலி!


(கொழும்பு)

பேருந்து மற்றும் ஆட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து ஹபராதுவ கஹாவென்னாகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காலி - மாத்தறை பிரதான வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(இ-10)




# தொலைபேசிக் கட்டணங்களில் வற்வரி சேர்க்கப்படமாட்டாது

(கொழும்பு)

தொலைபேசிக் கட்டணங்களுக்கு வற்வரி சேர்க்கப்படாது என தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் எஸ். சிறிசேன தெரிவித்துள்ளார்.

வற்வரி அதிகரிப்பினை இடைநிறுத்துமாறு அண்மையில் உச்ச நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த தீர்ப்பிற்கு அமைய தொலைபேசிக் கட்டணங்களில் வற்வரியை சேர்க்க வேண்டாம் என தொலைபேசி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி வற்வரி அதிகரிப்பின் அடிப்படையில் தொலைபேசிக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படாது என நிறுவனங்கள் உறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெறுமதி சேர் வரி எனப்படும் வற்வரியை அரசாங்கம் உயர்த்தியதன் பின்னர், தொலைபேசி நிறுவனங்கள் தொலைபேசிக் கட்டணங்களை உயர்த்தியிருந்தன.

இதன்படி தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் 49.5 வீதத்தினால் உயர்த்தப்பட்டது.

உச்ச நீதிமன்ற உத்தரவிற்கு அமைய பாவனையாளர்களுக்கு சலுகை வழங்கும் நோக்கில் அதிகரிக்கப்பட்ட வற்வரி கட்டணத்தில் சேர்க்கபபடாது என தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகம் சுனில் எஸ். சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-10)

# வற்வரிக்கு எதிராக கடைகளில் எதிர்ப்பு பதாகைகள்

வற்வரிக்கு எதிராக கடைகளில் எதிர்ப்பு பதாகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அரசாங்கத்தினால் எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வற்வரி திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் கடைகளில் எதிர்ப்பு பதாகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சுமார் 2500 எதிர்ப்பு பதாகைகள் கடைகளில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக களனிவெலி வர்த்தகர் சங்கத்தின் தலைவர் கங்கானாத் ஜயசிங்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை, ராஜகிரிய, மாலம்பே, அதுருகிரிய, கொடகம, ஹோமாகம, கொட்டாவ, மஹறல்வராவ, ஹோகந்தர மற்றும் விதயால சந்தி ஆகிய இடங்களில் காணப்படும் வர்த்தக நிலையங்களின் அனைத்து கடைகளிலும் எதிர்ப்பு பதாகைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வற்வரி திருத்தச் சட்டத்தை நீக்காவிட்டால் கடுமையான போராட்டங்கள் வெடிக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## சோகச் செய்திகளைச் சொல்லும் முறைகள்

சோகச் செய்தியை மற்றவர்களுக்கு –அதுவும் பாதிக்கப்பட இருப்பவர்களுக்குச் சொல்வது என்பது, நம் கையில் இருக்கும் நெருப்புத் துண்டை அவர்கள் கையில் கொடுப்பதைப் போன்றது. அதைக் கொடுத்துத் தான் ஆக வேண்டும். ஆனால், முடிந்தவரை அதன் சூட்டைத் தணித்துக் கொடுப்பது தான் முறை.

ஒருவருடன் மிக நெருங்கிய இரத்த உறவு கொண்டவர் இறந்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். அதைத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு நம்மிடம் வருகிறது என்றும் வைத்துக் கொள்வோம். எப்படித் தெரிவிப்பது?

ஐயையோ! உங்க....செத்துட்டாங்க! என்றா? ஒருக்காலும் கூடாது. ஆற அமரவும் படிப்படியாகவும் சொல்ல வேண்டும். அதற்கு முதல் படியாக , நாமே பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் பாதிக்கப்பட்டதாக வெளியில் காண்பித்துக் கொள்ளக் கூடாது. முதலில் நம்மைத் தேற்றிக் கொண்டு, பின்னர் விடயத்தைச் சொல்லத் தொடங்க வேண்டும்.

மெல்லப் பீடிகை போட வேண்டும். உங்களுக்கு மிகவும் அதிர்ச்சி தரக் கூடிய ஒரு செய்தியைச் சொல்லப் போகிறேன். அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய மனத் திடத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு மிகவும் சீரியஸாக இருக்கிறது. பிழைப்பதே கஷ்டம் – பிழைக்க மாட்டார்கள் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். எந்த முடிவையும் தாங்கிக் கொள்ள நீங்கள் தயாராகுங்கள்...என்று ஆரம்பித்து கடைசியில்தான் விடயத்தை விட வேண்டும்.

எனக்கு நேர்ந்த ஓர் அனுபவத்தையே உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

நான் திருப்பரங்குன்றம் சந்நிதியில் என் மனைவி, மைத்துனி, சகலை, இரண்டு மைத்துனர்கள் எல்லோருடனும் இருந்த போது, எனக்குக் கோயில் அலுவலகத்தில் போன் வந்திருக்கிறது என்றார்கள். போய்ப் பேசினேன். என் மாமனார் இறந்து விட்டதாகத் தகவல் கிடைத்தது. இரத்த உறவு சம்பந்தப்பட்ட 4 பேர்களுக்கு அந்த அதிர்ச்சிச் செய்தியைத் தெரிவிக்கும் பொறுப்பு என் தலையில் விழுந்தது. முதலில் என்னைத் தேற்றிக் கொண்டேன். மேலே சொன்ன அதே பாணியைப் பின்பற்றினேன். முதற் காரணம் படிப்படியாக அவர்களுக்கு அதிர்ச்சியைத் தர வேண்டும் என்பது. இரண்டாவது, நாங்கள் பல மைல்கள் தூரம் பயணம் செய்து உடலைப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம். உண்மையை உடைத்திருந்தால் வழியில் பெரிய களேபரம் ஆகியிருக்கும்.

சிலர் சோகச் செய்தியைச் சொல்லிவிட்டு, உடனே துக்கத்தைக் கிளறுகிற மாதிரியே பேசிக் கொண்டிருப்பார்கள். இது கூடாது. பொங்கியெழும் வருத்தத்தை அடக்குகிற மாதிரி ஆறுதலாகவே பேச வேண்டும்.

சோகச் செய்தியைச் சொல்கிறவர்கள், தங்களுக்கு இருக்கும் மிகப் பெரிய பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டுமே தவிர, சம்பந்தப்பட்டவர்களைக் கலவரப்படுத்தக் கூடாது.

அது மற்றவர்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதோடு, அப்படி நடந்து கொள்வது மனிதப் பண்பும் அல்ல!

**லேனா தமிழ்வாணன்**

# ஓர் சமூகத்தின் பண்பாட்டைப் பேணிக்காத்த பெருமைக்குரியவர் சட்டத்தரணி இராதாகிருஷ்ணன்

திருநெல்வேலி கிழக்கு சட்டநாதர் வீதியிலே அரச பணி புரிந்து வரும் நல்லூர்ப் பிரதேச சபையின் தவிசாளராகவும் விளங்கியவர் அமரர் கார்த்திகேசு ஆவார்.

செல்வாக்கு மிக்க குடும்பத்திலே 15.05.1954 இல் பிறந்த இவரது பரம்பரையினரே வாழையடி வாழையாக நல்லூர்க் கந்த சுவாமி ஆலயம் திருநெல்வேலி நீலாயதாட்சி சமேத காயாரோகணேஸ்வரர் ஆலயம் (சிவன் ஆலயம்) நல்லூர் சட்டநாதர் ஆலயம். என்பவற்றின் கந்த சஷ்டி இறுதி நாளாகிய சூரசங்காரத்தின் போது முருகனது துணைவர்களாக நவ வீரர்களாக பவனி வரும் வீர வாகு தேவர் உட்பட படைவீரர்களது படைக் கலன்கள், ஆடைகள், முடிகள், ஈட்டி, வேல், கொடி என்பவற்றையும் பல நூற்றாண்டுகளாக பேணி வரும் பரம்பரையின் வாரிசாக விளங்கியவரே அமரர் இராதா கிருஷ்ணன் ஆவார்.

வருடந்தோறும் விரதமிருந்து படைக்கலங்கள், ஆடைகளை நல்லூர் சிவஞானப்பிள்ளையர் ஆலயத்திற்கு எடுத்துச் சென்று அங்கிருந்து



நவவீரர்களும் வேடமிட்டு நல்லூர் ஆலயத்திற்கு அணிவகுத்து செல்வது மரபு. தொடர்ந்து பின்னர் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட கொன்றையடி ஞான வைரவர் ஆலயத்திற்கு வந்து இளைப்பாறிய பின்னர் இரு பிரிவாகி திருநெல்வேலி சிவன் ஆலயம், சட்டநாதர் சிவன் ஆலயம் என்பவற்றிற்கு நவ வீரர் செல்வது மரபாகும். பன்னெடுங்காலமாக இதனைப் பேணிக் காத்த தொல்குடி மரபின் வாரிசென வந்தவரே சட்டத்தரணி இராதா கிருஷ்ணன் ஆவார்.

இவர் பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு சமூக சமயப் பணியும் ஆற்றியவர்.

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தின் மூத்த உறுப்பினராக விளங்கியதோடு செங்குந்த இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினதும் மூத்த உறுப்பினராக விளங்கி சமூகப்பணி ஆற்றிய பெருமைக் குரியவராவார்.

எமது பண்பாடு, பாரம்பரிய தொன்மங்கள் தொலைந்தும் தொலைத்தும் போகின்ற இக்காலத்திலே பல நூற்றாண்டாக பரம்பரையின் பாரம்பரியத்தை பேணி வந்தமை போற்றுதற்குரியதே. நல்லை நகர் மண்ணில் வந்துதித்து நாளும் நல்லூரானை தொழுது வாழ்ந்த ஒரு பண்பாளர் முருகனுக்கு முன்துணையாய் தோன்றிப் பெருஞ் சமரை வென்ற நவவீரர்களை வீதியுலாச் செய்த அமரர் அவர்கள் திடீரென 03.07.2016 இல் அமரத்துவமடைந்தது பேரிழப்பாகும். அன்னவனின் ஆத்மா நல்லூரான் பாதக் கமலங்களில் நித்தியானந்தத்தை அடைய அவனருளாலே அவன் தாள் பணிவோமாக.

**முனைவர்**
**சின்னத்தம்பி**
**பத்மராஜா**
**விரிவுரையாளர்.**

# புனர்வாழ்வளிக்கப்பட்ட 146 கைதிகள் விடுவிப்பு

(கொழும்பு)

சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தால் புனர்வாழ்வளிக்கப்பட்ட 146 கைதிகள் கடந்த 6 மாதகாலத்தில் விடுவிக்கப்பட்டுள்ளதாக அத் திணைக்களத்தின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தின் உத்தியோகத்தர் கே.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் 30ஆம் திகதிவரை சிறு குற்றங்கள் இழைத்த 101 கைதிகள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தாலும் 45 கைதிகள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தாலும் சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லையினுள் மண்முனை வடக்கு, காத்தான்குடி, ஏறாவூர் செங்கலடி, ஆரையம்பதி, வவுணதீவு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், வவுணதீவு, கரடியனாறு, ஆயித்தியமலை, கொக்கட்டிச்சோலை ஆகிய பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கி சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் செயற்படுகின்றது.

இந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் சிறு குற்றங்கள் இழைத்த நிலையில் நீதிமன்ற உத்தரவுப்படி சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டால் அவர்கள் புனர்வாழ்வளிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# சஞ்சிகை வெளியிட ஆக்கங்கள் கோரல்

புலோலி பொது நூலகம் இப்பகுதியிலிருக்கும் ஆக்க, இலக்கிய, கருத்தாக்கங்களையும் மாணவர்களையும் வாசகர்களையும் ஊக்குவிக்கும் வகையில் அரையாண்டு சஞ்சிகையை வெளியீடு செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

எனவே ஆக்க இலக்கிய கர்த்தாக்களிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், கேலிச்சித்திரம், துணுக்குகள், விடுகதைகள், வரலாறுகள், ஆராய்ச்சி கட்டுரைகள் போன்ற ஆக்கங்களைப் பெற்று நூலகர், புலோலி பொது நூலகம், புலோலி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ 31.07.2016 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (இ

# குருபூர்ணிமா நிகழ்வு

வேத வியாச பகவானின் ஜனன தினத்தை முன்னிட்டு குரு பரம்பரையை போற்றி வழிபடும் "குரு பூர்ணிமா" நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன், சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் குரு பாதுகா பூஜை, பஜனை, சத்சங்கம் என்பன இடம் பெறும். (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜியின் 200 ஆவது படம் 'திரிசூலம்'

**தங்கப்பதக்கம்**

சிவாஜிகணேசன் முத்திரை பதித்த மகத்தான படங்களில் ஒன்று தங்கப் பதக்கம்.

சிவாஜிகணேசன் மேடையில் நடிப்பதற்காக மகேந்திரன் எழுதிய நாடகம். பின்னர் சிவாஜி புரோடக்ஷன்ஸ் அதைப் படமாகத் தயாரித்தது. வசனத்தை மகேந்திரன் எழுத பி.மாதவன் டைரக்ட் செய்தார்.

மகேந்திரன் உருவாக்கிய கடமை தவறாத எஸ்.பி. சௌத்திரி என்ற பொலிஸ் அதிகாரியை நம் கண் முன் நடமாடவிட்டார் சிவாஜி. உள்ளத்து உணர்ச்சிகளை முகத்திலும் நடை- உடை பாவனைகளிலும் பிரதிபலித்தார்.

அவர் மகனாக ஸ்ரீகாந்த, மனைவியாக கே.ஆர்.விஜயா சிறப்பாக நடித்தனர்.மற்றும் மேஜர் சுந்தரராஜன், வி.கே. ராமசாமி, பிரமீளா, மனோரமா ஆகியோரும் இடம் பெற்றனர்.

கண்ணதாசன் 'பாடல்களுக்கு எம்.எஸ்.விஸ்வநாதன் இசை அமைத்தார்.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம், சுமை தாங்கி சாய்ந்தால், சோதனை மேல் சோதனை முதலான பாடல்கள் நிரந்தரமான ஹிட் பாடல்கள்.

**பாட்டும் பரதமும்**

டைரக்டர் பி.மாதவனின் சொந்தப் படம் பாட்டும் பரதமும். சிவாஜியுடன் ஜெயலலிதா இணைந்து நடித்தார்.



பாட்டும் பரதமும் படத்தில் சிவாஜியும் ஜெயலலிதாவும்

இதில் சிவாஜிகணேசன் சில நடனங்களைப் பிரமாதமாக ஆடியிருந்தார்.

**கை எலும்பு முறிவு**

1978 இல் தச்சோளி அம்பு என்ற மலையாளப்படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது, உயரத்தில் இருந்து கீழே விழுந்தார் சிவாஜி. அதனால் அவர் கை எலும்பு முறிந்து விட்டது.

முறிந்த எலும்பை இணைக்க கையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டு ஸ்டீல் பிளேட் பொருத்தப்பட்டது.

இந்த விபத்து காரணமாக சிவாஜி சில நாட்கள் படப்பிடிப்பில் கலந்து கொள்ள முடியவில்லை.

தச்சோளி அம்பு மலையாளத்தில் பெரிய வெற்றிப் படம். 100 நாட்களுக்கு மேல் ஓடியது.

**திரிசூலம்**

சிவாஜியின் 200 ஆவது படமான திரிசூலம் சிவாஜி புரொடக்ஷன் தயாரிப்பு. 200 நாட்கள் ஓடிய மெகா ஹிட் திரைப்படம்.

கன்னடத்தில் வெளியான சங்கர் குரு என்ற படத்தின் கதைதான் திரிசூலம்.

தந்தையாகவும் இரு மகன்களாகவும் சிவாஜி நடித்தார். அவர் நடிப்பு கொடி கட்டிப் பறந்தது.

சிவாஜியுடன் எம்.என். நம்பியார், மேஜர் சுந்தரராஜன், வி.கே.ராமசாமி, கே.ஆர். விஜயா, ஸ்ரீபிரியா, ரீனா, புஷ்பலதா, மஞ்சுளா, தேங்காய் சீனிவாசன் ஆகியோர் நடித்தனர்.

வசனங்களை ஏ.எல்.நாராயணன் எழுத, கண்ணதாசன் பாடல்களுக்கு இசை அமைத்தவர் எம்.எஸ்.விஸ்வநாதன். டைரக்ஷன். கே. விஜயன். சிவாஜிகணேசனின் 223 வது படமான சங்கிலி 1982இல் வெளிவந்தது. அதில் அவருடைய இளைய மகன் பிரபு, நடிகராக அறிமுகமானார்.

சிவாஜிக்கு ராம்குமார், பிரபு என்று இரண்டு மகன்கள். இவர்களில் பிரபுவை அவருடைய கலை உலக வாரிசு என்று சொல்லலாம். அவர் பட உலகில் நுழைந்து பல வெற்றிப் படங்களைக் கொடுத்திருக்கிறார். குறிப்பாக சின்னத்தம்பி மகத்தான வெற்றிப்படம்.

**சங்கிலி**

சிவாஜியும் பிரபுவும் நடித்த சங்கிலி 1982 தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று ( ஏப்ரல் 14) வெளிவந்தது. அதில் பிரபு , திரை உலகுக்கு அறிமுகமானவர். முக்கிய குணச்சித்திர வேடத்தில் நடித்தார்.

இந்தப்படத்தை அருண் சுஜாதா கம்பைன்ஸ் பட நிறுவனம் தயாரித்தது. வசனத்தை ஏ. எல். நாராயணன் எழுத, சி.வி. ராஜேந்திரன் டைரக்ட் செய்தார்.இந்தியில் வெளியான காளிச்சரண் என்ற படத்தின் கதையை தழுவி எடுக்கப்பட்டது இப் படம். (தொடரும்)

# வலம்புரியில் வெளிவந்த சிறப்பான படம்

பசுவின் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்..!




வலம்புரி 15.07.2016 வெள்ளிக்கிழமை தினசரியில் பசுவின் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் என்று பேஸ்புக் பக்கத்தில் ஒரு படம் பிரசுரிக்கப்பட்டு பசு கூறும் இரக்கமான வேண்டுகோளும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பசு கூறுகின்றது

என் கன்றுக்காக நான் சுரந்த பாலை நீ பிறந்தது முதல் இறக்கும் வரை உனக்குக் கொடுக்கின்றேன். நீயும் என் மகன் அல்லவா? என்னைக் கொல்ல கடத்திச் செல்கிறார்கள். வேடிக்கை பார்க்கிறாயே தடுக்கமாட்டாயா? என்ற பசுவின் இரக்கமான கேள்விக்கு பசுவதை செய்பவர்கள் என்ன பதில் கூறப்போகிறார்கள்?

எமது சமயத்திலே பசுவிற்கு மிக முக்கியமான இடம்இருக்கிறது. நாம் தினமும் அணியும் சிவசின்னமான விபூதி பசுவின் சாணத்தில் தயார் செய்வதுதான். அபிஷேகத்திற்கு உபயோகப்படும் பால், தயிர், அக்னி வழிபாட்டிற்கு உபயோகப்படும் நெய். அந்த நாளில் ஆலயம், வீடுகள் மெழுகுவதற்கு உபயோகப்படும் பசுவின் சாணம் எல்லாமே கோமாதா நமக்கு தருவது தான். யசுர் வேதத்தில் கோ சூக்தம் என்று ஒரு அத்தியாயம் கோமாதாவின் பெருமை களை விரிவாகக் கூறி அதை நாம் எப்படிக் காப்பாற்ற வேண்டும். தினசரி அதனை தரிசிக்க வேண்டும் என்பதை க்கூறுகின்றது.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந் துயர் தீர்கவே

என்ற தேவாரத்தில் பசுக்கள் வாழ வேண்டும் என்று தனியாகக் கூறப்பட்டிருக்கிறது. பசுக்கள் வாழ்ந்தால் தான் அதிலிருந்து பெறப்படும் நெய் யக்ஞத்திற்கு உபயோகப்படும். யக்ஞங்கள் நடைபெற்றால் லோகம் ஷேமமாக இருக்கும். அதைத்தான் சூழ்க வையகமும் துயர் தீரவேண்டுமென்று பாடியிருக்கிறார்கள் அருளாளர்கள்.

ஒரு கும்பாபிஷேகம் நடக்கும் ஆலயத்தில் கோதரிசனம் முக்கிய இடம் வகிக்கிறது. இந்தியாவில் பல ஆலயங்களில் தினசரி கோ பூஜை நடைபெறுவதைக் காணலாம். மண மக்களுக்கு திருமணம் நிறை வெய்தியவுடன் கோதர்சனம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இப்படியான சிறப்பு மிக்க கோமாதாவை வதைப்பது கொடிய பாவம். பேஸ்புக்கில் பார்த்ததில் பிடித்தது என்ற இடத்தில் வந்த இந்த பிரசுரம் பலரைக் கவர்ந்திருக்கும் என நினைக்கிறேன்.

வலம்புரியின் தினசரியில் ஒவ்வொரு நாளும் இப்பிரசுரங்களை நான் தவறாது பார்ப்பது உண்டு. பல சமயங்களில் மிகச் சிறப்பான ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய படங்களும் வருகின்றன. வலம்புரிக்கு எனது பாராட்டுதல்கள்.




சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 783

Search for people, places and things    Nagendram Home

ரூபன் லிங்கா




வின் ஜக்ஷன்




சிந்து





புருசோத்




அகில்ராஜ்




விமலேந்திரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# காட்டிக் கொடுக்கும் அரசாங்க அதிகாரிகள்

மகிந்த அரசாங்கத்தில் மோசடிகளுக்கு துணை போன அரசாங்க அதிகாரிகள், குற்றவாளிகளைக் காட்டிக் கொடுக்க தயாராவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆட்சியில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பல்வேறு நிதி முறைகேடுகளுக்கு ஆதரவு வழங்கியமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள் பலர், தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்படவுள்ளனர்.

குறித்த அதிகாரிகள் தமக்கு எதிராக வழக்குகளில் அரசாங்க சாட்சியாளர்களாக மாறுவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதற்கமைய சில அனுஷ்டானங்களுக்கான துணி மோசடி தொடர்பில் அரசாங்க அதிகாரிகள் பலர் தற்போது அரசாங்க சாட்சியாளராக மாறவுள்ளதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அப்போதைய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களின் அழுத்தங்களுக்கு அமையவே முறைகேடுகளில் ஈடுபட்டதாக தற்போது வாக்குமூலம் அளித்துள்ளனர்.

தங்களுக்கு எதிரான விசாரணைகளில் ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆதரவும் கிடைக்காமை, இவ்வாறான குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமையினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள அவமரியாதை, குடும்ப உறுப்பினர்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சிக்கல் காரணமாக இந்த அதிகாரிகள் அரசாங்கத்தின் சாட்சியாளர்களாக மாறுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# மரண தண்டனையின் பின்பும் போதைப்பொருள் வர்த்தகம்!

மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண் கைதியொருவர் சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டே போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளமை குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்ணொருவருக்கு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நிலையில் தற்போது வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டே தனது முகவரான இன்னொரு பெண்ணின் மூலம் போதைப் பொருள் வர்த்தகத்தைத் தொடர்ந்துள்ளார்.

அதற்காக குறித்த பெண்ணுக்கு பொரலஸ்கமுவை பிரதேசத்தில் 25 ஆயிரம் ரூபா வாடகையில் வீடு ஒன்றையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணின் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான தகவல்கள் வெளியான நிலையில் பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண் கல்கிஸ்ஸை படோவிற்றை பிரதேசத்தைச் சேர்நதவர் என்று தெரியவந்துள்ளது. (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-19.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.16 | 147.80 |
| பிரிட்டன் | பவுண்ட் | 190.33 | 196.79 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 158.55 | 164.58 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.63 | 151.48 |
| கனடா | டொலர் | 110.61 | 115.01 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 108.43 | 113.29 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.51 | 110.45 |
| இந்தியா | ரூபா | 2.1650 | ------- |
| சீனா | யுவான் | 21.6943 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9212 |
| குவைத் | டினார் | 480.6897 |
| ஓமான் | ரியால் | 377.2237 |
| கட்டார் | ரியால் | 39.8858 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7292 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5464 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 110 | 100 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 110 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 550 | 800 | 500 | 600 | 600 | 600 | 600 |
| தக்காளி | 180 | 200 | 140 | 200 | 180 | 200 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 80 | 100 | 100 | 80 | 120 |
| கோவா | 180 | 200 | 120 | 200 | 160 | 160 | 160 |
| கரட் | 230 | 400 | 150 | 200 | 200 | 200 | 250 |
| பூசணி | 100 | 150 | 140 | 150 | 130 | 80 | 200 |
| புடோல் | 120 | 100 | 60 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 150 | 100 | 100 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 110 | 120 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 220 | 300 | 200 | 220 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 200 | 50 | 120 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | — | 200 | 120 | 160 | 200 |
| பயற்றங்காய் | 180 | 150 | 80 | 160 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 150 | 200 | 140 | 120 | 160 | 160 | 120 |
| பீற்றூட் | 130 | 200 | 100 | 160 | 120 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 600 | 320 | 400 | 240 | 320 | 200 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 350 | 450 | 400 | 320 | 500 |
| போஞ்சி | 180 | 300 | 130 | 160 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 80 | — | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 20 | 30 | 40 | 20 | 15 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 100 | 140 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 500 | — | — | 250 | — | 160 |
| வெங்காயப்பூ | 180 | 300 | — | 140 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 40 | 150 | 50 | 80 | 80 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | 30 | 60 | 60 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## முக்கிய நகரை இராணுவம் பிடித்தது 231



அவர்களை இராணுவத்தினர் பின் தொடர்ந்து விரட்டிச் சென்றனர். புனானி என்ற இடத்தில் புலிகளை மடக்கினர். அப்போது இரு தரப்பினருக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்றது. இதில் 18 விடுதலைப்புலிகள் பலியானார்கள். மற்றவர்கள் தப்பி ஓடி விட்டனர். இராணுவத் தரப்பில் ஏற்பட்ட உயிர்ச் சேதம் பற்றி இராணுவம் எதுவும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையே போராட்டக்களம் மாறினாலும் போரிடும் திறன் இன்னும் இருப்பதாக விடுதலைப் புலிகள் செய்தித்தொடர்பாளர் இராசையா இளந்திரையன் கூறினார்.

### விடுதலைப்புலிகள் முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் முகாம்கள் மீது இராணுவம் தாக்கியது. இதில் பல முகாம்கள் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டதாக இராணுவம் தெரிவித்தது. இதுபற்றி பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறியதாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மீது இராணுவம் தாக்கியதில் 30 விடுதலைப்புலிகள் இறந்தனர். அவர்கள் உடல்கள் வீதியில் சிதறிக் கிடந்தன. இந்த தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் இறந்தார் . 15 பேர் காயம் அடைந்தனர்.

### விமானங்கள் தாக்குதல்

கிழக்குப் பகுதியில் இராணுவ விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டன. விடுதலைப்புலிகள் எதிர்ப்பும் இருந்தது.

விடுதலைப்புலிகளின் 15 முகாம்களைக் கைப்பற்றி இருக்கிறோம். இராணுவத்துக்கு உளவு சொன்னவர்கள், விடுதலைப்புலிகளுக்கு எதிராக செயற்பட்டவரை பிடித்து சித்திரவதை செய்யும் அறைகளும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. இந்த அறைகளை படம் எடுத்து எங்களது இணையத்தளத்தில் வெளியிட்டு இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

### விடுதலைப்புலிகள் மறுப்பு

இதை விடுதலைப்புலிகள் மறுத்தனர். விடுதலைப் புலிகளின் செய்தித்தொடர்பாளர் இராசையா இளந்திரையன் கூறியதாவது, இராணுவத்துடன் நடந்த சண்டையில் விடுதலைப்புலிகள் 7 பேர் காயம் அடைந்தனர். யாரும் கொல்லப்படவில்லை. இராணுவத்தினர் மிகைப்படுத்தி சொல்கிறார்கள்.

எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள எந்த பகுதியும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் போகவில்லை. அவர்கள் எங்கள் முகாம்கள் எதையும் கைப்பற்றவில்லை. சில குடிசைகளை கைப்பற்றி உள்ளனர். எங்கள் முகாம்களில் சித்திரவதை அறைகள் எதுவும் கிடையாது. இவ்வாறு இளந்திரையன் கூறினார்.

### மகிந்த ராஜபக்ஷ

விடுதலைப்புலிகளிடம் இருந்து இராணுவம் கைப்பற்றிய வாகரை நகரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சென்று பார்வையிட்டார். அப்போது அவர் மீண்டும் சமரசப் பேச்சுவார்த்தைக்கு வரும் படி விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

அதுபற்றி அவர் நிருபர்களிடம் கூறியதாவது, தமிழ் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான திட்டங்களை முன்வைக்க தயாராக இருக்கிறோம். இதை ஏற்று விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சமரசப் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் இல்லையென்றால் விடுதலைப்புலிகளை ஒடுக்கியே தீருவோம்.

### நம்பிக்கை

இராணுவ தீர்வில் எனக்கு நம்பிக்கை இல்லை. அதே நேரத்தில் நாம் அனைவரும் நாட்டின் பிரஜைகள். நாட்டை பாதுகாக்க வேண்டியதில் நான் முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

வாகரை நகரில் தீவிரவாதிகளிடம் இருந்து பொது மக்களுக்கு விடுதலை அளித்து இருக்கிறோம். அப்பாவி பொதுமக்கள் ஒருவருக்குக் கூட பாதிப்பு இல்லாமல் வாகரையை மீட்ட இராணுவத்தினருக்கு நன்றி தெரிவிக்கவே இங்கு வந்துள்ளேன்.

இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ கூறினார்.

◆ ◆ ◆ ◆ ◆

கொழும்பு நகரில் உள்ள விமானப்படை தளத்தின் மீது விடுதலைப்புலிகளின் போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இதில் 3 பேர் பலியானார்கள். மேலும் 2 ஹெலிகொப்டர்கள் நாசமாயின.

தமிழர்கள் அதிகம் வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இராணுவம் கடும் தாக்குதல் நடத்தி வந்தது. போர் விமானங்கள் குண்டுகளை வீசின.

இந்தத் தாக்குதலில் ஏராளமான அப்பாவி தமிழர்கள் பலியானார்கள். உயிர் தப்புவதற்காகப் பலர் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு புலம் பொயர்ந்தனர்.

சிங்கள இராணுவத்தின் இந்த அத்துமீறிய தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் அவ்வப்போது தக்க பதிலடி கொடுத்து வந்தனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இராணுவம் முன்னேறி வந்ததால் அரசுக்கு அவர்கள் மிகப் பெரிய அளவில் பதிலடி கொடுப்பார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டது.

### விமானத்தாக்குதல்


அதன்படி 25-03-2007 அன்று இரவு அவர்கள் கொழும்பு நகரில் விமானத்தாக்குதல் நடத்தினார்கள்.

கொழும்பு நகரில் உள்ள பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அருகே இராணுவத்தின் கட்டுநாயக்க விமானப்படைத்தளம் உள்ளது. கொழும்பு நகரில் இருந்து 35 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்த விமானப்படை தளத்தின் மீது இரவு 12.45மணிக்கு விடுதலைப்புலிகளின் 2 போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. மொத்தம் 4 குண்டுகள் வீசப்பட்டன.

(தொடரும்)

# அரசின் கைப்பொம்மையான நிதிமோசடி விசாரணைப்பிரிவு

## சரத் என் சில்வா குற்றச்சாட்டு



(கொழும்பு)

**நிதிமோசடி விசாரணைப்பிரிவு என்பது அரசாங்கத்தின் கைப்பொம்மை என முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.**

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த அரசாங்கத்தின் தலைவர்களை சிறையில் அடைப்பதற்கு, தற்போதைய அரசாங்கம் போலிக் குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றது.


நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராக போலிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் கடந்த அரசாங்க ஆட்சியாளர்களை பழிவாங்குகின்றது. பசில் ராஜபக்ஷவை சிறையில் அடைத்தார்கள்.

அதேபோன்று யோஷித ராஜபக்ஷவையும் சிறையில் அடைத்தார்கள். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவையும் சிறையில் அடைத்துள்ளார்கள் என அவர் மேலும் குற்றம் சாட்டினார். (இ-10)

# சாலாவ ஆயுதக்கிடங்கை அரசே வெடிக்கச் செய்தது

## விமல் வீரவன்ச பரபரப்புக் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கமே சாலாவ ஆயுதக் கிடங்கை வெடிக்கச் செய்தது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

பெலியத்தவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாலாவ ஆயுதக் களஞ்சியத்திற்கு என்ன செய்தார்கள்? ஆயுதக் களஞ்சியம வெடிக்கச் செய்யப்பட்டது.


அந்த ஆயுதக் களஞ்சியம் வெடிக்கச் செய்யப்பட்டு அடுத்த நாளே மேலதிக வெடிபொருட்கள் அழிக்கப்படும் என அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே வியாங்கொட ஆயுதக் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக ஆயுதங்கள் பல திருகோணமலை கடலில் போடப்பட்டன.

கோடிக் கணக்கான ஆயுதங்களை இந்த அரசாங்கம் அழித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மக்கள் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன ஆகியோரும் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# சீனக்கப்பல்களுக்கு இலங்கையில் எரிபொருள் நிரப்ப அனுமதியளிப்பு




சீனக்கடற்படை கப்பல்கள், எரிபொருள் நிரப்பலுக்காக இலங்கை வருவதை ஏற்றுக்கொள்ளப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

உரியமுறையின் கீழ், இந்த நடைமுறை பின்பற்றப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கையை பொறுத்தவரை, இது சீனா உட்பட்ட நாடுகளின் முதலீடுகளை ஏற்றுக்கொள்ளும் யதார்த்தவாதியாக செயற்படவுள்ளதாக சிங்கப்பூரின் இணையம் ஒன்றுக்கு அரசு அறிவித்துள்ளது.

இலங்கையை பொறுத்தவரையில் அது சீனாவுடன், இந்தியாவுடன், ஜப்பானுடன் என்று அனைத்து நாடுகளின் முதலீடுகளையும் ஏற்றுக்கொள்ளும்.

இதில் எந்த நாட்டுடனும் தமது நாடு வெறுப்பை கொண்டிருக்கவில்லை என்றும் பிரதமர் ரணில் தெரிவித்தார். சீனாவைப் பொறுத்தவரை இலங்கையில் விமானத்தளம் மற்றும் துறைமுக நிர்மாணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன், இயற்கை வாயு மற்றும் சுத்திகரிப்பு பணிகளிலும் ஈடுபடவுள்ளது.

இந்த நிலையில், ஐரோப்பாவுக்கான வர்த்தகத்தின் பாதை மற்றும் பட்டுப்பாதை திட்டத்தை செயற்படுத்தி இலங்கையை இந்து சமுத்திரத்தின் வர்த்தக மையமாக மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையை பொறுத்தவரை இந்தியாவுடன் பாதுகாப்பு விடயங்களில் நெருங்கிய உறவைக் கொண்டிருக்கிறது.

இது இந்தியா சீனாவுடன் கொண்டிருக்கும் பாதுகாப்பு பதற்றம் காரணமாக பிராந்தியத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்தியாவை பொறுத்தவரை சீனாவின் கடற்படை விரிவாக்கத்தை அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை, இந்தியாவுடன் இலங்கை கொண்டிருக்கும் விசேட நெருக்கத்தை தக்கவைத்துக் கொண்டு சீனா அல்லது அமெரிக்கா ஆகிய நாடுகள் உரிய முறைகளின் கீழ் எரிபொருள் நிரப்பலுக்காக இலங்கைக்கு வந்துசெல்ல அனுமதியளிக்கப்படும் என்றும் ரணில் தெரிவித்தார்.

சீனா, ஜப்பான்,இந்தியா என்ற ஆசியாவின் பலமிக்க நாடுகள், மேற்கத்தேய நாடுகளுடன் அவை கொண்டிருக்கும் உறவுகளின் அடிப்படையில் பிரச்சினைகளை கொண்டிருக்கலாம்.

எனினும் இவையாவும் போருக்கு வழிவகுக்கும் என்று தாம் நம்பவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (இ-10)

# செய்தித்துளிகள்

## தன்னுயிரைத் துறந்து குழந்தையை காத்ததாய்

ஹப்புத்தளை,அங்கமலே புகையிரத கடவையில், புகையிரதத்துடன் மோதுண்டதில், தாய் அவ்விடத்திலேயே பலியானதுடன் அவரின் குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதே புகையிரதத்தில் காயமடைந்த குழந்தை ஹப்புத்தளை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புகையிரத கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.இந்த விபத்து நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. (இ-10)

## கட்டுநாயக்க விமான நிலையம் அடுத்த வருடம் மூடப்படும்

கட்டுநாயக்க - பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முக்கிய விமான ஓடுபாதைகள் அடுத்த வருட ஆரம்பகால 3 மாதங்கள் புனரமைப்பு பணிகளுக்காக மூடப்படவுள்ளது.

குறித்த விமான நிலையமானது எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 வரையான காலப்பகுதியில் விமான பிரதான ஓடுபாதைகளை மூடவுள்ளதாக விமான நிலைய மற்றும் விமான போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம்.எச்.சீ.நிமல்சிரி தெரிவித்தார். (இ-10)

## உரிமை கோரப்படாத சடலம்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பெயர், வயது , முகவரி தெரியாத பெண்ணின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 17 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தரால் கொண்டுவரப்பட்டு உரிமை கோராத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.எனவே அச் சடலத்தை உறவினர் அல்லது உரித்துடையோர் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் வி. சண்முகராஜா அறிவித்துள்ளார். (இ

## தொடர்சொற்பொழிவு

யாழ்.மானிப்பாய் - சாத்தாவத்தை அருள்மிகு ஞான வைரவர் ஆலய வருடாந்த ஆனி உத்தர பட்ஷ அலங்கார உற்சவ பெருவிழா கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. இவ் உற்சவ காலங்களில் தினமும் மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை இந்து மதம் காட்டும் ஆன்மீகம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவினை மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்நிகழ்த்திவருகின்றார். (இ

## மஹோற்சவம் 27 ஆம் திகதி

யாழ்ப்பாணம்-திருவண்ணைநகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய தேவி திவ்விய மஹோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 5ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ

## முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா

புத்தூர் கலைமதி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு -2016 எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலைமதி கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி சிவலேகா இலட்சுமணன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ

## சட்டவிரோத விளையாட்டில் ஈடுபட்ட ஆறு பேர் கைது!

திருகோணமலை, ஜெயந்திபுர காட்டுப்பகுதியில் சட்டவிரோத விளையாட்டில் (சூது) ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஆறுபேரை, நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக சூரியபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதோடு, கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் சூரியபுரப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## சுவர் இடிந்து விழுந்ததில் சிறுமி பலி

பயன்படுத்தப்படாத தேயிலை மடுவத்தின் சுவர் இடிந்து விழுந்ததில், 5 வயதுச் சிறுமி பலியான சம்பவமொன்று நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. நாவலப்பிட்டிய, கெட்டப்புலா தோட்டத்திலேயே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.40இற்கு இடம்பெற்றுள்ளது. வீட்டுக்கு முன்பாக விளையாடிக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. (இ-10)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2016–16.08.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



***பொன்னான எதிர்காலத்திற்கு கண்ணும் கருத்துமாக செயறபடும் துலாம் ராசி நேயர்களே!***

துர்முகி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் வாக்கு ஸ்தானாதிபதி செவ்வாய் வக்ர நிவர்த்தியாகிவிட்டார். எனவே கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். கொடுக்கல வாங்கல்கள் ஒழுங்காகும். அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் நடைபெறப் போகிறது.

வாங்கிய கடனையெல்லாம் தீர்ப்பீர்கள். குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சந்திரன், செவ்வாயோடு இணைந்து, சந்திர மங்கள யோகத்தை உருவாக்குவதால், குடும்பத்தில் மங்கள ஓசை கேட்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும். பொதுவாக ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது.

உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்புக் கிரகம். அது மட்டுமல்லாமல் உங்கள் ராசிக்கு சுக ஸ்தானம் மற்றும் 5ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்குபவர் சனிபகவான். எல்லாவற்றிற்கும் மேலாக ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இனி உங்களுக்குப் படிப்படியான முன்னேற்றங்கள் வரப்போகின்றது. இதுபோன்ற காலங்களில் சனிபகவானை வழிபடுவதோடு, திசாபுத்திக் கேற்ற தெய்வ வழிபாடுகளையும் தேர்ந்தெடுத்து மேற்கொள்வது நல்லது.

சனிக்கிழமை தோறும் விரதமிருந்து அனுமனை வழிபடுவதன் மூலம், துன்பங் களில் இருந்து விடுபடலாம். இந்த மாதம் உங்களுக்குப் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் கூட, விரயங்கள் கூடும். சுபவிரய ங்கள் அதிகரிக்கும். சூழ்நிலைக்கேற்ப உங களை மாற்றிக் கொள்வீர்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் நேரமிது.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஜூலை 24ஆம் திகதி சிம்ம ராசிக்குப் புதன் செல்கிறார். 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதி யானவர் புதன். விரயாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும்போது, விரயத்திற்கேற்ப லாபமும் வந்து கொண்டே இருக்கும். ஒரு காரியத்தை தொடங்க கையில் காசு, பணம் இல்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. காரியத் தைத் தொடங்கிவிட்டால், அதற்குரிய தொகை ஏதேனும் ஒரு வழியில் வந்து சேரும். கேட்கும் இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஓகஸ்ட் முதலாம் திகதி சுக்ரன் சிம்ம ராசிக்குச் செல்கிறார். பொதுவாக உங்கள் ராசிநாதன் மற்றும் 8ஆம் இடத்திற்கு அதிபதியான சுக்ரன், லாப ஸ்தானத்தில் சஞ்சரிகும் பொழுது இழப்புகளை ஈடுசெய்ய நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். உழைப்போடு அதிர்ஷ்டமும் சேர்ந்து உறுதுணையாக இருக்கும். சுக்ர பலம் நன்றாக இருக்கும் பொழுது வெளிநாட்டு யோகம்கூட ஒரு சிலருக்கு வரலாம். எண்ணிய காரியங்கள் எளிதில் நடைபெறும். பயணங்கள் அதிகரிக்கும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். முன்பு வாங்கிய சொத்துக்களை விற்பதன் மூலம் தன லாபம் கிடைக்கும்.




## ஆபரணங்கள் வாங்குவதில் அதிக கவனம் செலுத்தும் நேரம்!

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

ஓகஸ்ட் 2ஆம் திகதி கன்னி ராசிக்குள் குரு அடியெடுத்து வைக்கிறார். 6க்கு அதிபதி 12இல் சஞ்சரிக்கப் போவதால் எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் வந்து அலை மோதும். சகோதர ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியத் தொல்லை அகலும். வழக்குகள் சாதகமாகும். தாமதமாகிக் கொண்டு வந்த தனவரவு இப்பொழுது தாராளமாக வந்து சேரும். ஏமாற்றங்களைச் சந்தித்தவர்கள் கூட இப்பொழுது ஏற்றங்களைச் சந்திப்பர். உறவினர்கள் பகையை மறந்து, பாசம் காட்டுவர்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

முற்பாதியில் விரயமும், பிற் பாதியில் வருமானமும் வந்து சேரும் மாதம் இது. விலகிச் சென்ற உறவின ர்கள் விரும்பி வந்து சேருவர். குடும பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் மாறும். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அகலும். ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்க முடிவு செய்வீர்கள். வீடு மாற்றங்கள் விரும்பும் விதத்தில் அமையும். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோஷ தகவல் வந்து சேரலாம். இடம், வீடு வாங்குவதற்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நல்ல திருப்பங்களும் உருவாகும். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். வெள்ளி க்கிழமை தோறும் விரதமிருந்து அம்பிகையை வழிபட்டு வந்தால் விருப்பங்கள் நிறைவேறும்.



***வெற்றி ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக ராசி நேயர்களே!***

துன்முகி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் செவ்வாய் பலம் பெற்று உங்கள் ராசியிலேயே சஞ்சரி ப்பதால் வளர்ச்சி கூடும். வருமானம் இருமடங்காகும். தொழிலில் புதிய ஒப்பந் தங்கள் வந்து கொண்டே இருக்கும். எதிரிகள் விலகுவர். இதயம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும்.

ராசியில் உலாவரும் சந்திரனோடு செவ்வாய் இணைந்து மாதம் தொடங் குவதால், சந்திர மங்கள யோகம் செயற படப் போகின்றது. எனவே எந்தக் காரிய த்தைச் செய்தாலும் எளிதில் வெற்றி கிடைக்கும். இடம், பூமியால் எதிர்பாராத லாபம் கிடைக்கும். திருமண முயற்சி களில் வெற்றி கிடைக்கும்.

தொடக்கத்தில் பத்தில் குரு சஞ்சரிப் பதால், உத்தியோகத்தில் உள்ளவர்க ளுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். நீங்கள் எதிர்பார்த்த சலுகை யும் கிடைக்கும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட முயற்சிப்பீர்கள். 9ஆம் இடத்தில் சூரியன், புதன், சுக்ரன் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். புதசுக்ர யோகமும், புதன்ஆதித்ய யோகமும் செயற்படும் மாதம் இது. பூமி வியாபாரம் செய்பவர்களின் பொருளாதார நிலை உயரும்.

கல்வி மற்றும் கலைத்துறை சம்பந் தமாக எடுத்த முயற்சிகளிலஅனுகூலம் உண்டாகும். இருப்பினும் ஜென்மச் சனி யின் ஆதிக்கம் இருப்பதால், சனிக்கிழமை தோறும் விநாயகரையும், அனுமனையும் வழிபடுவது நல்லது. அம்பிகையையும் வழிபடுங்கள். இன்பங்கள் இல்லம் வந்து சேரும். மாதத் தொடக்கத்தில் சந்திர மங்கள யோகம் இருப்பதால் மங்கள ஓசை மனையில் கேட்கும். சுப நிகழ்ச்சிகள் நடத்தும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 8, 11 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியான புதன், ஜூலை 24ஆம் திகதி சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். லாபாதிபதி தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, லாபம் குவியும். ஒரு தொழில் செய்வோர், இரு தொழில் தொடங்க முன்வருவர். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். வங்கியில் வைப்பு நிதி உயரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் ஊர் மாற்றத்தை விரும்புவர். சிலர் விருப்ப ஓய்வு பெற்று, புதிய தொழில் தொடங்க முயற்சிப்பர். அரசியலில் இருப்பவர்களுக்கு பதவி தேடிவரும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஓகஸ்ட் முதலாம் திகதி சிம்ம ராசிக்குச் சுக்ரன் செல்கிறார். சப்தம விரயாதிபதியான சுக்ரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், இந்த மாதம் இனிய மாதமாகவே அமை யும். நூதனப் பொருட்களின் சேர்க்கையும், நுண்ணறிவாளர்களின் தொடர்பும் ஏற்ப டும். சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு கைகூடி வரும். வாழ்க்கைத் துணையின் உத்தி யோக நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்கள் மூலம் உதிரி வருமானங்களும் வந்து சேரும்.




## திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும்!

**லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் குரு!**

ஓகஸ்ட் 2ஆம் திகதி உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு லாப ஸ்தானத்தில் பவனி வரும்பொழுது, ஏராளமான லாபத்தை கொண்டு வந்து சேர்ப்பார். தாராளமாகச் செலவிடுவீர்கள். தனவரவைத் தங்கம், வெள்ளியாக மாற்றுவீர்கள். பிள்ளைகளின் கல் யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு எண்ணியபடி வந்து சேரும். இளைய சகோதரத்தின் ஒத்துழைப்பு இனிதே கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

இம்மாதம் விநாயகப் பெருமானை யும் ஆறுமுகப் பெருமானையும், நந்தியெம்பெருமானையும் தொட ர்ந்து வழிபட்டு வாருங்கள். தொழில் வளர்ச்சி மேலோங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இந்த மாதத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இரு க்கும் நண்பர்களின் எண்ணி க்கை அதிகரிக்கும். மாமன், மைத் துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். சேமிப்பு உயரும். கணவன் மனைவிக்குள் அந்நி யோன்னியம் பிறக்கும். அதன் விளைவாக புதிய திருப்பங்கள் ஏற்படலாம். உங்கள் பெயரிலேயே இடம் வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். உத்தி யோகத்தில் உள்ளவர்கள், மேலதி காரிகளிடம் சலுகைகளைப் பெற்று உன் னத உயர்வைக் காண்பார்கள். கல்வி மற்றும உத்தியோகம் தொடர்பாக வெளி நாட்டு யோகமும் வாய்க்கும். குரு வழி பாடு குதூகலம் வழங்கும். உடன் பிறப்புகளின் ஒத்துழைப்போடு உயர்வு காணும் மாதம் இது.

(தொடரும்)

நுகத்தடியில்லாத வண்டியையும் கடிவாளமில்லாத குதிரையையும் செலுத்த இயலாது.
– *தமிழ் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒழுக்கக்கோவையை தயாரியுங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் – சிங்கள மாணவர்களுக்கிடையே நடைபெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் நியாயபூர்வமான விசாரணை நடைபெற்றால் அன்றி ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்த முடியாது என்பது நம் தாழ்மையான கருத்து.

அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ள வருகின்ற மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் அமைவிடம் சார்ந்த பண்பாட்டுக் கோலங்களைப் பின்பற்ற வேண்டும் என்ற ஒரு இறுக்கமான ஒழுக்கக்கோவையில் உடன்பாடு செய்வதான ஏற்பாடுகளும் அவசியம்.

பல்கலைக்கழகம் என்றால் இன, மத, மொழி வேறுபாடின்றி மாணவர்கள் படிக்க வேண்டும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

அதேநேரம் அந்தப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம், அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் என்பன கருத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்பதும் நியாயமானதே.

அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது சைவப் பெருவள்ளல் சேர் பொன். இராமநாதன் அவர்களின் நிலக்காணிக்கையில் உருவானது.

சுவடே பரமேஸ்வரன் ஆலயமும் அமைந்துள்ள வளாகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இருப்பதால் அங்கு தமிழ்ப் பண்பாடே முற்றுமுழுதாக பின்பற்றப்பட வேண்டும்.

பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற மாணவர்கள் எப்படியும் விரிவுரைக்கு வரலாம், எந்த ஆடையும் அணியலாம், ஆண் மாணவர்கள் குடும்பி வைத்திருக்கலாம் என்றெல்லாம் நிலைமை இருப்பதால் பல்கலைக்கழகம் படுபாதளத்துக்குச் செல்லுமேயன்றி அதனால் அறிவுசார் உயர்வை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது.

ஆகையால், தமிழ் – சிங்கள மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலை அடிப்படையாகக் கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பீடாதிபதிகள், துணைத் தலைவர்கள், பேரவை உறுப்பினர்கள் என அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு நல்ல நோக்குடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒழுக்கக்கோவை ஒன்றை உருவாக்க வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுகின்ற மாணவர்கள் அனைவரும் இந்த ஒழுக்கக்கோவைக்கு உட்பட்டுச் செயற்பட வேண்டும் என்பது கட்டாய நியதியாக இருப்பதும் அவசியம்.

சிங்கள மாணவர்களைப் பொறுத்தவரை அவர்கள் க.பொ.த உயர்தரத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் காதல் என்ற வலைக்குள் நிச்சயம் வீழ்ந்துவிடுவர். ஒரு மாணவன் தன் காதலியை துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச் செல்வது; வீதியில் நடந்து செல்லும் போது ஒருவரை ஒருவர் தழுவிச் செல்வது எல்லாம் அவர்களிடையே சகயமானது. இது சிங்களப் பிரதேசங்களில் சர்வசாதாரணம். ஆனால் தமிழ் மக்கள் அவற்றை அருவருப்போடு பார்ப்பது வழமை.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற சிங்கள மாணவர்கள் தமது காதலிகளான சிங்கள மாணவிகளை துவிச்சக்கரவண்டியில் ஏற்றிச் செல்லும்போது, அதன் தாக்கம் தமிழ்ப் பண்பாட்டில் மிகப்பெரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது சர்வநிச்சயம்.

ஆகையால் தமிழ் பண்பாட்டுக்கு விரோதமான – இழுக்கான – தமிழ் மக்கள் விரும்பாத கலாசாரங்களை அடியோடு நிறுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். தனித்து ஆசிரியரை, அதிபரை உடனிருந்தவர்களைக் கைது செய்வதால் மட்டும் எங்கள் சமூகத்தைத் திருத்திவிட முடியாது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்கும் சிங்கள மாணவர்களின் காதல் கலாசாரம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். அதுவே நியாயமும் தர்மமுமாகும்.

## ஸ்ரீலங்கன் விமான சேவை மத்திய கிழக்கு, ஆசிய நாடுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவுள்ளது

இன்னும் மூன்று மாதங்களில் ஸ்ரீலங்கன் விமான சேவை மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட வுள்ளது.

இது தேசிய விமான சேவையின் இறுதிக் கட்டத்தை நெருங்கும் செயற்பாடு என விமான சேவை தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன. ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைத் தவிர ஐரோப்பாவின் பாரிஸ் நகர், ரோம், ஜேர்மனியின் ஃப்ராங் ஃபர்ட், பிரித்தானியாவின் லண்டன் நகர் ஆகியவற்றுக்கு நேரடிவிமான சேவையை முன்னெடுத்திருந்தது. கடந்த ஏப்ரல் மாதம் ரோம் நகருக்கான நேரடி விமான சேவை நிறுத்த ப்பட்டது.

ஒக்டோபர் மாதத்தில் இருந்து ஜேர்மன, ஃப்ராங் ஃபர்ட் நோக்கிய நேரடி விமான சேவையை நிறுத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. நவம்பர் மாதத்தில் இருந்து பிரான்ஸின் பாரிஸ் நகருக்கான விமான சேவையும் நிறுத்தப்படவுள்ளது. அதன் பின்னர் பிரித்தானியாவின் லண்டன் நகருக்கான நேரடி விமான சேவை மாத்திரமே மீத மாக இருக்கும். அதுவும் ஒரு நாளைக்கு ஒரு விமான சேவை மாத்திரமே இடம் பெறுகின்றது. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிற்கு ஊக்குவிப்பு அதிகாரி ஒருவரை நியமித்து அவருக்கு ஊதியம் வழங்கி வரும் பின்புலத்திலேயே ஐரோபபிய வலயத்திற்கான விமான சேவையை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதே வேளை, ஸ்ரீலங்கன் விமான சேவையில் இடம் பெற்ற குளறுபடிகள் தொடர்பில் வெளிப்படுத்த ஜே.சி. வெலியமுன அறிக்கையை அரசாங்கம் தற்போது கவனத்திற் கொள்ளாமல் செயற்படுவதாக ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (இ-10)

## ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

வடக்கு மாகாண பொதுச் சேவையின் வரி உத்தியோகத்தர் (மாகாண இறைவரித் திணைக்களம்) தரம்II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 2016.07.24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்காக விண் ணப்பித்த தகைமையுடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் ஏற்கெனவே அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பித்தமைக் கான சான்றுகளுடன் செய லாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு, வடக்கு மாகாணம் இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கோ அல்லது 021 2219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ 22.07.2016 திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அனுமதி அட்டைகள் விநி யோகிக்கப்பட்ட பின்னரே பரீட் சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர் எனவும் வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (இ

## வாகனம், தமிழ்ப் பொலிஸார் பருத்தித்துறையில் பற்றாக்குறை

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒரு ஜீப் வண்டி மட்டும் பாவனையில் உள்ளதாகவும் தமிழ்ப் பொலிஸார் பற்றாக்குறை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜீப் வண்டிகள், பேருந்துகள் என்பன பழுதடைந்தமையால் தற்போது ஒரு ஜீப் வண்டி மட்டுமேயுள்ளது. அதனையே சுற்று ரோந்து நடவடிக்கை, குற்றத்தடுப்பு பிரிவிற்கானபாவனைபோன்ற அனைத்து தேவைகளுக்கும் பயன்படுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஒரு தேவைக்கு அவ் ஜீப் வண்டி சென்றால் பிறிதொரு தேவைக்கு ஜீப் வண்டி இல்லாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஒரு பெண் பொலிஸார் உட்பட 8 தமிழ்ப் பொலிஸார் கடமையாற்றுகின்றனர்.

எனவே பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலையத்திற்கு குறைந்தது ஐந்து ஆண் தமிழ் பொலிஸார் தேவையாகவுள்ளதாகவும் மேலும் தமிழ்ப் பெண் பொலிஸாரும் நியமிக்கப்பட வேண்டிய தேவையுமுள்ளது.

ஆகவே தலைமைப்பீட பொலிஸ் நிலையமாக காணப்படும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக ஜீப் வண்டிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் மற்றும் தமிழ்ப் பொலிஸார் நியமிக்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-5-60)

## மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த நபர் கைதானார்

இந்தியாவிலிருந்து இலங்கையின் மலையகப் பகுதிககு சட்டவிரோதமாக கடத் தப்பட்ட ஒருதொகை போதைப் பொருளை பொகவந்தலாவை பொலிஸார்கைப்பற்றியுள்ளனர்.


குறித்த போதைப் பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். போதைப் பொருளை சந்தேக நபர் குறித்த பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை இன்று ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை **யாழ்.பிரதேசத்தில்** பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், உடுப்பிட்டி VC, நாச்சிமார் கோவிலடி, எள்ளங்குளம், இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதிதாசன், கம்பரமலை, பழைய பொலிஸ நிலையம், வல் வெட்டித்துறை, உடுப்பிட்டிவாசிகசாலை, வல்லை வீதி, பொக்கணை, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை, பாரதி வீதி, நாவற்குழி, மறவன் புலோ, தனங்கிளப்பு, கோகிலாக் கண்டி, கேரதீவு வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ-9)

## குருபூர்ணிமா வியாச ஜெயந்தி



ஆடி மாத பூரணை தினத்தை குருபூர்ணிமா தினம் என்றும் வேதங்களை நான்காக வகுத்துத் தந்தருளிய வியாச பகவானின் ஜெயந்தி தினம் என்றும் எமது சாஸ்திர நூல்களான பிரம்மசூத்திரம் மற்றும் உபநிடதங்களைக் கற்க ஆரம்பிக்கும் புனித தினமாகவும் மற்றும் குரு வணக்கத்திற்குரிய விசேட தினம் எனவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டாலும் இது குறித்து ஆழ்ந்த அதி முக்கியமான கருத்துள்ளது.

குருபூர்ணிமா என்பது ஒரு புனித தினத்தைக் குறிப்பதல்ல. ஒரு சம்பவமோ அல்லது சந்தர்ப்பமும் அல்ல. மற்றும் இது ஒரு சடங்கும் அல்ல.

இது சிஷ்யர்கள் குருவின் உள்ளார்ந்த நிலையுடன் தமது மனதை ஒத்திசைய (Tune in The Mind) வைக்க முயற்சிக்கும் ஓர் உணர்வு நிலையாகும்.

அதாவது அதியுயர் ஞானத்தின் பூரண தெளிவால் அக இருள் நீக்கப்பட்டு ஒளி ஏற்றப்படும் நிலை – பௌர்ணமி நிலவு.

எனவே நாமும் எமது மனங்களை எமது குரு தேவருடன் ஒத்திசையச்செய்வோம்.

குருதேவர் தபோவன் மகராஜ் அவர்களின் தாள் பணிந்து வியாச பகவானின் பாதங்களைப் பணிவோம்.

ஓம் குருவே நமஹ

**சின்மயா மிஷன்**
**யாழ்ப்பாணம்.**

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



இறக்கும் வரை பணிசெய். நான் உன்னுடன் உள்ளேன். நான் போன பின் எனது ஆவி உன்னுடன்உழைக்கும் இந்தவாழ்வுவரும் போகும். செல்வமும் புகழும் போக மும் சில நாட்களுக்கே. உலக ஆசையில் மூழ்கிய ஒரு புழுவாக இறந்தாலும் உண்மையைப் போதித்துக்கொண்டே செயல்புரியும் களத்தில் உயிரை விடுதல் நல்லது. மிக மிக நல்லது. முன் செல்.

பொறாமையையும் ஆணவத்தையும் விட்டுவிடு. பிறருக்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுவே.

இளைஞர்களே! இந்த இரக்கத்தையும் ஏழைகள், அறிவிலிகள் துன்புறுத்தப்பட்டவர்கள் இவர்களுக்காகப் பாடுபடுவதையும் உங்களுக்குக் காணிக்கையாக வழங்குகின்றேன். கோகுலத்து ஏழ்மையும் தாழ்மையும் வ ாய்ந்த இடையர்களுக்கு நண்பரானவரும் புலையனாகிய குகனைத் தழுவ என்றும் கூசாத வரும் தமது பத்தவதாரத்தில் செல்வந்தர்களின் வேண்டுகோளை விடுத்து ஒரு தாசியின் அழைப்பிற்கு இணங்கியவரும் அவளை உய்வித்தவரும் ஆகிய அப்பெருமான் முன்பு வீழ்ந்து வணங்குங்கள். இப்பெருவேள்வியைச் செய்யுங்கள். யாருக்காக அப்பெருமான் இடையிடையே அவதரிப்பானோ அனைவரையும் விட மேலாக எவரை நேசிப்பானோ அநத ஏழைகள், தாழ்ந்தவர், துன்புறுத்தப்பட்டவர் என்றும் மக்களுக்காகீ வாழ்வு முழுவதையும் பலியாக்குங்கள்.





தமிழ்த்திருநாள் ஆடிப்பிறப்பை முன்னிட்டு களுவுத்துறை விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிச் சுற்றுப்போட்டிஅண்மையில்நடைபெற்றது. இவ் இறுதிப் போட்டி யில் சங்கானை உதயதாரகை விளையாட்டுக்கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் சங்கானை உதயதா ரகை அணி வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது. அணித்தலைவர் றெபின் பிரதம விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெறுவதையும் அணி வீரர்கள் கிண்ணத்துடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## வயது வெறும் இலக்கமே

# விவேகானந்தா வீரர் கலைச்செல்வன் ரசிகர்களால் கௌரவிப்பு



புத்தூர் வளர்மதி சனசமூக நிலையம் 50 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகங்களுக்கிடையே நடத்திய கரப்பந்தாட்ட போட்டியில் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கெருடாவில் விவேகானந்தா அணியை எதிர்த்துப் போட்டியிட்ட நீர்வேலி காமாட்சி அணி 2:0(25:16, 25:23) என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் வயது வெறும் இலக்கமே என்பதை நிரூபித்த கெருடாவில் விவேகானந்தா அணி வீரர் கலைச்செல்வனின் ஆர்வத்தையும் திறமையையும் பாராட்டி ரசிகர்கள் சார்பாக மா.தனுசனால் கௌரவிக்கப்பட்டார். (கு)

# தீருவில் அணி வெற்றி



அமரர்களான கந்தசாமி குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்த சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் தீருவில் அணியை எதிர்த்து சைனிங்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தீருவில் 19.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்கள் பெற்றது. தீருவில் சார்பில் தாஸ் 31, பிரதீப் 20 ஓட்டங்கள் பெற்றனர். சைனிங்ஸ் சார்பில் யோயல் 3 விக்கெட்டுகள் கைப்பற்றினார். வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சைனி ங்ஸ் 17.5 ஓவரில் சகல விக்கெட்டு களையும் இழந்து 89 ஓட்டங்கள் பெற்றது. சைனிங்ஸ் சார்பில் யோயல் 18 ஓட்டங்கள் பெற்றார். தீருவில் சார்பில் மயூரன் 4 விக்கெட்டுகள் கைப்பற்றினார். தீருவில் அணி 27 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (கு)

## யாழின் கில்லாடி யார்?

# பாடும்மீன் - சென்.மேரிஸ் மின்னொளியில் இன்று பலப்பரீட்சை



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படுகின்ற யாழின் கில்லாடி யார்? உதைபந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் அரியாலை பயிற்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதிப்போட்டியில்குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)



# இன்றைய போட்டி

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் கில்லாறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இரணைமாநகர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்


# கயூரன் சிறப்பாட்டம் ஞான வைரவர் வெற்றி




மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்ட போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் மோதியது.

முதலில்துடுப்பெடுத்தாடியதொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் 57 ஓட்டங்கள் பெற்றது. பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய புத்தூர் ஞானவைரவர் வி.கழகம் 58 ஓட்டங்கள் பெற்று வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக ஞான வைரவர் வி.கழக வீரர் கயூரன் தெரிவு செய்யப்பட்டார். இவர் 21 ஓட்டங்கள் மற்றும் ஒரு விக்கெட்டும் கைப்பற்றி கொடுத்தார். (கு)









அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வீதியோட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டம் என்பன கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது...

# யாழ்.பல்கலை மாணவர்களின் மோதல் தேவையற்றதும் வருத்தத்துக்குரியதுமாகும்

## யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர்களின் மோதல் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது வருத்தத்தினையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களின் வரவேற்பு நிகழ்வில் மாணவர்கள் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற சம்பவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு இதனையிட்டு வருத்தத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றது.

இச்சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணை ஒன்று நேர்த்தியாக இடம்பெற்று குற்றமிழைத்த மாணவர்கள் தண்டனைக்குட்படுத்தப்படவேண்டிய அவசியத்தையும் ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது. இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம்பெறாத வகையில் தண்டனைகள் அமைய வேண்டும்.

எல்லா மாணவர்களும் ஏற்றத்தாழ்வுகளின்றியும் பாகுபாடின்றியும் சமமாக நடத்தப்படும் சூழலில் இவ்வாறான மோதல்கள் மாணவர்களிடையே இடம்பெறுவது தேவையற்றதும் வருத்தத்துக்குரியதுமாகும்.

இதேவேளை இச்சம்பவத்தினை ஒரு இன முரண்பாடாகக் காட்டி நன்மையடையும் முயற்சியும் இடம்பெறுவதை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கணடிக்கின்றது.

இவ்வாறான சுய அரசியல் இலாபம் தேடும் முயற்சிகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சகித்துக் கொள்ளப்பட முடியாதது.

யுத்தகாலச் சூழலிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்ந்து செயற்பட்டு வந்ததை நினைவுபடுத்திக்கொள்வதோடு மூடப்பட்ட பல்கலைக்கழகம் உடனடியாக மீள ஆரம்பிக்கப்படவேண்டும்என்பதனையும் ஆசிரியர் சங்கம் நிர்வாகத்திடம் கேட்டுக்கொள்கின்றது. அதேவேளை எதிர்காலத்தில் இவ்வாறாக ஒட்டுமொத்தப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் முடக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆசிரியர் சங்கம் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றது.

அத்துடன் பல்கலைக்கழகத்தின் தனித்துவம் அதனது மரபுரீதியான விழுமியங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் பாதிக்காமல் இருப்பதை நிர்வாகம் உறுதி செய்து கொள்ளவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது என ஆசிரியர் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (செ)

## புத்தளம் ஊடாக புதிய பேருந்து சேவை

(கொழும்பு)


இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்.சாலையும் ஹோமாகம சாலையும் இணைந்து வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான புதிய பேருந்து சேவை கடந்த 15ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் சேவை தினமும் வெள்ளவத்தையில் இருந்து இரவு 7.00 மணிக்கும், காங்கேசன்துறையிலிருந்து இரவு 8.30 மணிக்கும் புறப்பட்டு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இரவு 10.00 மணிக்கும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

இப் பேருந்து காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், புத்தளம், கொச்சிக்கடை கொட்டாஞ்சேனை ஊடாக வெள்ளவத்தை வரை சேவையில் ஈடுபட்டுவருகின்றது.

இச் சேவைக்கான ஆசன முற்பதிவுகளை யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலும், கொழும்பு, யாழ்ப்பாணம் பிரயாணிகளின் நன்மை கருதி வெள்ளவத்தை புகையிரத நிலையத்திலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது என இ.போ.ச. யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (செ)

## தமிழருக்குரிய தீர்வு...



இந்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளிட்ட சகல கல்வி நிறுவனங்களும் நல்லிணக்கத்தின் கேந்திர நிலையங்களாக மாற்றமடைதல் வேண்டுமெனவும் பாடசாலைகளின் பாடத்திட்டங்களில் நல்லிணக்கம் எனும் பாடம் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர்களின் மோதல் பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி, தான் இதனையிட்டு கவலையடைவதாகவும் அவ்வாறான மோதல்கள் ஏற்படாதவாறு எமது சகல கல்வி நிலையங்களையும் மீண்டும் சீர்செய்ய வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

சுமார் 8 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியின் கீழ் ஜேர்மன் அரசாங்கத்தின் உதவியில் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி இந்நாட்டு மக்கள் தன்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தமைக்கான காரணம், தான் முன்வைத்த கொள்கைப்பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் பூர்த்தி செய்வதற்காக எந்தவித தயக்கமும் இன்றி அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் வாழும் ஏனைய இனத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தால் மாத்திரமே சிங்கள பௌத்த மக்கள் இந்நாட்டில் நிம்மதியாக வாழ முடியுமெனத் தெரிவித்த ஜனாதிபதி,

வடக்கு மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளதென்பதை உண்மையாக ஏற்றுக்கொள்ளல் இப்பிரச்சினைகளை தீர்க்கும் முதலாவது படி முறையாகும் எனத் தெரிவித்தார்.

தெற்கில் பத்திரிகை மாநாடுகளை நடத்தி ஊடக வீரர்களாக மாற முயற்சிப்பவர்களை வடக்கு கிழக்கிற்கு வந்து அங்கு வாழும் மக்களின் பிரச்சினைகளை செவிமடுக்குமாறும் அவர்களது பிரச்சினைகளை புரிந்துகொள்வதற்கு முயற்சிக்குமாறும் தான் கேட்டுக்கொள்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புதியதொரு அரசியலமைப்பினை உருவாக்குவதன் மூலம் நாட்டை கூறுபோடுவதற்கு அன்றி ஒரே நாட்டில் இரண்டாகப்பிரிந்துள்ள மக்களை ஒன்றிணைந்து ஒரே நாட்டை கட்டியெழுப்புவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் புதிய அரசியல் தலைமைகள் உருவெடுத்தமையினை நினைவுகூரக் கூடியதாக உள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, அவ்வாறான அரசியல் சக்திகள் மீண்டும் உருவாக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஆகையால் பலத்த குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிப்பதன நோக்கம் மீண்டும் இலஞ்ச ஊழல்களை ஏற்படுத்துவதற்காக என்ற கேள்வி எழுவதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன், அமைச்சர் மகிந்த சமரசிங்க, வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, ஜேர்மன் தூதுவர் **Dr.Juergen Morhard** உள்ளிட்ட இராஜதந்திரிகள், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (செ-11)

## அம்புலன்ஸ் வண்டி அன்பளிப்பு

(கொழும்பு)

ஜப்பான் - இலங்கை நட்புறவு மன்றம் ரூபாய் 35 மில்லியன் பெறுமதியான அம்புலன்ஸ் வண்டியொன்றை இலங்கைக்கு அன்பளிப்புச் செய்துள்ளது. இந்த நிகழ்வு ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

ஜப்பான் - இலங்கை நட்புறவு மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி **Mr.Toji Eiichi** ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அம்புலன்ஸ் வண்டியைக் கையளித்ததைத் தொடர்ந்து, ஜனாதிபதி அதனை இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கிவைத்தார்.

மகாசங்கத்தினர், பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பதிரன, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, ஜப்பான் - இலங்கை நட்புறவு மன்றத்தின் தலைவர் லால் திலகரத்ன ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (செ-11)

## இலங்கையின் அபிவிருத்தி...

போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

தூரநோக்கற்ற அரசியல் மற்றும் பொருளாதாரத்திற்கு பதிலாக. நாட்டின் நலன் மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் நீண்டகால பொருளாதார வேலைத்திட்டத்திற்காக நாட்டுமக்கள் கடந்த வருடம் இரு சந்தர்ப்பங்களில் ஆணையை வழங்கியுள்ளனர.

இதனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இணக்க தேசிய அரசாங்கத்தின் மூலம் இலங்கையை பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக மேல் நோக்கி உயர்த்த புதிய திட்டங்களை செயற்படுத்தி வருகிறோம். இதற்காக சிங்கப்பூரின் உதவியை எதிர்பார்த்திருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப் பிட்டுள்ளார்.

சிங்கப்பூர் ஜனாதிபதி மாளிகையான இஸ்தானா மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பில் பேசிய சிங்கப்பூர் ஜனாதிபதி, இலங்கையின் தற்போதைய அரசாங்கம் பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு புதிய பயணத்தில் இணைந்து கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

புதிய பயணத்தின் மூலம் பொருளாதாரம், கைத்தொழில் துறைகளில் ஏற்படும் அபிவிருத்தி காரணமாக முழு சமூகமும் பாரிய முன்னேற்றத்தை அடையும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் சிங்கப்பூர் ஜனாதிபதி கோங் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இந்தியா, சிங்கப்பூருடன்...

சிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் ரெஃபல் மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தெற்காசியாவில் இருந்து புலம்பெயர்ந்தவர்களின் மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்புரையாற்றும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சீனாவுடன் மாத்திரம் செயற்படாது, இலங்கையில் முதலீடு செய்ய அனைத்து நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம்.

உலகில் வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் 50 நகரங்களில் கொழும்பு 20ஆவது இடத்தில் உள்ளது.

வரி கொள்கைகளை தளர்த்தி, இலங்கையில் முதலீடு செய்ய வர்த்தகர்களுக்கு சிறந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. மனித வள அபிவிருத்தி புள்ளியில் இலங்கை தெற்காசிய நாடுகளில் சிறந்த நாடாக விளங்குகிறது.

சிங்கப்பூர் மற்றும் டுபாய் நாடுகளுக்கு மத்தியில் காணப்படும் கேந்திர நிலையமாக இலங்கை அபிவிருத்தி செய்யப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## போராட்டம்...

திகதி முதியவர் ஒருவர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார் 3 மாத காலத்துக்குள் குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி தீர்வு காண்பதற்கு முயற்சி எடுப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உறுதிமொழியை வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அறிவித்ததை அடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக குழு ஒன்று நியமிக்கப்பட்டு கேப்பாப்பிலவு இராணுவ அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரிடம் கலந்துரையாடி முதலமைச்சரிடம் அறிக்கைய்யை சமர்ப்பித்திருந்தனர்.

குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் முதலமைச்சரால் கையளிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக தீர்க்கமான முடிவு எவையும் அறிவிக்காத காரணத்தால் நேற்றைய தினம் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பிக்கவிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற த.தே. கூட்டமைப்பின் கலந்துரையாடலில் இவ் விடயம் குறித்து கலந்துரையாடப்பட்ட போது த.தே கூட்டமைப்பின் தலைவர் குறித்த மக்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடி இந்த மாத இறுதிக்குள் வந்து நேரடியாக சந்திப்பதாகவும் நடவடிக்கையினை எடுப்பதாகவும் தெரிவித்து உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரியிருந்தார்.

அதனை அடுத்து முதலமைச்சர் சுகவீனமாக இருப்பதையிட்டும் மக்கள் பிரதிநிதிகளுக்கு கால அவகாசம் வழங்கி தற் காலிகமாக உண்ணாவிரதத்தை கைவிட்டுளளதாக அறிவித்துள்ளனர்.

இராணுவத்தால் கையகப்படுத்தி வைக்கப்பட்டுள்ள தமது நிலங்களை விடுவிக்கக் கோரி பல முறைகள் போராட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும் இன்னும் நிலங்கள் விடுவிக்கப்படவில்லை என்ற காரணத்தாலேயே இவ் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பிப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் கூறியிருநதமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## யாழ்.பல்கலை...

துக்கு விஜயம் செய்து பல்கலைக்கழக சமூகத்தினருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளவுள்ளதுடன் மாலை 2 மணியளவில் யாழ் மாவட்டச் செயலகத்தில் மதகுருமார் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி விஞ்ஞான பீடத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் தமிழ் சிங்கள மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலின் காரணமாக மாணவர்களின் பாதுகாப்பு கற்றல் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு வெளிமாவட்ட மாணவர்கள் விடுதிகளில் இருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## மருத்துவ பீடம்...

ப்படும் என யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

2011ஆம் ஆண்டு தொடக்கம் மூவின மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றார்கள். சிறு சிறு அசம்பாவிதங்கள் ஏற்படுவதுண்டு அதேபோன்ற நிகழ்வுதான் கடந்த 16ஆம் திகதியும் ஏற்பட்டது. இரு குழுக்களுக்கிடையே நடந்த அசம்பாவிதத்தை பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகள் ஆகியோரின் அனுசரணையுடன் குறித்த சம்பவத்தை ஒரு மணித்தியாலத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக்கூடியதாக இருந்தது.

இருப்பினும் மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் உடமைகளின் பாதுகாப்பு கருதியும் நாளை (இன்று) விடுமுறை என்ற காரணத்தினால் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்க தீர்மானித்திருந்தோம்.

குறித்த சம்பவம் தொடர்பாக மாணவர் ஒன்றிய தலைவர்கள் மற்றும் மாணவ ஆலோசகர்களுடன் கலந்துரையாடியிருந்தேன். இனிவரும் காலங்களில் இது போன்ற ஒரு சம்பவம் நடைபெறாமல் தாம் பார்த்து கொள்வதாகவும் தமது ஒத்துழைப்பு எப்போதும் இருக்கும் எனவும் தெரிவித்தனர். இதேவேளை பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்களுடனும் பீடாதிபதிகள் விரிவுரையாளர்களுடனும் இதைப்பற்றி கலந்துரையாடினோம். மிக விரைவில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும் என தெரிவித்துள்ளார்கள்.

எல்லா இன மாணவர்களும் இதுவரை காலமும் ஒன்றாக இருந்து சுமுகமாக கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டு பட்டங்களை பெற்றுச் சென்றுள்ளார்கள். அவ்வாறான ஒரு நிலை தொடர்ந்தும் இருக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

உடனடியாக நாம் ஒரு விசாரணைக் குழுவை அமைத்து இந்த மோதலை தூண்டியவர்களை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம்.

வெளி மாவட்டங்களில் இருந்து வந்து கல்வி பயிலும் மாணவர்களிடையே இங்கு கல்வி பயில்வதற்க்கு ஏதுவான சூழ்நிலை முன்பு போல உள்ளது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய கடமை எமக்கு உள்ளது.

இங்கு இருப்பவர்களுக்கு தெரியும் இது சாதாரண பிரச்சினை என்று. ஆனால் வெளி மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு சந்தேகங்கள் ஏற்படலாம். அவற்றை தீர்ப்பதற்கு விஞ்ஞான பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்களும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்கள் இதற்காக ஒன்று கூடி கலந்துரையாடியிருந்தோம். அக் கலந்துரையாடலில் நாளை 20ஆம் திகதி மருத்துவ பீட மாணவர்களுக்கும் சித்த மருத்துவ அலகு மாணவர்களுக்கும் மருத்துவ பயிற்சியை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அது தவிர மருத்துவ பீட விவசாய பீட பரீட்சைகளையும் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளோம் அதன் பின்னர் படிப்படியாக அனைத்து பீட கல்வி நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவுள்ளோம். அத்துடன் உயர் பட்ட படிப்பு பீடத்தில் நடை பெறும விரிவுரைகளும் தொடர்ந்து நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பஷில் நேற்று...

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு நேற்று திங்கட்கிழமை சென்றிருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து பசில் ராஜபக்ஷவை கடுவளை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது, அவரை எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனைவிட ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது திவிநெகும திணைக்கள த்தின் பயனாளிகளுக்கு 33 மில்லியன் ரூபா பெறுமதியான கூரைத்தகடுகள் விநியோகிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சுவிஸ்...

மே 13ஆம் திகதி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட குறித்த வழக்கில் ஏற்கெனவே பன்னிரெண்டு சந்தேக நபரகள் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு உள்ளனர்.

இதைவிட வித்தியாவின் தாயாரை மிரட்டியதாக குற்றச்சாட்டில் சுவிஸ் குமார் அல்லது பிரகாஷ் எனப்படும் மகாலிங்கம் சசிக்குமார் தாயாரான தவம் எனும் மகாலிங்கம் தவநிதி, மற்றுமொருவரான சிவதேவன் துஷாந்தன் என்பவரின் தாயாரான சிவதேவன் செல்வராணி ஆகிய இருவரும், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் விளக்கமறியலில் இருந்தவர்களில் ஒருவரான சுவிஸ்குமாருடைய தாயாரான தவம் எனும் மகாலிங்கம் தவநிதி சுகவீனமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றுமாலை மரணம் அடைந்து உள்ளார். (செ-4)

## மாணவர்களிடை...

சேர்ந்த இனவாத தரப்புக்கள் இந்தப் பிரச்சினையை இனவாத அடிப்படையில் பிரசாரம் செய்தால் அது பாரதூரமான பிரச்சினையாக மாறும் என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## இறக்குமதி வரி...

கிராமுக்கு விதிக்கப்பட்டிருந்த 30 ரூபாய் இறக்குமதி வரி நேற்று நள்ளிரவிலிருந்து 29 ரூபாய் 75 சதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் புதிய வரித்திருத்தத்திற்கமைய சீனி இறக்குமதி வரியாக 25 சதம் அறவிடப்படவுள்ளது. (செ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

பல்கலைக்கழகம் செல்ல முன்னரே வேலைவாய்ப்பு
(வேலை செய்து கொண்டே பட்டக்கல்வியினை பூர்த்தி செய்யலாம்)
பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களுக்கு
வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வி
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE ▶ DIPLOMA ▶ DEGREE
With FREE English Course
2016 A/L மாணவர்கள் JULY 30 ற்குள் பதிவினை மேற்கொண்டு 50% கட்டணக் கழிவினை வெல்லுங்கள்!
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY Business · Hospitality · English SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

பாரஊர்தி சாரதிகள் தேவை
10 வீல் டிப்பர், தட்டு லொறி செலுத்தக்கூடிய சாரதிகள் தேவை. உள்ளூர், வெளியூர் சேவையில் ஈடுபடக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகட்கு-0766037397
K.K.S, வீதி, கொக்குவில்.
(5267)

காணி விற்பனைக்கு
சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை பிரதான வீதியில் கடைத்தொகுதியுடன் கூடிய 12 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0769690597
(5272)

காணி விற்பனைக்கு
■கொக்குவில் தலையாழி சபாபதி வீதியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(செல்வமகால் திருமண மண்டபம் முன்னால் உள்ள வீதியில்)
■பலாலி வீதி, திருநெல்வேலியில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
0771671174, 0777286061
(5270)


16ஆம் ஆண்டு நினைவலைகள்

"நீத்தல், வாழ்வின் முடிவு அல்ல; புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்."



அமரர்

திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26.06.1941 மறைவு: 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. —குடும்பத்தினர்—


உள்நாடு, வெளிநாடுகளுக்கான
தபால்கள் பொதிகள் சேவை
220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
மிகக்குறைந்த கட்டணம்
அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள், கருவாடு, பழவகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள் என்பவற்றை அனுப்பிடலாம் (நிபந்தனைக்குட்பட்டது)
11kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgக்கான கட்டணம்
UK-600/=, Germany 650/=, France 700/=, Swiss 800/=, Australia 900/=

திருமுருகன் கொம் நெற்
271A, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7835
கிளைகள்:
46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
18, பிரதான வீதி நெல்லியடி.
பிரதான வீதி பருத்தித்துறை. பிரதான வீதி சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)
(5273)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.